விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 103 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 25, செவ்வாய்க்கிழமை 08.03.2016

## புலனாய்வுத்துறை மறுசீரமைப்புக்கு பிரதமர் உத்தரவு

கொழும்பு, மார்ச் 8
நாடளாவிய ரீதியில், ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் உள்ள புலனாய்வுத் துறைப் பிரிவை மறுசீரமைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.
நாட்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளதை அடுத்தே, அதனைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த உத்தரவைப் பிரதமர் பிறப்பித்துள்ளார். பக். 25

## எம் உறவுகளை சிறையில் சாகடிக்காதீர்

யாழ்ப்பாணம், மார்ச் 8
அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கியதை நிரூபித்தால் எனது பிள்ளையைச் சுடுங்கள். அவனோர் அப்பாவி மாணவன். அதனால் அவனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு தாயார் ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.
(முழுமையான செய்தி 7 ஆம் பக்கத்தில்)

# முல்லையில் இராணுவம் சிறப்புப் போர்ப் பயிற்சி

## இரகசியமாக நடத்துகிறது

முல்லைத்தீவு, மார்ச் 8
இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிவடைந்து 7 ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தின் பெருமெடுப்பிலான படைப் பயிற்சி ஒன்று மிக இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
ஜெனிவா, ஐ.நா. மனித உரிமைகள் சபையும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் வடக்கில் இராணுவக் குறைப்புக்கு வலியுறுத்திவரும் நிலையில், போர்க் காலத்தில் முன்னெடுக்கப்பட்டமை பக். 23



## கட்டுப்பாட்டை இழந்தது 'பல்சர்' இரு இளைஞர்கள் பரிதாபச் சாவு

### தெல்லிப்பழையில் நேற்றுக் கோரவிபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 8
தெல்லிப்பழைச் சந்திக்கு அண்மையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கோர விபத்தொன்றில் இளைஞர்கள் இருவர் பரிதாபமாகச் சாவடைந்துள்ளனர்.
வீதியில் பயணித்துக்கொண்டிருந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியோரத்தில் இருந்த மின் கம்பம் மற்றும் சிமெந்துத் தூண் ஆகியவற்றுடன் மோதி பக். 23



## அரசியல் கைதிகள் குறித்து சபையில் இன்று விவாதம்

கொழும்பு, மார்ச் 8
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் மற்றும் காணாமற்போனோர் தொடர்பான விசாரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று விவாதம் நடத்தப்படவுள்ளது. இதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக். 25

## பெண்களின் பாதுகாப்புக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்

### மகளிர் தினச் செய்தியில் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், மார்ச் 8
உலகில் முதலாவது பெண் பிரதமர் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பெண் ஜனாதிபதியைப் பெற்ற நாடு இலங்கை என்றபோதிலும், இந்த நாட்டின் பெண்களும் பெண் பிள்ளைகளும் இன்னும் அவர்களது பக். 25



## பாதாள உலகக் கோஷ்டியை ஒழிக்க இராணுவம் திட்டம்

கொழும்பு, மார்ச் 8
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த உத்தரவுக்கமைய பாதாள உலகக் கோஷ்டிகளை ஒழிப்பதற்கான திட்டம் வகுக்கும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார்.
இருப்பினும், இந்தத் திட்டம் பக். 23






வடக்கை விட்டுப் போறதெண்டுறது பொய்ப் பேச்சு பாருங்கோ...

## காணாமற்போனோர் விசாரணைக்காக வன்னிக்கு வருகின்றது ஆணைக்குழு

### மார்ச் 25 முதல் 31 வரை அமர்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையில் வன்னிப் பிராந்தியத்தில் பக். 23

## அரச நிகழ்வில் மீண்டும் ஜனாதிபதியாகிய மகிந்த

கொழும்பு, மார்ச் 8
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய விவசாய அமைச்சின் செயலாளர் பீ.விஜேரத்ன, தவறுதலாக 'இலங்கை பக். 23

## கடற்படைக்குக் காணி பறிக்கும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 8
கீரிமலை - சேந்தாங்குளம் பகுதியில் தேவாலயத்துக்குச் சொந்தமான 4 பரப்புக் காணியைக் கடற்படையினரின் தேவைக்காகச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.
அத்துடன், சுழிபுரம் - திருவடிநிலையில் 20 ஏக்கர் காணியைச் சுவீகரிக்கும் நடவடிக்கை நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த காணி பக். 23



HND QUANTITY SURVEYING
Register for March intake
ICBT CAMPUS JAFFNA
www.icbt.lk
580, Hospital Rd., Jaffna | Tel: 0214 777 888
0769 289 784
0769 289 810

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர்ப் பகுதியில் வெடிமருந்து மீட்பு

யாழ்ப்பாணம். மார்ச் 8
யாழ்.குருநகர்ப் பகுதியில் ஆயிரத்து 750 கிராம் ரி.என்.ரி. ரக வெடி மருந்து நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

குருநகர்ப் பகுதியில் உள்ள கடற்கரையில் மிகவும் சூட்சுமமான முறையில் பொலித்தீன் பை ஒன்றில் சுற்றி மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், வெடிமருந்து மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இது தொடர்பில் எவரும்கைதுசெய்யப்படவில்லைஎன்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வெடிமருந்து சட்ட விரோத மீன்பிடிமுறைமைக்குபயன்படுத்தும் நோக்கிலேயே மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட வெடிமருந்தை அரச இராசாயனப்பகுப்பாய்வுத்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-ஜ-4-101-107)

# ‘ஓயாத அலைகள்’ தாக்குதல் சந்தேக நபருக்கு புதன் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8
ஆனையிறவு இராணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் ஓயாத அலைகள் என்ற பெயரில் தாக்குதல்நடத்தியசம்பவத்துடன் தொடர்புடையவர் என்றும், புலனாய்வாளர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒருவர் மீதான வழக்கின் தீர்ப்பு நாளை மறுதினம் வழங்கப்படவுள்ளது.

2000 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் மூலம், ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கிய குற்றச்சாட்டிலும், விடுதலைப்புலிகள் புலனாய்வு பிரிவின் உறுப்பினர் என சந்தேகிக்கப்பட்டும் ஒருவருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

யாழ்.மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் வழக்கில் சட்டத்தரணிகளின் தொகுப்புரையும் முடிவுற்று, நாளை மறுதினம் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.
(ற-ஜ-4)

# வாழ்வாதார உதவி வழங்கல்

முல்லைத்தீவு, மார்ச் 8
நோர்வே வாழ் உறவுகளால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு லட்சம் பெறுமதியிலான வாழ்வாதார உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கில் து. ரவிகரனால் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்திட்டதின் ஊடாக இந்த வாழ்வாதார ஊக்குவிப்பு முன்னெடுப்பானது அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத் துக்குட்பட்ட தேவிபுரம் மற்றும் கைவேலியில் உள்ள ஒன்பது குடும்பங்களும், முல்லைத்தீவைச்சேர்ந்த ஒரு குடும்பமுமாக 10 குடும்பங்களுக்கு இந்த வாழ்வாதார உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் தேவிபுரம் மற்றும் விசுவமடு கிராம அலுவலர்களும் கலந்துகொண்டிருந்தனர்.



பாடசாலை மாணவர்களுக்கான சைக்கிள்கள் மற்றும் வாழ்வாதார ஊக்குவிப்புக் கருவிகளாக நீர் அழுத்த விசைப்பொறி, அரைப்பான், வாழைக் கன்றுகள், நீர்த்தாங்கி மற்றும் கடை விரிவாக்கலுக்கான நுகர்வுப்பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.
(ற-ஜ-21)

# புதிதாகத் தெரிவாகும் மாநகர சபையே வள்ளுவரை உரிய இடத்தில் அமர்த்தும்

## யாழ்.மாநகரசபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8
சத்திரத் சந்தியில் இருந்து அகற்றப்பட்ட வள்ளுவர் சிலையை நகரின் எந்த வீதியில் நிரந்தரமாக நிறுவுவது என்ற தீர்மானம், அடுத்ததாகத் தெரிவு செய்யப்படவுள்ள மாநகர சபையாலே நிறைவேற்றப்படும். தற்போது வள்ளுவர் சிலை யாழ். பொது நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது - இவ்வாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வள்ளுவர் சிலை தற்போது யாழ். நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், சிலையை நிறுவுவதற்கான பீடமும் அமைக்கப்பட்டு வருகின்றது.

சிலையை நிறுவதற்கு நகரில் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப் பகுதி ஒன்று நிரந்தரமாகத் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். இதற்கான இடத்தைத் தெரிவு செய்யும் செயற்பாடு புதிதாக தெரிவு செய்யப்படவுள்ள மாநகர சபையினரே தீர்மானிப்பதுடன், சிலையையும் நிறுவுவார்கள்.

சிலையை நிறுவுவதற்கான பீடம் அமைக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீதி எது என்பது தெரிவு செய்யப்பட்டு வள்ளுவர் சிலை புதிதாக நிறுவப்படும் என்றார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். நகரின் சத்திரச் சந்தியில் இருந்து அகற்றப்பட்ட புராதன வள்ளுவர் சிலைக்கு என்ன நடந்தது என்று சமூக ஆர்வலர்கள் வினா எழுப்பியுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வீதி அகலிப்பு மற்றும் சத்திரச் சந்தியில் வீதி சமிக்ஞை விளக்குகள் அமைப்பதற்காகவும் இந்த வள்ளுவர் சிலை இரவோடு இரவாக அகற்றப்பட்டது. எனினும், அகற்றப்பட்ட இந்த வள்ளுவர் சிலை நகரின் முற்றவெளியில் வைக்கப்படும் என்று அப்போதைய மாநகராட்சி மன்றத்தினரால் தெரிவிக்கப்பட்டது. எனினும் இந்தச் சிலை அகற்றப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்துள்ள நிலையில், நகரின் எந்தப் பகுதியிலும் குறித்த வள்ளுவர் சிலை வைக்கப்படவில்லை. தற்போது வள்ளுவர் சிலை எங்கே கொண்டு செல்லப்பட்டது? இப்போது எங்கே வைக்கப்பட்டுள்ளது? என்று பல கேள்விகளும் மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளன.

இது தொடர்பில் யாழ் மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசனிடம் கடந்த ஆண்டு இறுதியில் தொடர்பு கொண்டபோது, இந்த வள்ளுவர் சிலை குறித்த விவகாரம் எனக்கு சரியாகத் தெரியாது. வள்ளுவர் சிலையை நகரின் பிறிதொரு இடத்தில் வைப்பதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்ததாக அறிந்தேன். எனினும் வள்ளுவர் சிலை விவகாரத்துக்கு விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போது வள்ளுவர் சிலையை மீள் நிறுவுகை செய்வதற்கான செயற்பாடுகள் அடுத்ததாகத் தெரிவு செய்யப்படும் மாநகர சபையினரால் மேற்கொள்ளப்பட்டும் என்று தெரிவித்தார்.
(ற-ஜ-ரி5)

# அதிகார சபை வழங்கிய சிமெந்தை பயன்படுத்தாதோர்மீது நடவடிக்கை

கிளிநொச்சி வீடமைப்பு அதிகார சபையால் மக்களின் வீட்டுத் தேவைக்காக வழங்கப்பட்ட சிமெந்துப் பைக்கெற்றுக்களைக் கொண்டு இதுவரை வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்யாதுள்ளவர்கள் மீது சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என கிளி நொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் நொயல் ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித்பிரேமதாசவின் விசேட திட்டமாகிய ஒரு குடும்பத்துக்கு 10 பைக்கெற்றுக்கள் சிமெந்து என்ற அடிப்படையில் அமைச்சால் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், அந்தச் சிமெந்துப் பைக்கெற்றுக்களைப் பயன்படுத் தாதவர்கள் அதனை உடனடியாக பயன்படுத்துமாறும் தவறான முறையில் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் தெரிவித்தார்.

அத்தோடு கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 130 பயனாளிகளுக்கு குறித்த சிமெந்துப் பைக்கெற்றுக்கள் வழங்கப்பட்டன. கடந்த வருடம் குறித்த சிமெந்துப்பைக்கெற்றுக்களைப் பெற்றவர்கள் அதற்கான வேலையை முடிக்கத் தவறும் பட்சத்தில் இந்த வருடம் வழங்கப்படும் திட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இந்த வருடம் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு 3 கட்டங்களாக சிமெந்துப் பைக்கெற்றுக்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-21,ரி3)

# தேசிய நலன்சார் தீர்மானத்தை சரியான நேரத்தில் எடுப்பேன்

## மைத்திரிபால பெருமிதம்

கொழும்பு, மார்ச் 8
நாட்டின் தேசிய நலனுக்காக எடுக்கவேண்டிய தீர்மானத்தை உரியநேரத்தில்பிழையின்றிஎடுப்பதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நச்சுத் தன்மை அற்ற தேசம் தேசிய வேலைத்திட்ட நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்குப் பொருத்தமானவற்றைப் பெற்றுக் கொடுத்தலே, நாட்டையும் நாட்டு மக்களையும் நேசிக்கும் ஆட்சியாளர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் ஆகியோரின் கடமையாகும். நச்சுத் தன்மை அற்ற தேசம் தேசிய நிகழ்ச்சித் திட்டம் அவ்வாறானதொரு திருப்பு முனையாக உள்ளது. நாட்டு மக்களின் ஆரோக்கியம் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் என்பவற்றை மேம்படுத்தலே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

இதுவரைஆட்சிசெய்தஅனைத்து அரசுகளும் விவசாயத்தையும், விவசாயிகளையும் கட்டியெழுப்புவதற்குப் பல்வேறு நிகழ்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தின. ஆனால் விவசாயிகளைக் கடன் சுமையிலிருந்து மீட்டெடுக்க முடியாமல் போயிருந்தன. விவசாயிகளின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல் மற்றும் சிறந்த விவசாயக் கொள்கையை அறிமுகப்படுத்தல் என்பன புதிய அரசின் நோக்கமாக உள்ளது.

நச்சுத் தன்மை அற்ற தேசம் நிகழ்சித் திட்டத்தின் தலைமைத்



துவம், பிரதேச தலைவர்கள் மற்றும் கமநலசேவைகள் திணைக்களம் ஆகியவற்றால் பொறுப்பேற்கப்படல் வேண்டும். நாட்டை நேசிக்கின்ற மற்றும் தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கின்ற அனைவரும் அரசியல் கருத்து வேற்றுமைகள் இன்றி இந்தத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் ஒன்றுபடவேண்டும் என்றார்.

இதேவேளை, நச்சுத் தன்மை அற்ற தேசமாக, பசுமை நிறைந்த நாடாக மாற்றி அனைவருக்கும் நச்சுத் தன்மையற்ற உணவுகளை வழங்குவதற்கான அரசின் கொள்கைக்கு அமைவாக இந்தத் திட்டம் மூன்று ஆண்டுத்திட்டமாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. செய்மதித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிர் நிலங்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் புதிய வேலைத் திட்டம் இதன்போது ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(அ-5)

# தென்னைமரம் மீதேறி விவசாயி போராட்டம்

கொழும்பு, மார்ச் 8
உரமானியத்துக்காக தென்னை மரம்மீதேறி விவசாயியொருவர் (வயது - 48) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தெஹஅத்தகண்டி - நாகஸ்தலாவ பகுதியில் நேற்று இடம் பெற்றுள்ளது.

அரசால் வழங்கப்பட்டுள்ள உரமானிய அடையாள அட்டையை நாகஸ்தலாவ விவசாய அமைப்பின் தலைவர் தனக்கு இன்னும் வழங்கவில்லை எனச் சுட்டிக்காட்டியே நேற்றுக் காலை 5 மணி முதல் இவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நாகஸ்தலாவ பகுதி விவசாயத் தலைவருக்கு உரித்தான இடமொன்றிலுள்ள தென்னை மரத்திலேறியே குறித்த விவசாயி இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர், மாலை வேளையில் மரத்தைவிட்டுக் கீழ் இறங்கினார் என்றும் தெரிய வருகின்றது.
(து-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைதீவு சந்தைக் கேள்வி கோரலை குழப்புவோரின் மீது சட்ட நடவடிக்கை

## வலி.தென்மேற்குப் பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

பிரதேச சபையின் வருமானத்தை சீர்குலைக்கும் வகையில், மீன் சந்தைக் கேள்வி கோரல் செயற்பாட்டுக்கு இடையூறாக செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வலி.தென் மேற்குப் பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வருடக் குத்தகைக்காக பல முறை அழைத்த போதும் காக்கைதீவு இறங்குதுறை மீன்சந்தையை எவரும் பொறுப்பேற்கவில்லை.

பின்னர் தாமாகவே இரு தரப்பினர் முன் வந்தனர். அவர்களில் அதிக ஏலம் கேட்டவருக்கு மீன் சந்தையை வழங்கத் தீர்மானித்தோம்.

தற்போது இவர் எதிர்த்தரப்பால் தனக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனவே பாதுகாப்புக்கான உத்தரவாதம் வழங்கினால் மட்டும் காக்கைதீவு மீன் சந்தையைக் குத்தகைக்கு எடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

சாவக்கட்டு கிராமிய கடற்றொழில் அமைப்பு, இதற்கு இடையூறாக நிற்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் இரண்டு மீன் வியாபாரப் பகுதிகள் உள்ளன. ஒன்று வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது மீன் ஏலம் விடப்படும் கட்டடம். மற்றையது எம்முடைய சந்தைக் கட்டடத் தொகுதி. இதற்கான கேள்வி விலையே கோரப்பட் டுள்ளது.

இவர்கள் மீன் ஏலம் விடும் பகுதியில் வைத்தே வியாபாரம் செய்கின்றனர். அந்தக் கட்டடத்தை அபிவிருத்தி செய்து தருமாறு கோருகின்றனர். குறித்த கட்டடம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது என்பதால் எம்மால் அபிவிருத்தி செய்ய முடியவில்லை. வேண்டும் எனில் வேறுகட்டடத் தொகுதியை எம்மால் ஏற்பாடு செய்தும் கொடுக்க முடியும்.

இந்த நிலையில் கூடிய விலை கோரிய சாவக்கட்டு கிராமிய கடற்றொழில் அமைப்புக்குச் சந்தையைக் குத்தகைக்கு வழங்க முன் வந்துள்ளோம். இது சம்பந்தமாக மேற்படி அமைப்புக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதுடன், சம்பந்தப்பட்ட ஆவணங்களில் கையெழுத்தை வைத்துச் சந்தையைப் பொறுப்பேற்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் தலைவர், பாதுகாப்புக்கான உத்தரவை வழங்கினால் மட்டும் சந்தையைக் குத்தகைக்கு எடுக்க முடியுமென்றும், இதற்கு இடையூறாக இருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறி வருகின்றார். இது போன்ற எதிர்ச்செயற்பாடுகள் இருப்பதாக நேரடியாகக் கண்டு கொள்ள முடிய வில்லை. எனினும் பிரதேச சபை யின் நன்மை கருதி சட்ட நடவடிக்கைகள் ஊடாக குறித்த விடயத்தை முன்னெடுப்பதற்கு திட்மிட்டு வருகின்றோம் என்றார். (ற-ஜ-ரி5,115)

# இரு மாதங்களில் நாற்பது பேருக்கு எயிட்ஸ் தொற்று

கொழும்பு, மார்ச் 8

இவ்வருடத்தின் கடந்த இரு மாதகாலத்துக்குள் சுமார் 40 பேருக்கு எயிட்ஸ் தொற்று பரவியுள்ளது என்று தேசிய பாலியல் மற்றும் எயிட்ஸ் பிரசார அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறு எயிட்ஸ் தொற்றுக்குள்ளானவர்கள் 25-49 வயதுக்கும் இடைப்பட்டவர்களே அதிகமாகவுள்ளனர் என்று தேசிய பாலியல் மற்றும் எயிட்ஸ் பிரசார அமைப்பின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்தார். (து-சி)

வேலையாள் தேவை
எமது ஸ்தாபனத்துக்கு கணினி அறிவுடைய வேலையாள் தேவை.
வயது 18- 25 வரை
கிங்ஸ் எலெக்றோனிக்ஸ்
11A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3857

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1243
சீட்டிழுப்பு திகதி 2016.03.07
வெற்றி இலக்கங்கள்
03 31 35 40 O
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,263,300/=

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 471
சீட்டிழுப்பு திகதி 2016.03.07
வெற்றி இலக்கங்கள்
03 24 54 69 A
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 46,281,940/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2748 திகதி 07.03.2016
26 28 45 48 W 27
ரூ. 16,282,450/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு முடிவுகள்
மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்
முதலாம் பரிசு 2824 — 3ஆம் பரிசு 2150
2ஆம் பரிசு 1433 — 4ஆம் பரிசு 3545
5ஆம் பரிசு 2809
5 ஆறுதல் பரிசு இலக்கம் 3494, 4099, 1639, 2115, 1510
பிரிசில்களை மன்றத்தில் பெற்றுக்கொள்ளவும்

JAFFNA CENTRAL COLLEGE BICENTENNIAL 1816-2016
யாழ் மத்திய கல்லூரி
பழைய மாணவர் வழங்கும்
சென்றலின் இன்னிசை தென்றல்

சுபஹான்
சௌந்தர்யா

ஸ்ரீனிவாஸ்
நுழைவுக் கட்டணம்
5000/-
2000/-
1000/-

சோனியா
மார்ச் 13, 2016
ஞாயிறு மாலை 6.30
யாழ் வீரசிங்கம் மண்டபம்
ரிக்கெட் பெற்றுக்கொள்ளும் இடங்கள்
1. றூபன் போன் சொப்
2. நீலாம்பரி உணவகம்
3. K.S.M. தொலைத்தொடர்பகம், 146,புதிய சந்தை, யாழ்ப்பாணம்.
4. Telesoon Phone Shop No.32, K.K.S. Rd, Chunnakam. 021 224 1552
5. சக்திவேல் காட்வெயார் கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், இனுவில். 077 410 9071
6. Fine Selection K.K.S. Rd, Chunnakam. 077 868 9375
7. Kugan Copyist 212B, Sir Pon Ramanathan Rd, (front of Jaffna University) Thirunelvely. 077 626 2016

விளம்பர அனுசரணை
ஆசன முன்பதிவு மேலதிக விவரங்களுக்கு
தமிழ் அழகன்
Tel:+94 759 752 244
மோகன்குமார்
Tel:+94 776 328 653

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் மருத்துவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 8

நாய் குறுக்கே ஓடியதால் நிலை தடுமாறிமோட்டார் சைக்கிளிலிருந்து விழுந்து காயமடைந்த மருத்துவர் ஒருவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார். சுன்னாகத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் உடுவில் கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் குலேந்திரசிங்கம் (வயது-70) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 24 ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது. இரவு 9 மணியள வில் தமது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது,வீதியின் குறுக்கே நாய் ஓடியுள்ளது. அதனால் மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதுண்டது. சம்பவ இடத்திலேயே நாய் உயிரிழந்தது. இந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மருத்துவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். நீதிமன்ற பணிப்புக்கமைய திடீர் இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (ற-ஐ-4)

# எம்.பிக்களுக்கு எயிட்ஸ் இருந்தால் சபையில்இருந்து விரட்டப்படுவார்களா?

## பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கேள்வி

கொழும்பு, மார்ச் 8

நாடாளுமன்றத்தில் எத்தனை பேருக்கு எயிட்ஸ் இருக்கின்றதோ என்பது தெரியாது. அப்படி எவருக்காவது எயிட்ஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களை நாடாளுமன்றத்தில் இருந்து விரட்டி விடுவார்களா ? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க.

குளியாப்பிட்டிய சிறுவனுக்கு எயிட்ஸ் நோய் இருப்பதாகப் பரப்பப்பட்ட வதந்தி காரணமாக, சிறுவனின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளது. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை, சிறுவனை அவனது வீட்டில் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார் ரஞ்சன் ராமநாயக்க. இந்த நிலையிலேயே மேற்படி கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த சில தினங்களாகப் பேசப்பட்டு வரும், அநீதிக்குஉள்ளானகுளியாப்பிட்டிய சிறுவன் சம்பந்தமாகவும், எயிட்ஸ் நோய் தொடர்பாகவும் மக்களுக்கு மாத்திரமல்லாது, அரசியல்வாதிகளின் மனங்களில் இருக்கும் தவறான எண்ணத்தைப் போக்க நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

குளியாப்பிட்டிய சிறுவனுக்கு எயிட்ஸ் நோய் இல்லைஎன்பதைநிரூபிக்க, சிறுவனிடம் இருந்து எடுக்கப்பட்ட குருதியை எனது உடலில் செலுத்திக் கொள்ளப் போகின்றேன். நாடாளுமன்றத்தில் எத்தனை பேருக்கு எயிட்ஸ் நோய் இருக்கின்றதோ என்பது எவருக்கும் தெரியாது. அப்படி எவராது கண்டுபிடிக்கப்பட்டால், நாடாளுமன்றத்தில் இருந்து அவர்களை விரட்டி விடுவார்களா?.

இப்படியான மாயைகளுக்கு ஏமாற முடியாது. எயிட்ஸ் நோய் காற்று மற்றும் எச்சில் மூலம் பரவாது. அது பற்றி நான் படித்திருக்கின்றேன். குறித்த சிறுவனுக்கு எச்.ஐ.வி. தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறந்த பாடசாலையில் கற்கும் வாய்ப்பு சிறுவனுக்கு வழங்கப்படும் எனவும், அவரது தாய்க்கு வீடு ஒன்றும் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் - என்றும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# ஐ.ம.சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம்

## ஜனாதிபதி தலைமையில் இன்று

கொழும்பு, மார்ச் 8

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று இரவு 8 மணிக்கு, ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான பேராசிரியர் விஸ்வ வர்ணபால உயிரிழந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான ஒருவரை நியமித்தல், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் முன்னணியை மறுசீரமைப்பது குறித்து கலந்துரையாடல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழு ஓராண்டுக்கு முன்னதாகவே இறுதியாகக்கூடியிருந்தது.

முன்னணியில் நிலவி வரும் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தை கூட்டுமாறு, சில கூட்டணிக் கட்சிகள் கடந்த வாரம் ஜனாதிபதியிடம் கோரியிருந்தன. (ற-ஐ-5)

# சிறைச்சாலை பஸ்களுக்கு இனி கறுப்புக் கண்ணாடி

கொழும்பு, மார்ச் 8

சிறைச்சாலை பஸ்கள் அனைத்துக்கும் கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்படவுள்ளன என்று சிறைச் சாலைகள் ஆணையாளர் ஜெனரல் நிசாந்த தனசிங்க தெரிவித்துள்ளார். இவ்வாறான பஸ்கள், முக்கியமான சந்தேகநபர்களைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம், தெமட்டகொட பகுதியில் வைத்து சிறைச்சாலை பஸ் ஸொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதை அடுத்தே இந்தத் திடீர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-5)

## புங்குடுதீவு, நயினாதீவு பல.நோக்குக் கூ. சங்கம் வாக்காளர் இடாப்பு மூடுதல்

31.01.2016 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இந்த இடாப்புக்கள் அங்கத்தவர் ஆட்சேபனைகளைப் பெறுவதற்காக 08.03.2016- 22.03.2016 வரை பின்வரும் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

கிளை இல-1, 2 இற்கான வாக்காளர்பட்டியல்- கிளை இல- 02 இலும்
கிளை இல- 3,5,6,7,9 இற்கான வாக்காளர் பட்டியல்- தலைமைக் காரியாலயத்திலும்
கிளை இல- 10, 12,13 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல-10 இலும்
கிளை இல- 14, 15, 16 இற்கான வாக்காளர் பட்டியல்- கிளை இல- 14 இலும்
கிளை இல்- 18, 19, 20 இற்கான வாக்காளர் பட்டியல் -நயினாதீவு கிளை இல-20 இலும்

அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 22.03.2016 இற்கு முன் எழுத்து மூலம் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பை பூர்த்தி செய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
புங்குடுதீவு- நயினாதீவு பல.நோ. கூ. சங்கம்.

(c/ 29620)(12.19.20)

## மேல் நீதிமன்றம் வவுனியா கேள்வி அறிவித்தல்

வவுனியா நீதிமன்ற வளாகத்தில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களையும் வவுனியா மேல் நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ.100/= ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூ. 100 00/= ஐயும் செலுத்தி 16.03.2016 புதன்கிழமை பி.ப 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 16.03.2016 பி.ப 02.00 மணி வரை ஆகும். அன்றைய தினம் பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

அ.பிரேமசங்கர்,
தவிசாளர்/ மேல்நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்ற கேள்விச் சபை,
மேல்நீதிமன்றம்.
வவுனியா.

(c/ 29620)(12.19.20)

இதோ வெளிவந்துவிட்டது மார்ச் மாத இதழ்!




*இலவச சுயதொழில் கையேடு
*கட்டுரை
*கவிதை
*சிறுகதை
*ஆன்மீகம்
*நட்சத்திர இல்லத்தரசி
*இம்மாத மங்கை
*இலக்கியம்
*சிறப்பு நேர்காணல்கள்
*கேள்வி - பதில்

- அன்புள்ள அப்பாவுக்கு,
- ஏழு வருடங்களின் பின் வெளிவந்த உண்மை
- இறுதிச்சுற்று
- பிரிதலை வென்ற புரிதல்
- குழந்தைகள் ஓர் அமானிதம்
- நாளிதழ்கள் சொன்ன வன்முறைகள்
- ஆழ அறிவோம்
- கலைந்து போன கனவு
- தொந்தி குறைய எளிய உடற்பயிற்சி முறைகள்
- முகநூலில் ஒரு முகவரி
- விழு கொள் பெண்ணினமே

இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் வெளிவந்துவிட்டது. இன்றே சுடர்ஒளி, உதயன் முகவர்களிடம் முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

காணி விற்பனைக்கு உண்டு
A-9 வீதி எழுதுமட்டுவாள் சந்தைக்கு அருகிலுள்ள 21 பரப்பு 8 குழி கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
077 229 9557

விற்பனைக்கு
ஒரு வயது நிரம்பிய ஜேமன் செப்பேட் ஆண், பெண் நாய்களும், பொக்சர் ஆண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாய்களும், பொமேரியன் ஆண், பெண் நாய்களும், அதன் 45 நாள் பூர்த்தியான குட்டிகளும், சில்க்கி, மணித் தாராக்களும் விற்பனைக்குண்டு.
மயூரன் பாம் சென்ரர்
கந்தசாமி கோயிலடி,
077 015 8690

வேலை வாய்ப்பு
யாழ்.நகரில் உள்ள பிரபல தொலைபேசி விற்பனை காட்சியறையில் Sales man மற்றும் Sales Girl வேலை வாய்ப்பு உண்டு.
தகைமை:
* O/L or A/L
* அடிப்படை கணினி அறிவு
* ஆங்கில அறிவு
* வயது - 20-30 வரை
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
077 383 4483
info@celltronics.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு. கட்சியைப் பாதுகாக்க மகிந்தவைப் பிரதமராக்குக

## குமார வெல்கம எம்.பி. கூறுகின்றார்.

கொழும்பு, மார்ச் 8

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க வேண்டுமாயின், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைப் பிரதமராக நியமிக்க வேண்டும்என்றுநாடாளுமன்றஉறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

கொழும்பு-கெஸ்பேவபிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே குமார வெல்கம இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ச தலைமையில் புதிய அரசியல் கட்சியை அமைப்பது தொடர்பான பேச்சு வெளிப்படுத்தப்பட்டு வரும் நிலையிலேயே, குமார வெல்கம மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்க வேண்டுமாயின், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைப் பிரதமராக நியமிக்க வேண்டும். அப்படியில்லை என்றால், மக்களின் நிலைப்பாடுகளுக்குச் செவி சாய்த்துத் தனியான அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான பிரசன்ன ரணதுங்கவும், மகிந்த ராஜபக்சவைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார். (ற-ஐ-5)

# சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சைவத் தமிழ் இளைஞர் மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 8

அகில இலங்கை சைவ மகா சபையால் சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சைவத்தமிழ் இளைஞர் மாநாடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா கோயிற்குளம் சிவன் கோயிலின் சிவன் முதியோர் இல்ல மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாநாட்டுக்கு முன்னதாக, வவுனியா குருமன்காடு சிவன் - வைரவர் ஆலயத்தில் இருந்து கோயிற்குளம் சிவன் கோயில் வரையான சுமார் ஏழு கிலோமீற்றர் தூரம் சிவபெருமானின் திருச்சொரூபத்துடன் பாதயாத்திரை இடம்பெற்றது.

திருகோணமலை தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார் நந்திக்கொடி ஏற்றியதைத் தொடர்ந்து மாநாடு ஆரம்பமானது.

சைவ மகா சபைத் தலைவர் சி.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் கிழக்கிலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைவருமான சீ.யோகேஸ்வரன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நிகழ்வில் சின்மயா மிசனின் யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் யாக்ரத சைதன்ய சுவாமிகள், யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன், கோயிற்குளம் சிவன் கோயில் ஆலய தர்மகர்த்தா நவரட்ணராஜா, சர்வதேச இந்து இளைஞர் சங்க அமைப்பாளர் நா. குமரகுருபரன், ஊவா மாகாண கல்வி மேம்பாட்டு ஒன்றியத் தலைவர் க.யோகேஸ்வரன், உளநல மருத்துவர் சிவதாசன், இந்தியா உசண்டகிரி நாகநாத சுவாமியின் சீடர் வடகம் பட்டி ரவி சுவாமிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்ற மாநாட்டில் "ஆலயம் சமூக மையம்" என்ற தொனிப்பொருளில் குடிகளைத்தழுவிய கோயில்கள், கோயில்களைத் தழுவிய குடிகள், இளைஞர்களும் அறநெறிக் கல்வியும், இளைஞர்களின் ஒழுக்கவியல், வாழ்வாதாரமும் அறக்கொடையும், சைவசமயத்தின் மேம்பாடு, முன்பள்ளிக் கல்வி உள்ளிட்ட பல விடயதானங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

இந்த மாநாட்டின் போது சைவ மகா சபையின் பக்தி கீதங்கள் அடங்கிய இறுவட்டும் வெளியிடப்பட்டது. யாழ்.அரச அதிபர் இறுவட்டை வெளியிட்டு வைக்க, நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் பெற்றுக் கொண்டார். மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வுகள் நேற்று திங்கட்கிழமையும் நடைபெற்றன. (ற-ஐ-ரி)

# அம்புலன்ஸைச் செலுத்திய சட்ட பீட மாணவன் கைது

கொழும்பு, மார்ச் 8

பந்தயம் ஒன்றின் அடிப்படையில், நோயாளர் காவு வண்டியைச் (அம்புலன்ஸ்) செலுத்திய சட்ட பீட மாணவன் கறுவாத் தோட்டப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம், நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு ஆனந்தா - நாலந்தா கிரிக்கெட் தொடரின் நிதி சேகரிப்புச் செயற்பாட்டின் போதே இந்தச் சம்பவம் நடை பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அம்புலன்ஸ் வண்டியைச் சட்ட விரோதமாகச் செலுத்த முயற்சித்த சட்டபீட மாணவன் குறித்த அம்புலன்ஸின் சாரதி வாகனத்தில் இல்லாத நிலையிலேயே வாகனத்தைச் செலுத்தியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த மாணவனை விசாரணை செய்தபோது பந்தயம் ஒன்றுக்காகவே இவ்வாறு வாகனத்தைச்செலுத்தினேன் என்று அவர் கூறியதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கறுவாத்தோட்டப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-5)


மணிவிழா வாழ்த்து



"பொன்மனச் செம்மல்"
"மனிதநேய ஈகையாளன்"
"கல்விக் காருண்யன்"
என்னும் கௌரவப் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு E.S.P
நாகரத்தினம்
அவர்கள் என்றும் புன்னகையுடனும் இனிய வார்த்தைகளாலும் எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்கும் இனிய பண்பாளன் தமிழ் மக்களுக்கு கிடைத்த மனித குலத்தின் மாணிக்கமே! இன்று போல் என்றும் வாழ்க!
பாடசாலை சமூகம்.
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.
(60785)(11,19 20)



துன்னாலை கோவிற்கடவை சித்தி விநாயகர் ஆலய
தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 08.03.2016
இன்று செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு இடம் பெறும்

கொக்கராமுல்லை கோவிற்கடவை சித்திவிநாயகர் மெய் அடியார்களே !

நிகழும் மன்மதவருடம் மாசி மாதம் 25 ஆம் நாள் (08.03.2016) செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு நாதஸ்வர கலைஞர்களின் மங்கள வாத்தியங்கள் முழங்க எம் சித்திவிநாயகப் பெருமான் தேரேறி அடியார்களுக்கு வீதி உலா வந்து அருள்பாலிப்பார்.

அனைவரும் வருக ! அருள் பெறுக !

- பரிபாலன சபை -
- கோவிற்கடவை சித்திவிநாயகர் ஆலயம் -

அனுசரணை:


மண்டப முகப்புத் தோற்றம்


மண்டப உள் தோற்றம்

தங்களுக்கான சேவை
திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் வைபவம் போன்ற நிகழ்வுகள் கொண்டாட சகல வசதிகளும் கொண்ட மண்டபம்.

கோவிற்கடவை திருமண மண்டபம்
(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)
A/C or Non A/C

வாரீர் தொடர்பு கொள்வீர் !!
தொலைபேசி இல : 021 226 4135
அலைபேசி இல : 077 714 0090
கோவிற்கடவை திருமண மண்டபம்
துன்னாலை, கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 06.08.1942 — மறைவு 07.02.2016

### அமரர் முருகேசு சுப்பிரமணியம்

அன்பின் திருவுருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமான எம் பாசமிகு தந்தையே
இன்மொழி பேசி ஊருடன் உறவாடி ஓயாது உழைத்த
ஒளிவிளக்கே எம்மைப்பிரிந்து சென்றது நியாயமோ
மண்ணில் உதித்தோர்க்கு மரணமே நியதியாம்
என்றாலும் ஏற்கவில்லை எம் மனது

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு எமது ஆறாத்துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி. இணையம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு

இன்று (08.03.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும்உற்றார். உறவினர். நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(69107) (14,17,20)

கருங்காலி, காரைநகர். — குடும்பத்தினர்.



## திருமதி லிங்கேஸ்வரி இராசநாயகம் அவர்களின் 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில்: 12.08.1933 — இறைவன் அடியில் 08.03.2014

ஈராண்டு சென்றாலும் ஈர விழி காயவில்லை அம்மா!
உங்கள் முகம் பார்க்காது உள்ளம் வாடுதம்மா!!
திரும்பும் இடம் எல்லாம் நின் செயல் அனைத்தும்
கண்முன்னே நிழலாய் தெரியுதம்மா!!!
மரணம் என்னும் சொல்லை மனதார நம்புகின்றோம்
எம்மோடு வாழ்கிறீர் என்பது கனவாகிப் போனாலும்
எங்கள் மனதில் உங்கள் முகம் எந்நாளும்
மறையாது எம்முடன் உயிர்வாழும்
எங்கள் அம்மா, உம்மைக் காண வரும்
இனிய நாளை எண்ணி வாழ்கின்றோம்...

அன்புக் கணவர்
V.T.RASANAYAGAM (J.P.)
Retired Postmaster.

Alaveddi. (89605)(1,19,20)


# 37 ஆயிரம் ஆண்டுக் கலாசாரம் துரிதமாக அழிந்து வருகின்றது

## இலங்கை ஆதிவாசிகளின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

37 ஆயிரம் ஆண்டுகளாகப் பாதுகாத்து வந்த கலாசாரம் துரித அழிவை எதிர்கொண்டுள்ளது என்று இலங்கை ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முன்பு போன்று வேடர்கள் தற்போது வேட்டையாடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. காட்டுக்குள் சுதந்திரமாக நடமாடுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக 37 ஆயிரம் ஆண்டுகளாகப் பாதுகாத்து வந்த எங்கள் கலாசாரம் துரித அழிவை எதிர்நோக்கியுள்ளது.

இதேவேளை, பொருளாதார வளர்ச்சியின் தாக்கம் காரணமாக இளம் தலைமுறையினர் தொழில் மற்றும் வருமானப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். இதனால், அவர்கள் நகர்ப்புறப் பகுதிகளுக்குத் தொழில் தேடிச் செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு செல்லும் இளம் தலைமுறையினர் வேடர்களின் கலாசாரத்துக்குப் பதிலாக நாகரிக கலாசார மோகத்துக்கு அடிமையாகின்றனர்.

நகரத்தில் ஏனைய பிள்ளைகளுடன் கல்வி கற்கும் எங்களது பிள்ளைகள் கைத் தொலைபேசி உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள் மீது விருப்புக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இவ்வாறாக, இலங்கையின் ஆதிவாசிகளான வேடர்களின் தலைமுறை துரித அழிவை நோக்கிப் பயணித்துச் செல்கிறது - என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கனகாம்பிகை சிவசிவாபிள்ளை

மறைவு
16.01.2015
திதி : 20.01.2016

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானடைந்து ஆண்டு ஒன்றானாலும்
அம்மா ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
எத்தனை வருடங்கள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் இதயத்தில் இருந்து அகலாது
எம் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும் நீங்கள்
எம்முடன் வாழ்ந்த நாள்களும் நினைவுகளும் நிலையானவை
உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை
நாகபூஷணி அம்மன் பாதம் பணிகின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

அமரர் கனகாம்பிகை சிவசிவாபிள்ளை அவர்களது முதலாவது ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (08.03.2016) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம் பெறும்.

" கனகஸ்தான் "
566/4, கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

(69886) (14,19,,20)

குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



07.02.2016 ஆம் திகதி
சிவபதமடைந்த எமது பாடசாலை
ஆசிரியர் திரு. க. இந்திரராஜா
அவர்களின் அன்பு மாமனார்
அமரர் சங்கரப்பிள்ளை
கந்தசாமி
அவர்களின் ஆத்மசாந்தி
வேண்டி இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்

(68090)(14,17,18)



## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 07 . 1945 — மறைவு 08 . 03 . 2010

### திருமதி ஜெகதீஸ்வரி பத்மநேசன்

ஆண்டுகள் ஆறு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்புத் தெய்வமே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் – எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே !
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்

(69105) (14,19,20)

சண்டிலிப்பாய். — குடும்பத்தினர்.


# மத ரீதியான வங்கிகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு

கொழும்பு, மார்ச் 8

மத ரீதியான வங்கிகள் தொடர்பில் இரு வாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் செயற்படும் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரத்துறை அமைச்சுக்கு கடிதம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

நாட்டில் ஷரீஆ சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் உறுப்புரிமையை அரசு பெற்றுக் கொள்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பொது பலசேனா அமைப்புகடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்திருந்தது.

அதில், ஆட்சியாளர்களின் திறமையற்ற ஆட்சியால் முஸ்லிம் அல்லாத நாடொன்றில் இவ்வாறான இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு மேற்கொள்ளும் இரகசிய முயற்சிகளை கண்டிப்பதாகவும், மக்களின் பணம் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய நாடாளுமன்றமும் இது தொடர்பில் மௌனம் காத்து வருவது ஆபத்தானது எனவும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் கள் தொடர்பில் இரு வாரங்களில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலகம் பிரதமரின் கீழ் இயங்கும் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரத்துறை அமைச்சுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் உறவுகளை சிறையில் சாகடிக்காதீர்

## அரசியல் கைதிகளின் உறவுகள் யாழில் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம்




யாழ்ப்பாணம், மார்ச் 8

மகசின் சிறைச்சாலையில் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக, அரசியல் கைதிகளின் உறவினர்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளால் யாழ்ப்பாணத்தில்நேற்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், கோட்டை முனியப்பர்கோயிலில்காலை 7 மணியிலிருந்த மாலை 4 மணி வரையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதுவித விசாரணைகளும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுவிக்குமாறு கோரி 14 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த இரண்டு வார காலமாக மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் இந்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது அரசியல் கைதிகளின் உறவினர்கள், தமிழ் மக்களாகப் பிறந்ததற்காகவா இந்த அரசு இவ்வாறு நடந்து கொள்கின்றது என்று கேள்வி எழுப்பினர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு, மைத்திரி, அரசே அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய், மைத்திரி – ரணிலே நல்லாட்சி வேடமிட்டு உலகை ஏமாற்றாதீர்கள், எமது உறவுகளைச் சிறையில் சாகடிக்காதீர்கள் போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது பிள்ளைகளை விடுதலை செய்யத் தவறின் சாத்வீகப் போராட்டங்களை எதிர் வரும் காலங்களில் மேற்கொண்டு தாமும் செத்து விடுவோம் என்றும் அரசியல் கைதிகளின் உறவுகள் தெரிவித்தனர்.

(ற-ஐ-5-106)

# அரசுக்கு எதிராக என் மகன் ஆயுதம் ஏந்தியதை நிரூபித்தால் சுடுங்கள்

## அவன் அப்பாவி மாணவன் எனத் தாய் கண்ணீர்

யாழ்ப்பாணம்,மார்ச் 8

அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கியதை நிரூபித்தால் எனது பிள்ளையைச் சுடுங்கள். அவனோர் அப்பாவி மாணவன். அதனால் அவனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு தாயார் ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார். கைதிகளின் விடுதலை வேண்டி யாழ்.முனியப்பர் ஆலயம் அருகில் நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனது மகன் அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கியதாக நிரூபிக்கப்பட்டால்எனது பிள்ளையைச் சுடுங்கள். அவனோர் அப்பாவி மாணவன். அவனைக் கைது செய்து கொண்டு செல்லும் போது அவனுக்கு 19 வயதுதான். அதனால் எனது மகனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

கடந்த ஆட்சியின் கொடுமையாலேயே இந்த அரசை உருவாக்கினோம். ஆனால் இந்த அரசின் காலத்திலும் நாம் வீதியில் தான் அலைகின்றோம். ஆட்சி மாறியதனால் நாம் அலையும் இடங்கள்தான் மாறியுள்ளன.

எனது மகன் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 23 ஆம் திகதியுடன் எட்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனது மகனைத் தேடி நான் போகாத இடம் இல்லை. நான்காம் மாடி வரைக்கும் அலைந்து களைத்து விட்டேன். இனி அலைவதற்கு அல்ல, நடப்பதற்குக் கூட உடம்பில் தெம்பு இல்லை.

ஆயுதம் தூக்கியவர்களைக்கூட விடுவித்த அரசு, ஆயுதமே தூக்காத எனது மகனை உடன் விடுதலை செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் நான் விரைவில் எனது உயிரை மாய்த்துக் கொள்வேன். அதற்கும் இந்த நல்லாட்சி அரசே பொறுப்பு என்று அந்தத் தாய் தெரிவித்தார்.

(ற-ஐ-101)

### கட்டுரைத் தொகுப்பு வெளியீடு

கரணவாய்,மார்ச் 8

வல்வை சுந்தாவின் 'விழுதுகள்' கட்டுரைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வு, எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள்தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், நூலின் நயப்புரையை பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனும் வழங்கவுள்ளனர். (ஐ-108)

### சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

அச்சுவேலி, மார்ச் 8

மல்லாவி கஜன் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான 'ஒரு பிடிமண்' நூல் வெளியீட்டு விழா இன்று பி.ப. 1.30 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் வே.முல்லைத்தீபன் தலைமையில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாவில், பிரதம விருந்தினராக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலனும், சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்எல்.மாலினிவெனிற்றனும்கலந்துகொள்ளவுள்ளனர். நூல்வெளியீட்டுரையை திருமதி சந்திரலைலா ரங்கனும், நூல் மதிப்பீட்டுரையை வைத்திய கலாநிதி செ.மதுரகனும் ஆற்றவுள்ளனர். முல்லைத்தீவு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞா.ஆதவன் சிறப்புரை ஆற்றவுள்ளார். (ஐ-11)

# ஆரம்பிக்க முன்னரே நிறுத்தப்பட்ட உடலியக்க விளையாட்டுச் செயற்பாட்டு நிகழ்வு

## சீரற்ற மைதானம் காரணமாக இரு மாணவர்கள் காயமடைந்ததை அடுத்து

வவுனியா,மார்ச் 8

வவுனியா தெற்கு கல்வி வலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு, கடந்த சனிக்கிழமை இடம்பெற இருந்த 'செயற்பட்டு மகிழ்வோம்' எனும் தொனிப் பொருளிலான உடலியக்க விளையாட்டுச் செயற்பாட்டு நிகழ்வு ஆரம்பிப்பதற்கு முன்னரே இடை நிறுத்தப்பட்டது. மைதானத்தில் உடைந்த நிலையில் இருந்த மதுபானப் போத்தல்களால் இரு மாணவர்களுக்குக் காயம் ஏற்பட்டதை அடுத்தே குறித்த நிகழ்வு இடைநிறுத்தப்பட்டது.

கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் வவுனியா காமினி மகாவித்தியால மைதானத்தில் நடைபெற இருந்த குறித்த நிகழ்வு ஆரம்பமாகவிருந்த நிலையில், நிகழ்வுக்கு வருகை தந்த பாடசாலை மாணவர்களைத் தரம்பிரித்து ஒழுங்கு படுத்தும் செயற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன.

அதன்போது, மைதானத்திலிருந்த மதுபானப் போத்தல் துண்டுகளால் இரு மாணவர்களுக்கு காலில் காயங்கள் ஏற்பட்டன. அதையடுத்து 'செயற்பட்டு மகிழ்வோம்' உடலியக்க செயற் பாட்டு நிகழ்வை வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிநிதிகள் மாணவர்களின் நன்மை கருதி இடை நிறுத்தினர்.

**தரம் 5 மாணவர்களை உள்ளடக்கிய உடலியக்கச் செயற்பாட்டு நிகழ்வில் 30 பாடசாலைகளிலிருந்து சுமார் 300 மாணவர்கள் பெற்றோருடன் கலந்து கொண்டிருந்தனர்.**

மதுபானப் போத்தலின் துண்டுகள், பியர் ரின்களென்பவை மைதானத்தில் காணப்பட்டமையாலும். இரு மாணவர்களுக்கு உடைந்த மதுபானப் போத்தலால் காயம் ஏற்பட்டதையடுத்துமே வவுனியா தெற்கு கல்வி வலயத்தினர் குறித்த நிகழ்வை இடை நிறுத்திச் சென்றனர்.

தரம் 5 மாணவர்களை உள்ளடக்கிய உடலியக்கச் செயற்பாட்டு நிகழ்வில் ஒரு பாடசாலையிலிருந்து 10 மாணவர்கள் வீதம் 30 பாடசாலைகளிலிருந்து சுமார் 300 மாணவர்கள் பெற்றோருடன் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வு தமிழ், சிங்கள மாணவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வாக எற்பாடு செய்யப்பட்டது

இடை நிறுத்தப்பட்ட நிகழ்வு பிறிதொரு தினத்தில் நடத்தப்படும் என்று அங்கு வந்த பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். காயமடைந்த இரு மாணவர்களும் உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். (ற-ஐ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலத்தில் மட்டும் பஸ் விடாது நிரந்தர சேவையை ஏற்படுத்தித் தருக

## தேறாங்கண்டல், ஐயங்கன்குளம் கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,மார்ச் 8

முல்லைத்தீவு தேறாங்கண்டல், ஐயங்கன்குளம் பகுதிகளுக்குத் தேர்தல் காலத்தில் மட்டும் வாக்குப் பெறுவதற்காக கிராமத்துக்கு பஸ்ஸை விடும் அரசியல் வாதிகள், இன்று வரை நிரந்தரமான பஸ் சேவையை ஏற்படுத்தவில்லை. எமது கிராமத்து மக்களும் போக்குவரத்துச்செய்யக்கூடிய வகையில் நிரந்தரமான பஸ் சேவையை ஏற்படுத்தித் தர வேண்டும்.- இவ்வாறு தேறாங்கண்டல், ஐயங்கன்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை தேறாங்கண்டல் ஐயங்கன்குளம் பகுதிகளில் போதிய பயணிகள் இன்மையாலேயே பஸ் சேவையை வழங்குவதில் இழுபறி நிலை ஏற்படுகின்றது என துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள தேறாங்கண்டல், ஐயங்கன்குளம், முத்து வெட்டுவான் ஊடாக ஏ9 வீதிக்குச் செல்லும் சுமார் 22 கிலோ மீற்றர் வீதிக்கு இன்றுவரை எந்த பஸ் சேவையும் இடம்பெறுவதில்லை. இது தொடர்பில் அதிகாரிகள் பலருக்கும் சுட்டிக் காட்டிய போதும் பயன் கிட்டவில்லை. இதனால் அரசியல்வாதிகளை நாடினால் தேர்தல் காலத்தில் மட்டும் இந்தப் பகுதிகளுக்கு பஸ் சேவைகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள். குறிப்பாக மீள் குடியேற்றத்தின் பின்பு இந்தப் பகுதிக்கு பஸ் சேவை இடம்பெறாத போதும் 2013ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நெருங்கிய வேளையில்,எமது வாக்குகளைக் கவருவதற்காக மட்டும் பஸ் சேவை இடம்பெற்றது. அந்தச் சேவையும் சில மாதங்களில் நிறுத்தப்பட்டது என குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

> “எமது அன்றாட தேவைகளுக்கு 10 மைல் தூரத்துக்குத் தினமும் சைக்கிள்களை மட்டுமே நம்பிப் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பணியாளர்கள், மாணவர்கள், நோயாளர்கள் என பலதரப்பட்டவர்களும் பெரும் இடரின் மத்தியி லேயே போக்குவரத்தில் ஈடுபட வேண்டியுள்ளது. எமது பிரதேசத்துக்கு விரைவில் நிரந்தர பஸ் சேவை வழங்க வேண்டும்.”

அத்தோடு இவ்வாறு பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளமையால் எமது அன்றாடத் தேவைகளுக்கு 10 மைல் தூரத்துக்குத் தினமும் சைக்கிள்களை மட்டுமே நம்பிப்பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.பணியாளர்கள், மாணவர்கள், நோயாளர்கள் என பலதரப்பட்டவர்களும் பெரும் இடரின் மத்தியிலேயே போக்குவரத்தில் ஈடுபட வேண்டியுள்ளது. எமது பிரதேசத்துக்கு விரைவில் நிரந்தரமாக பஸ் சேவை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் துணுக்காய் பிரதேசசெயலாளர் குணபாலனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, குறித்த வீதியில் போக்குவரத்துச் சேவைக்கு இந்தப் பகுதியின் தூரத்துக்கு ஏற்ப போதிய பயணிகள் இன்மை காரணமாக பஸ் உரிமையாளர்கள் தமக்கு நட்டம் ஏற்படுகின்றது என்கின்றனர் எனப் பதிலளித்தார்.

இதனால் துணுக்காய் முதல் ஐயங்கன்குளம் வரையான 10 கிலோ மீற்றர் தூரம் வரைக்குமான சேவையை மேற்கொள்ள முயற்சிகள் இடம்பெற்ற போதும், அந்த முயற்சிகளும் இதுவரை கைகூடவில்லை. இருப்பினும் இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். -என்றும் தெரிவித்தார். (ற-ஜ-21,10ʃ)

### கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல்,அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்து சேவையைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான கருத்தமர்வு எதிர் வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தமர்வு மு.ப. 9.15 தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழிற் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், இலங்கை பெண்கள் பணியகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சட்ட உதவிகள் ஆணைக் குழு, தேவைநாடும் மகளிர் அமைப்பு, சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான கற்கை நிறுவனம் ஆகியவை தமது நிறுவனம் சார்ந்த செயற்பாடுகள் தொடர்பில் கருத்துரைகளை வழங்கவுள்ளன.

(ற-ஜ-ரி)



கழிவுகளை இடுவதற்காக கிளிநொச்சி நகரில் குப்பைத் தொட்டி வைக்கப்பட்டுள்ளது. ஆயினும் அதனுள் கழிவுகள் கொட்டப்படாது வெளியே கொட்டப்பட்டுச் சிதறிக் காணப்படுகின்றன. அதனால் அந்தப் பகுதி சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றது. (ற-ஜ-10ʃ)

### மகளிர் தின நிகழ்வும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

கோண்டாவில் ஞானவீர சன சமூக நிலையத்தால் மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று மாலை 6 மணிக்குச் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டமும், மகளிர் கௌரவிப்பு நிகழ்வும் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் க.ம. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாகப் பதிவாளர் திருமதி வரதலட்சுமி சோமசூரியசிங்கம், கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை அதிபர் திருமதி சிவராணி நந்தகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-ரி)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி வேண்டுகோள்

முல்லைத்தீவு,மார்ச் 8

எமது சமூகத்தைப் பொறுத்த வரையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு அச்சநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் எமது சமூகம் பெண் விடுதலை நோக்கிய பயணத்தில் சென்று அதில் வெற்றி பெற்றதை எவராலும் மறக்க முடியாது. பெண் விடுதலை என்பது இன விடுதலைப் போராட்டத்தினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகவே கருத வேண்டும். - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - இனவிடுதலைப்போராட்டத்தால் எமது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் ஈடுசெய்ய முடியாதவை. அதிலும் தமிழ்ப் பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாதிப்புக்களில் இருந்து அவர்களை மீட்டெடுத்து அவர்களுக்கு உரிய முறையில் மதிப்பளித்து அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இன்று எமது சமூகத்தைப் பொறுத்த வரையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு அச்ச நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான நிலைமைகளை நிவர்த்திசெய்ய அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

போரின் விளைவுகளால் ஏற்பட்டுள்ள சமூகப் பிரச்சினைகள் எங்களது சமூகத்தின் எதிர்கால இருப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளன. இவை குறிப்பாக எமது சமூகத்தின் பெண்களையே அதிகம் பாதித்துள்ளன.

போர் காரணமாக விதவைகளாக்கப்பட்ட பெண்கள், மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்ட பெண்கள், காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் அரசியல் கைதிகளாக்கப்பட்டமையால் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் என பல்வேறுபட்ட வகையில் எமது பெண்கள் தமது இயல்பு வாழ்க்கைக்காகவும், தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவும் தினமும் அல்லற்படுகின்றனர்.

இவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் நியாயமான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டியதுடன் அவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவும் வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கான எதிர்கால மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டு அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும், அதிகரித்துச் செல்கின்ற பாலியல் வன்கொடுமைகளுக்கெதிராக போராடுவதும், வீட்டுவன்முறைகளைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த நிலையை மாற்றியமைக்க அனைவரும் ஒன்றித்து குரல் கொடுக்கவேண்டியது கட்டாய தேவையாகும். - என்றுள்ளது.

(ற - ஜ-21,ரி7)

### செந்தணல் படக்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 8

'ரிபிள் ஏ' மூவிஸ் படப்பிடிப்பு குழுவினரால் சுதர்சன் கனகராஜாவினால் முற்றுமுழுதாக ஈழத்தில் படமாக்கப்பட்ட 'செந்தணல்' என்னும் படம் திரையிடப்படவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணிக்கு யாழ். ராஜா திரையரங்கில் குறித்த படம் காட்சிப்படுத்தப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் பேரவையால் பிரஜைகள் குழுவில் குழப்பம்

வவுனியா, மார்ச் 8
வவுனியா பிரஜைகள் குழு தமிழ் மக்கள் பேரவையில் இணையவில்லை. வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவருடைய தனிப்பட்ட விருப்பத்தைப் பிரஜைகள் குழுவினுடைய தீர்மானமாக ஏற்றுக் கொள்ள முடியாது. - இவ்வாறு வவுனியா பிரஜைகள் குழுவின் உப தலைவர் நா.நடராஜா தெரிவித்தார்

எதிர்காலத்தில் தேர்தல்களில் களமிறங்குவதற்காகவே, தமிழ் மக்கள் பேரவையில் பிரஜைகள் குழுவின் தலைவர் இணைந்துள்ளார் என்றும் உபதலைவர் குற்றம் சுமத்தினார்.

உப தலைவருடைய கருத்தை மறுத்த பிரஜைகள் குழுவினுடைய தலைவர், வவுனியா பிரஜைகள் குழுவின் முழு ஆதரவும் தமிழ் மக்கள் பேரவைக்கு உள்ளது என்று தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினுடைய புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை இடம் பெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியான நிலையில், பிரஜை கள் குழுவினுடைய தலைவர் கூட்டத்துக்கு வராததன் காரணமாகக் கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

கூட்டம் இடம் பெறாமை தொடர்பாக வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் தேவராஜனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

அன்று காலை தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் ஒன்றுக்குச் சென்றதன் காரணமாக மாலை இடம்பெற இருந்த பிரஜைகள் குழுவினுடைய கூட்டத்துக்குச் செல்ல முடியவில்லை. மிக விரைவில் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெறும் எனத் தெரிவித்தார்.

சனிக்கிழமை இடம்பெற்றவிருந்த பிரஜைகள் குழுக் கூட்டம் தொடர்பாக, கூட்டத்தை ஒழுங்குபடுத்தியதாகக் கூறப்படும் வவுனியா பிரஜைகள் குழுவின் உப தலைவரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது,

கூட்டமானது பிரஜைகள் குழுவினுடைய தலைவரைத் தொடர்பு கொண்டு கேட்டுத் தான் ஒழுங்குபடுத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பிரஜைகள் குழுவின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தது.

அத்தோடு வவுனியா பிரஜைகள் குழு, தமிழ் மக்கள் பேரவையில் இருக்கின்றதா ? இல்லையா எனும் கேள்விகளும் தலைவரிடத்தில் கேட்கப்பட வேண்டி இருந்தன. காரணம் வவுனியா பிரஜைகள் குழு என்று கூறி விட்டு தனி ஒருவர் மட்டும் தமிழ் மக் கள் பேரவைக்கு ஆதரவு தெரிவித்தால் அது பிரஜைகள் குழுவினுடைய ஆதரவாக இருக் காது.

பிரஜைகள் குழுவின் தலைவர், பிரஜைகள் குழுவுக்காக எவ்வளவோ செய்துள்ளார். ஆனால் அவர் தமிழ் மக்கள் பேரவைக்கு ஆதரவாக இருப்பதும், மக்கள் பேரவையின் கூட்டங்களில் கலந்து கொள்வதும் எமக்கு தற்போது தான் தெரியும். வவுனியா பிரஜைகள் குழு தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து செயற்படவில்லை.

தலைவர் தனியே செயற்படுவதை பிரஜைகள் குழுவின் செயற்பாடு என்று கூறுவதை ஏற்று கொள்ள முடியாது. மக்கள் பேரவைக்குத் தலைவர் ஆதரவாகச் செயற்படுவது அவர் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தான். கடந்த சனிக் கிழமை இடம்பெற இருந்த கூட்டத்துக்கு அவர் வருகை தராது கூட்டத்தைப் புறக்கணித்தமை பிரஜைகள் குழுவை அவமதிக்கும் செயற்பாடாகவே கருதப்படும் - என்றார்.

குறித்த குற்றச்சாட்டுக் குறித்துப்பிரஜைகள் குழுவின் தலைவரிடம் வினவிய போது, தமிழ் மக்கள் பேரவைக்கு பிரஜைகள் குழு ஆதரவு தான். அதில் எந்த மாற்றமும் இல்லை. குறித்த குற்றச்சாட்டுகள் சிலரால் புனையப்படும் கட்டுக் கதைகள் என்று தெரிவித்தார். (ற-ஐ-5-21)

## ஒட்டுசுட்டானில் நடமாடும் சேவை

முல்லைத்தீவு,மார்ச்.8
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான ஒரு நாள் நடமாடும் சேவை நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம் பெற உள்ளது என்று பிரதேச செயலர் ய.அனிருத்தன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களின் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களை வழங்கும் நோக்கில் குறித்த சேவை நடத்தப்படவுள்ளது.

அத்தோடு அன்று தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்க முடியும். இதன் போது அடையாள அட்டைகளுக்கான ஒளிப் படப் பிடிப்புக்கள் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவைஅனைத்தும்இலவசமாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-101)

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முள்ளியில் 24 மணி நேர சோதனை

யாழ்ப்பாணம். மார்ச் 8
வடமராட்சி முள்ளிப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 24 மணி நேரப் பொலிஸ் சோதனை நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சியையும், தென்மராட்சியையும் இணைக்கும் இந்தப் பகுதி கடந்த சில வருடங்களாக மர்மக் கொலைகள், வழிப்பறிகள் என்பவை இடம்பெறும் மற்றும் மணல், விறகு, காட்டுமரங்கள் மற்றும் கால்நடைகள் என்பவற்றைக் கடத்தும் பிரதான மார்க்கமாக விளங்கியது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அதனால் அந்தப் பகுதிகளில் உள்ள வீதிகளில் பகல் இரவு வேளைகளில் பெரும் அச்சத்துடனேயே பயணம் மேற்

> வடமராட்சியையும், தென்மராட்சியையும் இணைக்கும் இந்தப் பகுதியில் மர்மக் கொலைகள், வழிப்பறிகள் என்பவை தொடர்ச்சியாக நடப்பதாக மக்கள் அச்சம் வெளியிட்டிருந்தனர்.

கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மக்களினதும் வாகனங்களினதும் சுதந்திரமான போக்குவரத்துக்கு குறித்த சட்டவிரோத செயற்பாடுகள் அச்சத்தை ஊட்டுவதாக இருந் தமையால் அதிலிருந்து மக்களைப் பாதுகாக்குமாறு மற்றும் பல்வேறு பொது அமைப்புக்கள் பருத்தித்துறை மற்றும் நெல்லியடிப் பிரதேச பொலிஸாரிடமும், பிரதேச செயலர்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர். குறிப்பாக கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கையை அடுத்து காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜபரின் வழிநடத்தலில் இந்த சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4-108)













வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற மகா சிவராத்திரி தின விசேட பூசை நிகழ்வுகள். (ற-ஐ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தூதுவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றுங்கள்

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 8

இலங்கைக்கான இந்தியத் தூதுவரை உடனடியாக நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் பொருளாதார, தொழில்நுட்ப உடன்படிக்கை (எட்கா) தொடர்பில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணி வெளிக்காட்டும் எதிர்ப்புத் தொடர்பில் ஆச்சரியம் அடைகின்றேன் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும்வகையிலேயே, மகிந்த அணியின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இலங்கையை இந்தியாவின் காலனித்துவ நாடாகவும், தான் அதன் ஆளுநர் எனக் கருதியும் இந்தியத் தூதுவர் செயற்படுகின்றார். இதனால், இந்தியத் தூதுவரை நாட்டில் இருந்து உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும், எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-ஐ-5)



மகா சிவராத்திரியை முன்னிட்டு பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றுவரும் இந்தியாவின் வெவ்வேறு பிரதேசங்களில் வழிபடும் 12 சிவலிங்கங்களின் கண்காட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் பிற்பகல் பார்வையிட்டார். (ந)

## பொருளாதார வரி மாற்றங்கள் தொடர்பில் பிரதமர் விசேட உரை

கொழும்பு, மார்ச் 8

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பிலும், விதிக்கப்படும் வரி மாற்றம் தொடர்பிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட அறிவிப்பு ஒன்றை இன்று அல்லது நாளை புதன்கிழமை விடுக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகக் கடந்த வெள்ளிக்கிழமை விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது வரித் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள்மற்றும்சேவைகள் மீதான பெறுமதி சேர் வரியை அதிகரிப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

அரசு தற்போது எதிர்கொண்டுள்ள கடன் சுமையைக் குறைக்கும் நோக்கிலேயே, இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பில் அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்எதிர்காலத்தில் பொருளாதர மேம்பாட்டுக்காக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்பவைகுறித்துபொதுமக்களுக்கு விசேட அறிவிப்பு ஒன்றைப் பிரதமர் விடுக்கவுள்ளார்.

இன்று அல்லது நாளை புதன்கிழமை, பிரதமர் நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-ஐ-5)

## ஆஸ்திரேலியாவுக்கு படகில் செல்ல முயற்சித்த 17 பேர் காலியில் கைது

கொழும்பு, மார்ச் 8

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுவதற்காக காலியிலிருந்து, படகில் சென்று கொண்டிருந்த 17 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலிக் கரையோரத்திலிருந்து 40 கடல் மைல் தொலைவில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்களில் ஒரு பெண், இரண்டு சிறுவர்கள், இரண்டு குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைப் புலனாய்வுப் பரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தக் கைதுகள்மேற்கொள்ளப்பட்டன என்று கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படகு அகதிகள் தொடர்பில் பெரும்சிக்கல்களை எதிர்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அரசு, கடல் வழியாக புகலிடம் கோரி தமது நாட்டுக்குள் எவரும் வர வேண்டாம் என்றும் - அவ்வாறு வருபவர்களுக்கு புகலிடம் வழங்கப்பட மாட்டாது என்றும் - இலங்கையில் பரப்புரைகளை மேற் கொண்டு வருகிறது.

இவ்வாறு ஆஸ்திரேலியா சென்ற புகலிடக் கோரிக்கையாளர்களைக் கட்டம் கட்டமாக திருப்பி அனுப்பி வரும் ஆஸ்திரேலியா, சில நாள்களுக்கு முன்னர் 16 பேரை இலங்கைக்கு நாடு கடத்தியிருந்தது. திருப்பி அனுப்பப்படுபவர்களில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களும், சுயவிருப்பின் பேரில் நாடு திரும்புபவர்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-ஐ-5)

## புலிப் பயத்தின் காரணமாகவே ஆசிரியரை அழைக்கவில்லை

### இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 8

வடக்கு - கிழக்கு ஆசிரியர்களை மலையகத்துக்கு அழைத்து வராமைக்கு, புலிப்பயமே காரணம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இ.தொ.காவின் பதுளைப் பணிமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர்தின முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அந்தக் கட்சியின் துணைத் த்லைவர் டி.வி.சென்னன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இராஜாங்க கல்வி அமைச்சர் இராதாகிருஷ்ணன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அரசியல் மற்றும் தொழிற்சங்கம் தொடர்பில் கற்றுத் தர வேண்டிய அவசியமில்லை. அவருக்கு வழங்கப்பட்ட சேவைகளை அவர் முறையாக மக்களுக்குச் செய்தாலே போதுமானது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களை மலையகப் பாடசாலைகளுக்குள் உள்வாங்குவதற்கான முயற்சிகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தது என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

அந்தக் காலப் பகுதியில் வடக்கு - கிழக்கிலிருந்து ஆசிரியர்களை மலையகத்துக்கு அழைத்து வந்தால், புலிகளும் மலையகத்துக்குள் ஊடுருவதற்கான வாய்ப்புகள் உள்ளதென பேரினவாதிகள் பிரச்சினைகளை எழுப்பினர். அதனாலே எமது முயற்சி கைவிடப்பட்டது - என்றார். (ந-ஐ-5)

## எயிட்ஸ் வதந்தியால் பாதிக்கப்பட்ட மாணவனுக்குப் பாடசாலை அனுமதி

### நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் பணிப்பு

கொழும்பு, மார்ச் 8

எயிட்ஸ் வதந்தி காரண்மாக பாடசாலையிருந்து நீக்கப்பட்ட மாணவனை, நாட்டின் எந்தவொரு பாடசாலையிலும் இணைத்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

குளியாப்பிட்டியவைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவனுக்கு, எய்ட்ஸ் நோய் உள்ளது என்று வதந்தி பரப்பப்பட்டது. அந்த மாணவனின் தந்தை எய்ட்ஸ் நோயால் உயிரிழந்தவர் என்றும் - அதனால், அந்த மாணவனுக்கு எயிட்ஸ் நோய் உள்ளது என்றும் - வதந்தி பரவியது. இதனால் எந்தவொரு பாடசாலையும் அந்த மாணவனை இணைத்துக் கொள்ளவில்லை.

அழுத்தங்களின் காரணமாக பாடசாலை ஒன்றில் குறித்த மாணவன் இணைத்துக் கொள்ளப்பட்டான். இருப்பினும் அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் ஏனைய மாணவர்களின் பெற்றோர், தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு மறுப்புத்தெரிவித்தனர். எயிட்ஸ்தொற்று வதந்திக்குள்ளான மாணவனை பாடசாலையிலிருந்த வெளியேற்றினால்தான் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவோம் என்று குறிப்பிட்டனர்.

அந்த மாணவனுக்கு எயிட்ஸ் நோய் இல்லை என்ற மருத்துவச் சான்றிதழை சமர்ப்பித்தும் பெற்றோர்கள் விடாப்பிடியாக இருந்தமையால், இறுதியில் அந்தப் பாடசாலையிலிருந்தும் மாணவன் விலக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மாணவனின் தாய் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் குறித்த மாணவனைப் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கா நேரில்சென்று பார்வையிட்டிருந்தார். இதன்போது ஜனாதிபதியுடன் தொலைபேசியூடாக மாணவனது தாயாரும் பேசியிருந்தார். இந்த நிலையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்படி உத்தரவை கல்வி அமைச்சருக்குப் பிறப்பித்துள்ளார்.

மாணவனின் தாய் விண்ணப்பம் செய்யும் எந்தவொரு பாடசர்லையிலும் அந்த மாணவனுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சர் எடுக்க வேண்டும் என்று பிரதமர் உத்தரவிட்டுள்ளார். (ந-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை போய்விட்ட சு.கவில் தொடர்ந்திருக்க முடியாது

## திலும் அமுனுகம எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 8
சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலைபோய் விட்டது. அதனால் அந்தக் கட்சியில் நான் தொடர்ந்தும் நிலைத்திருக்க விரும்பவில்லை. - இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டி, நுகவெலயில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கண்டி மாநகர சபை நிர்வாகம் 58 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் வசமே இருந்தது. பெரும் முயற்சியின் பின்னரே அதன் அதிகாரத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வசம் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது.

ஆனால், இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலை போய்விட்டது. அந்தக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியிடம் விற்பனை செய்யப் பட்டுள்ளது. சிறிகொத்தாவுக்காக வேலை செய்யும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்ந்து நிலைத்திருக்க நான் தயாரில்லை - என்றார். (ற-ஐ-5)

# அரச ஊழியர்களுக்கு காணிகளுடன் குறைந்த வட்டியில் வீட்டுக் கடனுதவி

கொழும்பு, மார்ச் 8
காணிகள் இல்லாத அரச ஊழியர்களுக்குக் காணி களை வழங்கி, வீடு கட்டிக் கொள்ள குறைந்த வட்டி யில் கடனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச் சர் சஜித் பிரேமதாச தெரி வித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற பிரதேச இணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசும்போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். இந்தக் கூட்டம் நாடாளுமன்ற உறுப் பினர் சமல் ராஜபக்ச மற்றும் அமைச்சர் சஜித் பிரேமதாச ஆகிய இணைத்தலைவர்களின் தலைமையில் நடைபெற்றது.

> காணி இல்லாத அரச ஊழியர்களுக்கு காணி களை வழங்கி,வீடுக ளைக் கட்டிக்கொள்வதற்காக வீட மைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக 4 சதவீத வட்டியில் வீடமைப்புக் கடன் பெற் றுக் கொடுக்கப்படும்.

அங்கு கருத்துத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ-

காணி இல்லாத அரச ஊழியர் களுக்கு காணிகளை வழங்கி, வீடுகளைக் கட்டிக் கொள்வதற் காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக 4 சதவீத வட்டியில் வீடமைப்புக் கடன் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதன் மூலம் அரச ஊழியர் களின் கனவு நனவாகும். அம் பாந்தோட்டை பிரதேசத்தில் காணிகளை வழங்கும் போது, காணி இருப்பவர்களுக்கு மிகப் பெரிய காணிகள் வழங் கப்பட்டுள்ளன.

தகுதி அடிப்படையின்றி, பல் வேறு தொடர்புகள் மற்றும் அதி காரத்தைப் பயன்படுத்திக் காணி கள் வழங்கப்பட்டுள்ளன. இனி மேல்அப்படியானமுறையில்காணி களை அதிகாரிகள் வழங்கக் கூடாது.- என்றார். (ற-ஐ-5)




# சுதந்திர சதுக்கத்தில் சுதந்திரமில்லையா?

## போர்க் கொடி தூக்கிய காதலர்கள்

கொழும்பு, மார்ச் 8
கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் அமர்ந்திருந்த இளம் ஜோடியொன்றை, அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந் தவர்கள் பலவந்தமாக வெளியேற்றிய சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர், சுதந்திர சதுக்கத்தில் அமர்ந்திருந்த இளம் ஆண் ஒருவரையும், பெண் ஒருவரையும் அங்குபாதுகாப்புப்பணியிலிருந்தவர்கள் வெளியேற்றினர்.

அவர்களிடையே நடந்த வாக்குவாதத்தின் காணொலிஇணையத்தளங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியாகிப் பர பரப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து சுதந்திர சதுக்கத்தில் அமைதிப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

அங்கே அமர்ந்து போராட்டம் நடத்தி யவர்கள் 'ஜோடிகள் இங்கு அமர்ந்தி ருப்பதில் என்ன தவறு', 'இருவர் ஒன்றாக அமர்ந்திருப்பது எப்படிக் குற்றமாகும்?', 'சுதந்திரத்திற்காகப் சுதந்திர சதுக்கம்' ஆகிய வாசகங்கள் அடங்கிய பதா கைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டம் நடைபெற்றபோது, அங்கு சென்றிருந்த பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வா, காதலர்கள் சுதந்திரமாக இருக்கும் வகையில் சுதந்திர சதுக்கத்தில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும். அத்துடன், தோளில் கைபோட்டு அமர்ந்திருப்பதன் மூலம் கலாசார சீரழிவு ஏற்படப் போவதில்லை என்றும் அவர் கடுமையான தொனியில் சுதந்திர சதுக்கப் பாதுகாவலர்களுக்கு கூறி அங்கிருந்த காவலர்களின் செயற் பாடுகளைக் கண்டித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார்.

அத்துடன் சுதந்திர சதுக்கத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த, அரசு சார் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை இரத்துச் செய்யுமாறு கலாசார அமைச் சுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வா தனது முகநூலில் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# பெண்கள் சூதாட்ட நிலையம் அளுத்கமவில் சுற்றிவளைப்பு

கொழும்பு, மார்ச் 8
களுத்துறை மாவட்டத்தின் அளுத்கம பகுதியில், 'பெண்களுக்கு மட்டும்' நடத்தப்பட்டுவந்தசூதாட்ட நிலையத்தைப் பொலிஸார் கடந்த வாரம் சுற்றிவளைத் திருந்தனர். இதன்போது பெருந்தொகை யான பணம் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு நண்பிகள் இணைந்து வீடொன்றில் நீண்ட காலமாக இந்தச் சூதாட்ட நிலையத்தை நடத்தி வந் துள்ளனர். இதில் பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுவந்தனர்.

சட்ட விரோதமான முறையில் நடை பெற்றுவந்தசூதாட்ட நிலையம்தொடர்பில் தகவல் அறிந்த பிரதேச வாசியொருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை யடுத்து சூதாட்ட நிலையம் உடனடியாக சுற்றி வளைக்கப்பட்டது.

இதன்போது பெருந் தொகைப் பணத் துடன் சூதாடிக் கொண்டிருந்த ஐந்து பெண்கள் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

சூதாட்ட விடுதி உரிமையாளர்களான இரண்டு பெண்களிடமும், மேற்கொண்ட விசாரணையில் அளுத்கம பிர தேசத்தைச் சுற்றியுள்ள ஊர்களி லிருந்து ஏராளமான பெண்கள் நாளாந் தம் சூதாட்டத்துக்காக அங்கு வந்து செல் கின்றனர் என்று தெரியவந்துள்ளது.

அத்துடன், தமது கணவர்மார் வேலைக் குச் சென்றதன் பின்னர் வீட்டில் தனியாக இருக்கும் பெண்களே இந்தச் சூதாட்ட நிலையத்தில் உறுப்பினர்களாக இருந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படு கின்றது. (ற-ஐ-5)

முந்தி வரும் புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்

| சாதாரண சேமிப்புகள் (ரூ.) | நிலையான வைப்புகள் (ரூ.) | பரிசுகள் |
|---|---|---|
| 10,000 - 24,999 | — | சுவர்க் கடிகாரம் |
| 25,000 - 49,999 | 100,000 - 249,999 | பிரயாணப் பை |
| 50,000 - 99,999 | 250,000 - 499,999 | அயர்ன் பொக்ஸ் |
| 100,000 - 249,999 | 500,000 - 999,999 | கேஸ் குக்கர் |
| 250,000 - 499,999 | 1,000,000 - 1,999,999 | மிக்சர் கிரைண்டர் |
| 500,000 - 999,999 | 2,000,000 - 4,999,999 | மைக்ரோவேவ் |
| 1,000,000 க்கு மேல் | 5,000,000 க்கு மேல் | 32" LED TV |
| சிறுவர் சேமிப்பு கணக்குகள் | ரூ. 5,000 க்கு மேல் | கலர் பெட்டி |



யூனியன் வங்கியுடன் சேமித்து பெறுமதியான பரிசுகளைப் பெற்று புத்தாண்டை மகிழ்ச்சியாக கொண்டாடுங்கள்

- பெப்ரவரி 15 முதல் உங்கள் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- பரிசுகள் அங்கீகரிக்கப்பட்ட முகவரால் வழங்கப்படுவதுடன் ஒரு வருட உத்தரவாதமும் வழங்கப்படும்.
- 2016 ஏப்ரல் 15 வரை மட்டுமே.
- இம் மட்டுப்படுத்தப்பட்ட சலுகை இருப்பு தீரும் வரை மட்டுமே.

0115 800 800
UNION BANK
பிரதான காரியாலயம் : 64, காலி வீதி, கொழும்பு 03 | www.unionb.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கடற்றொழிலாளர் மீது கட்டவிழும் அராஜகக் கை...

தென்மராட்சிப் பிரதேசத்தில் செயற்படும் கடற்றொழிலாளர் சங்கங்களின் நிர்வாகத்தினரின் குடும்ப விவரங்களை, சீருடையினர் திரட்டி வருகின்றனர். அத்தோடு சங்க நிர்வாகிகளின்--தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை --புகைப்படம் எடுத்தும் செல்கின்றனர்.

சங்கங்களது தலைவர்கள், புகைப்படம் எடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்த போதிலும், அவர்களை வலுக்கட்டாயமாக கதிரைகளில் இருத்திப் புகைப்படம் எடுக்கப்படுகிறது!

வெளிப் பிராந்தியங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள், தென்மராட்சியின் கடற்பிரதேசங்களில் கேட்டுக்கேள்வி இன்றித் தொழில் செய்து வருவது, உள்ளூர் மீனவர்களை அவர்களது தொழில்துறையில் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. அவர்களின் ஜீவனோபாயத்துக்கு ஆப்பு வைக்கிறது!

தென்மராட்சிப் பிரதேசத்தில்,--கச்சாய், மீசாலை, பெரிய மாவடி, கோயிற்குடியிருப்பு, தனங்களப்பு, மறவன்புலோ, கோயிலாக்கண்டி, நாவற்குழி ஆகிய இடங்களில்--இப்போது, கடற்றொழிலாளர் சங்கங்கள் இயங்குகின்றன.

சீருடையினருக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத கடற்றொழில் துறைக்குள், அவர்கள் இவ்விதம் அத்துமீறிச் செயற்படுவது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல.

தரைமேற் பிறக்க வைத்தான், எங்களைத் தண்ணீரில் மிதக்க விட்டான்--என்று மீனவர்கள் தங்களுக்குள் தமது தொழிலின் ஆபத்தை நினைத்து மன ஆதங்கம் கொள்வது உண்டு.

அரச படைகள், அவர்களின் கஷ்ட நஷ்டங்களை மேன்மேலும் பெருப்பிக்கும் நோக்குடன், சங்க நிர்வாகிகளை, மறைமுகமாகப் பயமுறுத்தும் பாணியில்-

பெரும்பான்மை இனச் சீருடையினர் செயற்படுவது, அவர்களின் மேலோங்கித்தனத்தையே அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

இந்து சமுத்திரப் பெருங்கடலில் தென்பிராந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு அவர்கள் ஆளாகி உள்ள நிலையில்--

தென்மராட்சிப் பிரதேசத்தின் கடல் ஏரியில் வெளியூர் தொழிலாளர்கள் அத்துமீறித் தொழில் செய்வதற்கு அந்தப் பகுதி மீனவ சங்கங்கள் ஆட்சேபம் தெரிவித்து வரும் நிலையில்--

சீருடையினர் தமது குடும்ப விவரங்களைத் திரட்டுவதில் ஈடுபட்டுத் தம்மை புகைப்படம் எடுப்பது தொடர்பில், அவர்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். சீருடையினரின் மேற்குறித்த செயற்பாடு கண்டனத்துக்கு உரியதாகும்.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியாக மனிதர்களைக் கடித்துக் குதறுவது போன்ற நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி மீனவர்களை அச்சத்தில் ஆழ்த்தும் முன்னோட்டம், வெவ்வேறு துறைகள் சார்ந்த, தமிழ்த் தொழிலாளர்களை நிர்க்கதிக்குள் ஆழ்த்தும் திட்டத்தின் முன்னோட்டம் எனக் கருதுவதில் தப்பு எதுவும் இல்லை!

ஒட்டுமொத்தத்தில், எமது பிரதேச மக்களின் போசாக்கைப் பேணும், அதனை மேம்படுத்தும். கடற்றொழிலாளர் மீது ஏவப்படும் அராஜகக் கையை ஆரம்பத்திலேயே தறித்து வீழ்த்த வேண்டும்.

நல்லாட்சி அரசே! இந்த அட்டூழியத்தைத் தடுக்க, நீ என்ன செய்யப் போகிறாய்? கைகட்டி வாய் பொத்தி நிற்பாயா? அன்றி மனிதாபிமான மட்டத்திலேனும் விவகாரத்தைத் தீர்த்து வைப்பாயா..?

# தமிழக அரசியலைத் தாண்டுமா சாந்தன், முருகன் விடுதலை?

எம்.ஐ.முபாறக்

தமிழக சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு தேர்தல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன. இந்தமுறை எப்படியாவது அ.தி.முகவை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றி விடவேண்டும் என்ற முனைப்பில் திராவிடர் முன்னேற்றக் கட்சி (தி.மு.க.) தேசிய காங்கிரஸுடன் கூட்டணி அமைத்துள்ளது.

மறுபுறம், நடிகர் விஜயகாந்த் தலைமையிலான தேசிய முன்னேற்ற திராவிடர் கழகத்தை வளைத்துப் போடும் நோக்கில் ஆளுங்கட்சியான பா.ஜ.க. அந்தக் கட்சியுடன் பேச்சு நடத்தி வருகின்றது. மறுமலர்ச்சி திராவிடர் முன்னேற்றக் கழகமும் (ம.தி.மு.க.) இடதுசாரிக் கூட்டணிகளும் இணைந்து மக்கள் நலக் கூட்டணி என்ற ஒன்றை அமைத்துள்ளனர். நடிகர், இயக்குநர் சீமான் வேறு, நாம் தமிழர் கட்சி சார்பில் தனித்து நிற்கிறார்.

இந்த நிலையில், இந்த முறையும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அண்ணா திராவிடர் முன்னேற்றக்கழகம் (அ.தி.மு.க.) பலஅதிரடிநடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கான துருப்புச் சீட்டுக்களைத் தயார்ப்படுத்தி வருகின்றது.

அவ்வாறன துருப்புச் சீட்டுக்களுள் முதலிடத்தில் இருப்பது இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன், ராபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய 7 பேரின் விடுதலை விவகாரம்–

இவர்களின் விவகாரத்தைத் துருப்புச் சீட்டாகக் கொண்டு அ.தி.மு.க. இன்று தேர்தல் களத்தில் இறங்கியுள்ளது. இவர்களை விடுதலை செய்வதற்கு தமிழக அரசு தீர்மானித்து அதற்கான அனுமதியைக் கோரி இந்திய மத்திய அரசுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இது மிகவும் பலமான துருப்புச் சீட்டு. தமிழக அரசின் திட்டப்படி இவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் அது அ.தி.மு.கவுக்கு வெற்றிதான். அவ்வாறு விடுதலை செய்யவிடாமல் மத்திய அரசு தடுத்தாலும் அ.தி.மு.கவுக்கு வெற்றிதான். விடுதலை செய்யப்பட்டால் அதை வைத்து அ.தி.மு.க. வாக்குக் கேட்கும். விடுதலை செய்யப்படாவிட்டால் மத்திய அரசின் மீது பழியைப் போட்டு வாக்குக் கேட்கும்.

எது எப்படியோ, இந்த விவகாரம் ஏனைய கட்சிகளுக்குப் பெரும் தலையிடியாகவே உள்ளது. இதை ஆதரிக்கவும் முடியாது; எதிர்க்கவும் முடியாது. ஆதரித்தால் அ.தி.மு.கவுக்கு அது சாதகமாகப் போகும். எதிர்த்தால் மக்கள் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிவரும்.

உண்மையில், இந்தக் கைதிகள் மீது அக்கறை கொண்டுதான் மாநில அரசு இந்த முடிவை எடுத்ததா என்பது கேள்விக்குரியதே. இலங்கைத் தமிழர்கள் - புலிகள் தொடர்பில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆரம்பத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டையும் இப்போது கொண்டிருக்கும் நிலைப்பாட்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தக் கைதிகள் விடுதலையை ஜெயலலிதா அவ்வப்போது தனது அரசியலுக்குப் பயன்படுத்தி வருகிறார் என்பது வெளிப்படை. ஜெயலலிதா ஆரம்பக் காலத்தில் இருந்து புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருந்தார். அது மாத்திரமன்றி,

> இவர்களின் விவகாரத்தைத் துருப்புச் சீட்டாகக் கொண்டு அ.தி.மு.க. இன்று தேர்தல்களத்தில் இறங்கியுள்ளது.

அப்போது இலங்கை தமிழர் விவகாரத்திலும் அவர் அக்கறை எடுத்திருக்கவில்லை.

புலிகள் தொடர்பிலும் ஈழத் தமிழர்கள் தொடர்பிலும் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ஜெயலலிதா பின்பு அரசியல் இலாபம் கருதி அந்த நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். இலங்கை அரசுக்கு எதிராக - தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படத் தொடங்கினார்.

தமிழகத்தில் இருக்கின்ற சிறிய கட்சிகள் முதல் பெரிய கட்சிகள் வரை இலங்கைத் தமிழரின் விவகாரத்தை அரசியல் துருப்புச் சீட்டாகக் கையில் எடுக்கத் தொடங்கியமைதான் ஜெயலலிதா தனது நிலைப்பாட்டை இலங்கைத்தமிழருக்கு ஆதரவாக மாற்றிக் கொண்டமைக்குக் காரணம் என்று சொல்லலாம். தமிழக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி மற்றொரு காரணம்.

2011இல் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அவர் கடும் அக்கறை காட்டத் தொடங்கினார். இலங்கைக்கு எதிராக பொருளாதார தடையைக் கோரி இரண்டு தடவைகள் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.

இவ்வாறு இலங்கைத் தமிழருக்கு ஆதரவானநிலைப்பாட்டை எடுக்கத் தொடங்கிய ஜெயலலிதா, ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளின் விவகாரத்தையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கினார்.

2011இல் அந்தக் குற்றவாளிகளான பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன் ஆகியோரைச் சாவுத் தண்டனை கொடுக்க அப்போதைய மத்திய அரசு முயற்சித்தபோது அதற்கு எதிராக - அவர்களது விடுதலையைக் கோரி ஜெயலலிதா சட்டமன்றத்தில் ஒரு மனதாக ஒரு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்.

1999ஆம் ஆண்டு நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு சாவுத் தண்டனையும் ஏனைய மூவருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டபின், 2014 ஆம் ஆண்டு நால்வருக்குமான சாவுத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. தமிழக அரசு விரும்பினால் அவர்களை விடுதலை செய்ய முடியும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதற்கு ஏற்ப இவர்களை விடுதலை செய்யப்போவதாக ஜெயலலிதா அரசு மத்திய அரசுக்கு அறிவித்தது. ஆனால், மத்திய அரசு உயர் நீதிமன்றத்தை நாடி தமிழக அரசின் தீர்மானத்துக்கு முட்டுக்கட்டை போட்டது. இப்போது இந்த விவகாரத்தை தமிழக அரசு மீண்டும் கையில் எடுத்துள்ளது. அவர்களை விடுதலை செய்யப் போவதாக மத்திய அரசுக்கு எழுத்து மூலம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜெயலலிதாவின் கடந்தா கால செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது தெளிவான அரசியல் நோக்கம் கொண்டது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

ஆகவே, இன்று அ.தி.மு.கவின் தேர்தல் துருப்புச் சீட்டாக மாறி இருப்பது ராஜீவ் காந்தி கொலையாளிகளின் விடுதலை விவகாரம் தான். தேர்தலுக்கு முன் இவர்கள் விடுதலை செய்யப்பட வில்லை என்றால் தேர்தல் முடிந்து இந்த விவகாரம் அப்படியே கிடப்பில் போடப்பட்டு விடக்கூடும். அப்படியல்லாமல் அ.தி.மு.க. இந்த விடயத்தில் இயதசுத்தியுடன் செயற்பட்டு அவர்களை விடுவிக்க வேண்டும். அதுவே தமிழர்களின் எதிர்பார்ப்பு.

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# வளங்கள் இருந்தும் கையேந்தும் இலங்கைத் திருநாடு

இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் தீவு என அழைக்கப்பட்டு வருகின்றது. ஒரு நாடு கடல் வளங்களைக் கொண்டிருப்பதானது பல வகையிலும் சிறப்புக்குரியது.

இலங்கையைப் பொறுத்தவரையில் வனப்பும், வளமும் மிக்க மலைப்பிரதேசங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள மலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைக்கு வெளிநாடுகளில் பெரும் மதிப்பு உண்டு. அதிலும் உயர்ந்த மலைப் பிரதேசங்களில் பயிரிடப்படுகின்ற தேயிலை தரத்தில் மிகவும் உயர்வான இடத்தைப் பிடிக்கின்றது. இதனால் இதன் விலையும் உயர்ந்து காணப்படுகின்றது. தேயிலையை விட இறப்பர், மிளகு, வாசனைத் திரவியங்கள், கொக்கோ, கோப்பி ஆகியனவும் இந்தப் பிரதேசங் களில் பயிரிடப்படுகின்றன.

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து கூலித்தொழிலாளர்களாகக் கப்பல்களில் ஏற்றி வரப்பட்ட தமிழர்கள் காடுகள் மண்டிக் கிடந்த மலையகத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றி அமைத்தார்கள். அப்போது ஆங்கிலேயரின் கீழ் இந்த நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. இதனால் இந்த மக்களும் அடிமைகளாக நடத்தப்பட்டனர். குறைந்த ஊதியம், அளவுக்கு மிஞ்சிய வகையில் வேலை. இவர்களுக்கெனத் தொடராக அமைக்கப்பட்ட தகரத்திலான குடியிருப்புக்கள் மனிதர்கள் வசிப்பதற்கு லாயக்கற்றவையாக இருந்தன. இவர்களின் அவலம் இன்ன மும் தொடர்வதுதான் மனதை உறுத்து கின்றது. விவசாய நாடு என்ற வகையில் அந்நியரின் வருகைக்கு முந்திய காலப் பகுதியில் நாட்டை ஆட்சி புரிந்த மன்னர் கள் நீர்ப்பாசனக் குளங்களை அமைத்து விவசாயத்தை மேம்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டினார்கள். இதனால் நாடு ஒரு நெற்களஞ்சியமாகக் காணப் பட்ட துடன் உணவிலும் தன்னிறைவு பெற்று விளங்கியது. அன்று மன்னர்களால் அமைக்கப்பட்ட மிகப்பெரிய குளங்கள் இன்றும் காணப்படுகின்றன. ஆனாலும் அந்நியர்களின் வருகை நாட்டின் அடித் தளத்தையே மாற்றி அமைத்துவிட்டது.

போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆங்கிலேயர் இந்த மண்ணில் 1802 ஆம் ஆண்டு காலடி எடுத்து வைத்தனர். இவர்களின் ஆட்சி 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. ஆனால் இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் நாட்டில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. இதில் காசுப் பயிர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதும், விவசாயத்துறை இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டதும் முக்கியமானவை. இதைப்போன்று தான் தமக்கெனத் தனியரசுகளை நிறுவி ஆட்சிபுரிந்த தமிழர்கள் தமது தனித்துவத்தை இழந்தது மட்டுமல்லாது ஓர் அடிமை இனமாகவும் மாற்றப்பட்டனர். நாடு சுதந்திரம் பெறும் வரையில் அந்நிய ஆட்சியாளர்களுடன் நெருக்கமாக இருந்து செயற்பட்ட தமிழ்த் தலைவர்கள் தமது இனத்துக்கு எதிர் காலத்தில் ஏற்படப்போகின்ற அவலநிலை தொடர்பாகச் சிறிதும் சிந்தித்துப் பார்க்கவில்லை. இவர்கள் விட்டுச் சென்ற தவறுகளின் விளைவு களைத்தான் இன்று தமிழர்கள் அறு வடை செய்து வருகின்றனர். இலங்கையை ஒரு கண்ணீர்த்துளியுடன் ஒப்பிட்டுப் பாடினான் கவிஞன் ஒருவன். உருவத்தில் கண்ணீர்த் துளிக்கு ஒப்பான இலங்கையில் சிந்தப்பட்ட கண்ணீர்த் துளிகளைச் சேகரித்தால் ஒரு கடலையே உருவாக்கிவிட முடியும். இதில் தமிழர்களின் பங்குதான் மிகவும் அதிகமானது. நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தமிழர்கள் கண்ணீர் சிந்தியே களைத்துப் போய்விட்டார்கள்.



> சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து கூலித்தொழிலாளர்களாகக் கப்பல்களில் ஏற்றி வரப்பட்ட தமிழர்கள் காடுகள் மண்டிக் கிடந்த மலையகத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றி அமைத்தார்கள்.

கடல் என்று கூறும் போது, அங்கும் தமி ழர்கள் எதிர்கொள்கின்ற இன்னல்கள் மனதில் நிழலாடுகின்றன. பல வகையிலும் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிலையை எண்ணி இயற்கைத்தாய் மனம் இரங்கியதாலோ என்னவோ வட கடலின் மீன் வளத்தை அள்ளிக் கொடுத்திருக்கின்றாள். தமிழர்கள் பாரம்பரியமாகத் தமது பிரதேசத்தில் உள்ள கடல் அன்னை யின் மடியில் தவழ்ந்து விளையாடிய அந்தக் காலத்தை நினைவு கூருகின்றனர். ஆனால் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இதே கடலில் தான் எண்ணிக்கை தெரியாத தமிழர்களின் உயிர்கள் கரைந்து போயின. போர் ஓய்ந்த நிலையிலும் அவர்கள் நிம்மதியாகத் தொழில்புரிவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகவில்லை. பழம் இருக்கு மிடத்தை நாடி வரும் வெளவால் கூட் டத்தைப் போன்று வட பகுதிக் கட லின் மீன் வளத்தை தேடிவருகின்ற இந்திய மீனவர்களும், தென்பகுதிச் சகோதர இன மீனவர்களும் தமிழ் மீனவர்களுக்குப் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் தமது தொழில் முயற்சிகளை இவர்கள் இழந்து நிற்கின்றனர். இந்திய மீனவர்களும் இனத்தால் தமிழர்கள் என்பது தான் வேதனை தருகின்ற விடயமாகும். ஆனால் தாயும் பிள்ளையும் என்றா லும் வாயும் வயி றும் வேறு என்பது தான் யதார்த்தை உணர்த்தி நிற்கின்றது.

ஒருமுறை இங்கு வந்த சிங்கப்பூர் நாட்டின் சிற்பியான லீ குவான் யூ இலங்கையைப் போன்று சிங்கப்பூரை மாற்றுவதற்கு முயற்சிசெய்வேன் எனக்கூறிச்சென்றார். அவர் இதைக் கூறி ஆண்டுகள் பல கடந்துவிட்டன. இன்று சிங்கப்பூரை எட்டிப் பிடிக்கும் நிலையில் கூட இலங்கை இல்லை. மிகச்சிறிய நிலப்பரப்பில் அமைந்துள்ள அந்த நாடு உலகின் அதிசயமாக இன்று பார்க்கப்படுகின்றது. ஒரு தமிழன், இது எனது தாய்நாடு என்று கூறுவதற்கான உரிமையில் கூட இனவாதிகள் தடையாய் நிற்கின்றனர். தேசியகீதம் சிங்கள மொழியில் பாடப் படும்போது இலங்கை அன்னையின் புகழ் ஓங்கி நிற்கும் அதே வேளை, தமிழ் மொழியில் பாடப்படும்போது தாழ்ந்த நிலைக்குச் செல்கின்றதா? இல்லையே! சிங்கள மொழியில் உள்ள கருத்துக்கள் தான் தமிழிலும் ஒலிக்கின் றன. ஆனால் இனவாதிகள் இதற்கும் தடைபோட்டு நிற்கின்றனர். இந்த நிலையில் தேசிய உணர்வை பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் எதிர்பார்க்க முடியாது.

ஆகவே இந்த நாட்டில் வாழுகின்ற சகல இனத்தவர்களும் ஒரே தாயின் பிள்ளைகளே என்ற உணர்வு வளர்க்கப்பட வேண்டும்.

எந்த இனத்துக்கும் வேறொரு இனம் தாழ்ந்ததல்ல என்பது நிரூபிக்கப்பட வேண்டும். உள்ளதே இரண்டு மொழிகள். அவற்றுக்கிடையில் வேற்றுமை வளர்ப்பது சரியா?

## இதையும் கவனிப்பார்களா?

எம் ஈழ மண்ணில், வீரமறவர்களின் விதைப்பில் விளைந்த வீரம் செறிந்த எமது தேசத்தில் அவர்களுடைய வீரம், கலாசாரங்கள், கட்டுப்பாடுகள் உச்ச நிலை பெற்றிருந்தன என்று வர்ணித்துக் கொண்டே போகலாம். இதில் எந்தவித ஐயமும் இல்லை. அவர்களுடைய மெளனிப்பு 2009இல் நிகழ்ந்துவிட்ட போதிலும், தற்போது எமது மண்ணில் அரங்கேறி இடம்பெறுகின்ற கலாசாரச் சீரழிவுகளின்போது இவர்களுடைய நாமம் எல்லோருடைய நாவிலும் உச்சரிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் உல்லாச விடுதி ஒன்றில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்கு நிகழ்வுக்குச் சென்ற அனைவருக்கும் இருக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். திருமணத் தம்பதியினருக்கும் அவர்களுக்கான சம்பிரதாய நிகழ்வுகளும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஒரு பக்கம் இசைக்குழு தனது இசையால் எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தது. நானும் இவற்றைப் பார்த்து மகிழ்ச்சியில் திளைக்காமல் இல்லை. இந்த நேரத்தில் தான் இசைக்குழுவின் அறிவிப்பாளரால் ஓர் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. மதுப் பிரியர்களுக்கான அன்பான அறிவித்தல். உங்களுக்கான மதுபானச்சாலை திறக்கப்பட்டுள்ளது என்று. நான் திகைத்துப்போய்விட்டேன். இதற்குமா அறிவிக்கின்றார்கள்? சிறிது நேரத்தில் பார்த்தால் நான் அமர்ந்திருந்த மேசைக்குப் பக்கத்தில் தான் மதுப் பிரியர்களுக்கான மதுபானம் வழங்கப்படுகின்றது. அந்த அரங்கே ஒரு கணம் திகைப்படைந்தது. ஏனெனில் பாடசாலை செல்லும் மாணவர்கள், இளம்பெண்கள், குடும்பமாய் வந்தவர்கள் எல்லோர் முன்னிலையிலும் இளம் வட்டங்கள் தமது சுவைப்பொருள்களைச் சுவைத்துக் குடிப்பதைப் பார்த்து! பார்த்தீர்களா எமது கலாசாரம் எங்கே போகிறது. மதுவை எதிர்த்து எத்தனை பரப்புரைகளை மேற்கொள்கின்றார்கள். இங்கே அரங்கில் ஓர் இடத்தை ஒழுங்குபடுத்தி இருந்தால் கூட பரவாயில்லை. நாம் மேலைத்தேய கலாசாரத்துடன் பின்னிப் பிணைய ஆரம்பித்துள்ளோமா என அஞ்சத்தோன்றுகின்றது. எனவே இது போன்ற கலாசார சீர்கேட்டில் இருந்து எமது தமிழ்ச் சமூகத்தைக் காப்பாற்ற சம்பந்தப்பட்டவர்கள் முயல்வார்களா?

– வலிகாமத்தான்

## மல்லாகம் ரயில் நிலையத்துக்கு விமோசனம் கிடைக்குமா?

மல்லாகம் ரயில் நிலையம் நாம் அறியாத காலத்தில் பெரிய ரயில் நிலையமாக காணப்பட்டதென எமது முன்னோர்கள் கூறுவதை காதால் கேட்கின்றோம். அதாவது போருக்கு முன்னர் ரயில் நிலையம், நிழற்குடைகள், ஆசனங்கள் போன்றவை மக்களை நிம்மதியாக பயணம் மேற்கொள்ள உதவின. பின்னர் எல்லாம் அழிவடைந்து ரயில் நிலையம் எது என்று கேட்கும் அளவுக்குக் காணப்பட்டது. அதன் பின்னர் போர் முடிவுற்று அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னர் நிழற்குடைகள் இல்லாத ரயில் நிலையங்கள் கூட மக்களை இப்போது பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் மல்லாகம் ரயில் நிலையத்தில் நான்கு கதிரைகள் மட்டுமே காணப்படுகின்றன. அதைவிடப் பெரிய ஒரு குறைபாடு, மலசல கூட வசதிகள் எதுவுமில்லை. இதனால் மக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். இவற்றைவிட நிழற்குடைகள் என்பது மிக முக்கியமானவை. பயணிகள் ரயிலில் ஏறுவதற்குள் மழை வந்தால் என்ன செய்வது? அதுவும் ஒரு வாகனப் பின் பெட்டியை ஒரு காரியாலயமாக வைத்திருக்கின்றார்கள். குடையில்லாதவர்கள் மழைக்கு என்ன செய்வது? அந்த அலுவலகத்துக்குள் போய் நிற்க வேண்டும். அதற்குள்ளும் எத்தனை பேரென்று நிற்பது. அன்றொரு நாள் அதிகாலை ரயிலில் செல்வதற்காக அங்கு பயணச்சீட்டை பெற்றுவிட்டு நின்றேன். இருக்க இடமில்லை. மழை வந்துவிட்டது. எல்லோரும் அவதிப்பட்டார்கள். உடனே அங்கிருந்த பயணச் சீட்டு வழங்குபவர் உள்ளுக்கு வந்து நில்லுங்கோ–என்றார். உள்ளே போனால் எத்தனை பேர் அங்கு நிற்பது. சில பேர் மழையில் நனைந்த வண்ணம் கால் நடுங்க நின்றார்கள். சிலர் அது தமது தலைவிதி என நின்றார்கள். இப்படியான நிலைமை எமக்கு வேண்டுமா? ரயில் நிலையத்துக்கு கொட்டகை வரும் என எதிர்பார்க்கிறேன். உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பயணிகளை இயற்கையிலிருந்து பாதுகாப்பதற்கு ஆவன செய்யுமாறு போக்குவரத்து அமைச்சரை மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

– பாதிக்கப்பட்ட ஒருவர்
மல்லாகம், ஏழாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈமெயிலை உருவாக்கிய ரேய் ரொம்லின்சன் மறைவு

வொசிங்டன், மார்ச் 8
ஈமெயிலை உருவாக்கிய ரேய் ரொம்லின்சன் தனது 74 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார். 1971 ஆம் ஆண்டு நேரடியான ஈமெயில் தகவல்களை பகிரும் தொழில் நுட்பத்தை அவர் அறிமுகப்படுத்தினார்.

அவரது கண்டுபிடிப்புக்கு முன்னதாக, குறிப்பிட்ட வலையமைப்புகளில் மாத்திரம் இலத்திரனியல் தகவல்கள் பரிமாற்றப்பட்டு வந்தன. @ எனும் குறியீட்டைக் கண்டுபிடித்தவர் இவர் ஆவர். பொஸ்ரன் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கையில், கணினி மூலம் தகவல் பரிமாறப்படுவது தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்தினார்.

ஆனால் அந்தக் காலத்தில் பாவிக்கப்பட்ட கணினிகள் வடிவத்தில் மிகவும் பெரியவை என்பதுடன், மிகவும் விலை உயர்ந்தவையாகவும் இருந்தன. அவற்றை இயக்க ஒரு அறை தேவைப்பட்டது. அக்கால கட்டத்தில் ஈமெயிலில், மெயில் பொக்ஸ் அமைப்பது மிகவும் சிக்கலான நெறிமுறையாக இருந்தது. அதற்குத் தீர்வாக @ குறியீடு பயன்பட்டது. இருப்பிடத்தையும், நபரையும் அறியும் @ எனும் குறியீட்டை இவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கினார்.

கண்டுபிடிப்பு தொடர்பில் ரொம்லின்சன் கருத்துத் தெரிவிக்கையில், தொலைபேசியும் சிறந்தது தான். ஆனால் மக்கள் பல் வேறுபட்ட தேவைகளுடன் மக்கள் தொடர்பாடல்களைப் பேண விரும்புகின்றனர். அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஈமெயில் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். அது கண்டுபிடிக்கப்பட்டு 20 வருடங்களாக மக்களுக்குப் புரியாத விடயமாகக் கருதப்பட்டது. அமெரிக்காவில் ஈமெயிலின் பாவனை பரவலாக பரவ ஆரம்பித்தது.

2013 ஆம் ஆண்டு 3.9 பில்லியன் ஈமெயில் கணக்குகள் இருந்ததாக, அவதானக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)





மேற்கு சிட்னியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதுடன். இருவர் காயமடைந்துள்ளன[...] பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டுக் காயத்தால் துவண்ட 3 வர்த்தகர்கள் பொலிசாரால் ம[...] இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது . தாக்குதல் நடத்தியவர் தொழிற்சாலைக்குள் இருப்பதாகப் பொலிஸ[...] வேறு தகவல்களை வெளியிடவும் மறுத்துவிட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

## பெண்கள் பேரணியில் மோசமான வன்முறை

இஸ்தான்புல், மார்ச்.8
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு துருக்கியில் இடம்பெற்ற பெண்கள் பேரணி இறுதியில் வன்முறையில் முடிவடைந்தது. மத்திய இஸ்தான்புல்லில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். துருக்கியில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் குறித்து கவனத்தில் ஈர்க்கும் பொருட்டு இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

துருக்கியில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களில் ஐ.நாவின் ஒழுங்கில் துருக்கி 77 ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

சமூக, பொருளாதார நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு துருக்கியில் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பேரணியைக் கலைக்கப் பொலிஸார் ரப்பர் குண்டுத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர். (த-ரி4)



# கூட்டுப் பயிற்சி நட[...] அணு ஆயுதத்தால் [...]

## தென் கொரியாவுக்கும் அமெரிக்கா[...] வடகொரியா கடுமையான எச்சரிக்[...]

பியொங்யாங், மார்ச் 8
அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து கூட்டுப் பயிற்சி நடத்தத் திட்டமிட்டுள்ளன. அவ்வாறு கூட்டுப் பயிற்சி நடக்குமாயின் அணு ஆயுதத் தாக்குதலை நிகழ்த்துவோம் என வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது. இந்த அறிவிப்பை வடகொரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

போவல் ஈகிள் என்று அழைக்கப்படும் இந்தப் பயிற்சியில் அமெரிக்காவில் இருந்து 17 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தென்கொரிய வீரர்கள் உட்பட ஆயிரக் கணக் கான சிப்பாய்கள் கலந்து கொள்ளவுள்ளனர். வடகொரியாவைத் தமது இறையாண்மையைக் கட்டுக்குள் கொண்டு வர இவ்வாறான பயிற்சிகள் இடம்பெறுவதாக வடகொரியா அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டில் வடகொரியா அணுகுண்டுச் சோதனையை நடத்தியதால் அந்த நாட்டின் மீது ஐ.நா. சபை பொருளாதாரத் தடைகளை விதித்தது.

ஹைட்ரஜன் குண்டு, ஏவுகணைச் சோதனைகளுக்கு அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்பட உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. வடகொரியாவின் நட்பு நாடுகளான சீனாவும் ரஷ்யாவும் கூட அதிருப்தி வெளியிட்டன. இதைத் தொடர்ந்து வடகொரியாவுக்கு எதிராகக் கடுமையான பொருளாதாரத் தடை களை விதிப்பது குறித்து ஐ.நா. பாது காப்புக் கவுன்சிலில் கடந்த வாரம் முக் கிய ஆலோசனை நடத்தப்பட்டது.

மொத்தம் 15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புக் கவுன்சிலில் வடகொரியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன்படி உணவு, மருந்துப் பொருள்களைத் தவிர்த்து அந்த நாட்டுக்கு வேறு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வட கொரியாவின் மீது கடுமையான பொரு ளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் வடகொரியாவின் சரக்குக் கப்பலைப் பிலிப்பைன்ஸ் பறிமுதல் செய்து துறைமுகத்தில் இருந்து வெளியேற்ற மறுத்து விட்டது.

வடகொரியாவின் 6830 தொன் எடை கொண்ட ஜின் டெங் சரக்கு கப்பல் பிலிப்பைன்ஸின் சுபிக் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. இதை அந்த அரசு பறிமுதல் செய்துள்ளது. அத்துடன் துறைமுகத்தில் இருந்து வெளியேற அனுமதிக்



கவும் மறுத்துவிட்[...]
கடந்த வாரம் சியா[...]
கொடியுடன் பிலிப்[...]
வந்தமை குறிப்பிட[...]
கடுமையான [...]
புக்குப்பின் வடகொ[...]
முதல் தடை இதுவா[...]
31 கப்பல்கள் இந்த[...]
ஐ.நா. தீர்மான[...]
அடுத்த சில மணி[...]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



...டைந்துள்ளனர் எனப் பொலிசார் தெரிவித்தனர். இங்லெபேர்ன் தொழிற்சாலைப் ...பாலிசாரால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், ...ாகப் பொலிஸார் கருதியதால் அதனைச் சுற்றிவளைத்ததுடன், அது குறித்து ...நிலவியது. (த-ரி4)

# ஐ.எஸ். தற்கொலைப் படையினர் சோதனைச் சாவடியில் தாக்குதல்

## ஈராக்கில் 47 பேர் சாவு

பக்தாத், மார்ச் 8

ஈராக்கில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியொன்றில் ஐ.எஸ். அமைப்பினர் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 47 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்புப் பொறுப்பேற்றுள்ளது. ஹில்லா நகர வாயிலில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில், ட்ரக்கில் வந்த குண்டுதாரிகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது என அவர்களது இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் அதிக அளவிலான வாகனங்களும், பொதுமக்களும் குழுமி இருந்தனர். உயிரிழந்தவர்களில் 39 பேர் பொது மக்கள் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த பகுதி போராளிகளின் தாக்குதலுக்கு இலக்கு வைக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். தாக்குதல் இடம்பெற்ற பகுதி பொலிஸ் நிலையத்திற்கு அண்மித்த பகுதியாகும். இந்தத் தாக்குதலில் வாகனங்கள், வீடுகள் என்பவற்றுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. பல பொதுமக்கள் தீக் காயங்களுக்கு ஆளாகினர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த மாதத்தில் பக்தாத்தின் புறநகர் பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்தன. இவற்றில் பெரும்பான்மையானவை ஐ.எஸ். அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டவையாகும்.

கடந்த மாதத்தில் மாத்திரம் விட்டுவிட்டு இடம்பெற்ற தாக்குதல்களில் 170 பேர் கொல்லப்பட்டிருந்தனர். ஐ.நாவின் அறிக்கையின் படி ஈராக்கில் கடந்த மாதம் மாத்திரம் 670 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் பொதுமக்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி4)

# ...நடக்குமாயின் ...ல் தாக்குவோம்

## ...ங்காவுக்கும் ...ரிக்கை



...மறுத்துவிட்டது. இந்தக் கப்பல் ...வாரம் சியாரோ லியோன் நாட்டின் ...புடன் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு ...மை குறிப்பிடத்தக்கது.

...யான பொருளாதாரத் தடை விதிப் ...பின் வடகொரியாவுக்கு எதிரான ...தடை இதுவாகும். வடகொரியாவின் ...ல்கள் இந்தப் பட்டியலில் உள்ளன. ... தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ...5 சில மணி நேரங்களில் கொரிய தீபகற்பப் பகுதியில் 6 ஏவுகணைகளை வடகொரியா அடுத்தடுத்து ஏவியது. குறைந்த தொலைவு பாயும் திறன் கொண்ட அந்த ஏவுகணைகள் கடலில் விழுந்து வெடித்துச் சிதறின. அமெரிக்கா மற்றும் தென்கொரியாவுக்கு நேரடியாக எச்சரிக்கை விடுக்கும் வகையில் வடகொரியா இந்த ஏவுகணைகளை கடலில் வீசியிருப்பதாக பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-ரி4)

வாழ்க்கையை வெற்றி கொள்ள உங்களுக்கும் முடியும்!



நான் பெருமளவு சவால்களுக்கு முகங்கொடுத்து வாழ்க்கையை வெற்றி கொண்ட ஒரு யுவதி. கனவுகளையும் இலக்குகளையும் எய்தி வெற்றியீட்டிய ஒரு வெற்றியாளர். அதற்கு, எனக்கு பக்கபலமாக இருந்தது **யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனமாகும்.**

ஆசிரியை என்பதைப் போல, அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர் எனும் வகையில் குறைந்த சம்பளத்துக்காக பணியாற்றிய எனக்கு வாழ்க்கையில் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ளவும், வரையறைகளற்ற வருமானத்தையும், சுதந்திரத்தையும், முறையான பயிற்சி, நட்புறவு மற்றும் தொழில்புரிய பொருத்தமான சூழலில் சமூகத்துக்கு சேவையாற்றக்கூடிய கௌரவமான தொழிலும் வெற்றிகரமான வாழ்க்கையும் பெற்றுக் கொடுத்தது யூனியன் அஷ்யூரன்ஸ் தான்.

யுவதி எனும் வகையில் நான் இன்று என்னைப் போன்று வெற்றியை நோக்கி பயணிக்கும் ஏனைய பெண்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கும் ஒரு தலைவி.

**உங்களுக்கும் என்னைப் போல வெற்றி அடைய முடியும்எனது வாழ்க்கை கதையை பார்வையிடுங்கள்**

YouTube https://www.youtube.com/watch?v=_RZmy698HMI

மகேந்திரன் கோமதி

முகவர் அபிவிருத்தி அதிகாரி
சிறந்த அபிவிருத்தி அதிகாரி வெள்ளி விருது 2013
சிரேஷ்ட பிரத்தியேக நிதி ஆலோசகர் 2012

Union Assurance PLC. PQ 12

யூனியன் அஷ்யூரன்ஸ்

அழையுங்கள் 0770 501501

நீங்களும் என்னைப் போல வெற்றி அடைய முடியும்



வாழ்க்கை என்பது ஒரு நொடியில் வெற்றியீட்டக்கூடிய விடயம் அல்ல என்பது எனக்கு தெரிய வந்தது. ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்ட சந்தர்ப்பங்களிலாகும். அந்த சவால்களை வெற்றியீட்டுவதற்கு கட்டாயமாக தொழில் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனும் நிலைக்கு நான் தள்ளப்பட்டேன். உயர் கல்வியை பெற்றுக் கொள்ள எனக்கு காணப்பட்ட அதீத ஆசை, அதற்காக எனக்கு பெருமளவு நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது. பெற்றோருக்கு மேலும் சுமையாக இருக்காமல், வாழ்க்கையை வெற்றி கொள்வது எவ்வாறு என நான் சிந்தித்தேன். அந்த கால கட்டத்தில் எனக்கு ஒரு ஆசிரியராக பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. கொஞ்ச காலம் அந்த தொழிலை மேற்கொண்டாலும், கிடைத்த வருமானம் போதியதாக அமைந்திருக்கவில்லை. அதன் பின்னர், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பெருமளவானவற்றில் நான் ஊழியராக கடமையாற்றினேன். ஆனாலும் எனக்குள்ளிருந்த கனவுகள் அப்படியே இருந்தன. இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு **யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்துடன்** இணைந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தது.

செய்ய வேண்டிய சகல வேலைகளையும் மிகவும் எளிமையான முறையில் சிறந்த முறையில் அறியத்தந்திருந்தனர். பயிற்சிகளின் போது போதிக்கப்படும் பெருமளவான விடயங்கள் எமது நாளாந்த வாழ்க்கைக்கும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்துள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸுடன் இணைந்து கொண்ட பின்னர், நான் எனது கனவுகள், எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொண்டேன். உயர் கல்வியைப் பெற்றுக் கொள்ள எனக்குள் இருந்த ஆசையை நான் நிறைவேற்றிக் கொண்டேன். நான் தற்போது LLB கற்கையை தொடரும் ஒரு மாணவி ஆவேன். தொழிலை மேற்கொள்ளும் போதே, இந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ள எனக்கு சுதந்திரம் உள்ளது. தொழில்நிலையில் எனக்கு முன்நோக்கிப் பயணிக்கவும் உதவியாக அமைந்துள்ளன. காப்புறுதி ஆலோசகராக இணைந்து கொண்ட நான், சிறிது காலத்தில் பிரத்தியேக நிதி ஆலோசகராக பதவியுயர்ந்திருந்தேன். அபிவிருத்தி அதிகாரி எனும் நிலையில் நான் இன்று பணியாற்றுகிறேன். இது அதிகளவு பொறுப்புகளைக் கொண்ட நிலையாகும். இன்று நான் வாழ்க்கையை வெற்றி கொள்ள முயற்சி செய்யும் மனைவிமார், தாய்மார், யுவதிகள் ஆகியோரைக் கொண்ட அணிக்கு தலைமைத்துவத்தை வழங்கும் தலைவியாவேன். அவர்களின் வாழ்க்கையை வெற்றிபெறச் செய்வது தான் இன்று எனது பொறுப்பாக அமைந்துள்ளது. நான் அதற்காக மிகவும் மகிழ்ச்சியுடன் அர்ப்பணித்துள்ளேன்.

தொழில் வாழ்க்கையில் மேல்நோக்கி செல்வதைப் போல, நாளாந்தம் எனது வருமானத்தையும் அதிகரித்துக் கொள்ள **யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினுள்** எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. நான் இன்று வரையறைகளற்ற வருமானத்தைப் பெறுகிறேன். அதுபோலவே, மலேசியா, இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. நிறுவனத்தினுள்ளேயும் கௌரவிப்புகளைப் பெற்றுள்ளேன்.


இந்த சகல விடயங்களையும் போல, நான் அதிகளவு மகிழ்ச்சியடைவது கௌரவமான தொழிலில் ஈடுபடுவதுடன் சமூகத்துக்கு சேவையாற்ற எனக்குக் கிடைத்த வாய்ப்பை எண்ணியாகும். யூனியன் அஷ்யூரன்ஸுடன் இணைந்து கொள்ளாவிடின், இந்த விடயங்கள் இன்னமும் எனது வாழ்க்கையில் வெறும் கனவுகளாகவே அமைந்திருக்கும். எனது வெற்றியின் அடித்தளம் யூனியன் அஷ்யூரன்ஸ்.

நீங்கள் யுவதியாக இருந்தாலும், மனைவியாக இருந்தாலும், தாயாக இருந்தாலும், எந்தவொரு பின்னடைவை எதிர்நோக்கியிருந்தாலும் என்னைப் போன்று ஒரு உண்மைக் கதையின் உருவமாக திகழுவதற்கு,

வாருங்கள். அழையுங்கள் 0770 501 501
அல்லது உங்கள் பெயர் மற்றும் வசிக்கும் நகரத்தை SMS செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே



## நீ உணர்வாயா?

மகளிர்தினம்வரும்போதெல்லாம்பெண் விடுதலை பற்றிய குரல் ஓங்கி ஒலிப்பது ஓர் ஆரோக்கியமான நிலைமை எனினும், அடுத்த மகளிர் தினம்வரும் வரை அது அடக்கி வாசிக்கப்படுவதும் ஒரு தொடர் அவதானிப்பாகவுள்ளது.

ஆணாதிக்க சமுதாயக் கட்டமைப்பு ஓராயிரம் ஆண்டுக்கு மேலாக பாரம் பரியமாகத் தொடர்ந்துவரும் நிலையில், பெண் சமத்துவத்தை எட்டுவதென்பது ஒரு நாளுக்குள் நிகழக்கூடிய விடயமல்ல.

ஒட்டுமொத்த சமூகத்திலுள்ள இருபாலாரினதும் மனதில் புரையோடிப் போயிருக்கும் ஆணாதிக்கச் சிந்தனைகள் பசுமரத்து ஆணிபோல் இறுகப் பதிந் துள்ள நிலையில், சிந்தனைகளில் துரித மான மாற்றத்தைக் கொண்டு வருத லென்பது இலகுவான காரியமல்ல.

எனினும், கடந்த நூற்றாண்டிலிருந்து பெண் விடுதலை நோக்கிய பயணம் விரிவடைந்து பயணிப்பதை மறுப்பதற்கில்லை. பெண்ணியவாதிகளின் முன்னெடுப்புக்கள் பல்வேறு தடைகளைத் தாண்டி எழவேண்டியுள்ள இன்றைய நிலையில், சறுக்கு மரமேறும் முயற்சியாகப் பெண்விடுதலைப் பயணம் இலக்கை நோக்கிப் பயணிக்கின்றது.

தடைக்கற்களைத் தாண்டி வெற்றிப் படிகளில் ஏறும் பெண்களை, ஆணாதிக்கப் பாம்புகள் மறுபடியும் கீழுக்கு இழுத்து விடுகின்றன. இந்த நிலையில் பெண் விடுதலைப் பயணம் என்பது வெற்றியளிக்க வேண்டுமானால் ஆணாதிக்க மனங்களை வெல்ல வேண்டியமை முதற்பணியாகும்.

பெண் விடுதலையையும், பால் சமத்துவத்தையும் எட்டவேண்டுமானால், முதலில் பெண்கள் தமதளவில் தெளிவு பெற்று விழிப்புற வேண்டும். பெண்கள் தமது இருப்பை உணராதவரை பால் சமத்துவத்தை எட்டுவதென்பது பகற்கனவே ஆகும்.

ஆணாதிக்கப் போலிகளின் மூடுதிரைக்குள் தமது நிலையை உணராது கீழ் நிலைப் பட்டிருக்கின்ற பெண்ணினத்தின் சகல மட் டத்தில் உள்ளவர்களும், தமக்கு சமத்துவமான நீதியான வாழ்வு இந்த உலகில் கிட்டவில்லை என்பதை முதலில் உணரவேண்டும்.

படித்துப் பட்டம் பெற்று, பதவி நிலைகளில் உயர்ந்து விட்ட பெண்களில் கூட, இன்னும் கணிசமானோர் தமது சமத்துவமற்ற நிலையை உணர்ந்து கொள்ளாதவர்களாக இருக்கும்போது, விளிம்பு நிலை மாந்தர்கள் பற்றிச் சொல்லவா வேண்டும்? பெண் விடுதலைப் பயணத்தின் முதற் தேவையாக உள்ளது விழிப்புணர்வே ஆகும்.

பெண்கள் தம்மை அழகு தேவதைகளாக நினைக்கும் நிலை முதலில் மாற வேண்டும். பொன்னும் புடைவையும் இருந்தால் போதும், என்கின்ற நினைப்பை வேரோடு அறுத்தெறிய வேண்டும். ஆண்கள் பெண்களைப் பாலியல் பதுமைகளாகவும்,தமது தேவைகளை நிறைவேற்றுபவர்களாகவும் நினைக்கின்ற எண்ணத்தை மாற்ற வேண்டுமானால், பெண்கள் முதலில் ஆண்களின் மனதில் சமத்துவ சிந்தனையை உணர வைக்கவேண்டும்.

இன்றும் பல பெண்கள் தாம் இரண்டாம் பட்சமாக இருப்பதை உணர்ந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். முதலில் இந்த நிலை மாறவேண்டும்.

பெண் விடுதலைப் பயணத்தின் அடுத்த நடவடிக்கைகளாகப் பெண் விடுதலைப் போராட்டங்களைக் குறிப்பிடலாம். பெண் விடுதலைப் போராட்டம் என்பது பெண்ணினத்தின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய போராட்டமே அன்றி, ஆண்களுக்கு எதிரான போராட் டம் அன்று.

பெண் சமத்துவத்தை மறுக்கும் எதிரி ஆணாதிக்கமே அன்றி, ஆண்கள் அல்ல. எனவேதான் பெண் விடுதலைப் பயணத்தின் வெற்றி ஆணாதிக்க சிந்தனைகளைக் களைவதிலேயே தங்கியுள்ளது.

பெண்களின் சமத்துவமின்மையை பெண்களில் ஒரு சாரார் புரிந்து கொள்ளாதிருப்பது போலவே, ஆண்களிலும் கணிசமானோர் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர். புரிந்து கொண்டவர்கள்கூட ஏற்கனவே தாம் அனுபவிக்கின்ற மேலாதிக்க நிலையைக் கைவிட விரும்பாதவர்களாகவே இருக்கின்றனர். இத்தனைக்கும் மத்தியிலே பெண் விடு தலையைப் பற்றிச் சிந்தித்த முன்னோடி களாக ஆண்களே இருந்திருப்பது மனம் கொள்ளத் தக்கது. எனவே தான் ஆண்களை பெண் விடுதலைச் சிந்தனையுள்ளவர்களாக மாற்றியே பெண்கள் தமது விடுதலையை எட்டமுடியும் என நவீன பெண்ணியவாதிகள் கருதுகின்றார்கள்

அரசமைப்புக்கள், மனித உரிமைச் சாசனங்கள், சட்ட வரைவுகள் என்பவற் றில் பெண் சமத்துவ அம்சங்கள் உள்ளடக்கப் படுவதுடன், அவற்றை நடை முறைப்படுத்துவதிலும் செயலூக்கம் பெறவேண்டும்.

இன்னொரு புறம் குடும்ப சமூக மட்டத்திலும் பெண் சமத்துவத்தைப் பேண முன்வர வேண்டும். பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்கள், பொருளீட்டல் மற்றும் வேலை வாய்ப்புக்கள் பெண்ணின் நிலையை உயர்த்திட உதவுகின்றன.




சந்திரகாந்தா முருகானந்தன்

பெண் விடுதலை என்பது பெண்கள் ஆண்களை நிராகரிப்பது என்ற எண்ணம் தப்பானது. முதலில் பெண் பெண்ணாக இருக்க வேண் டும்.

இந்த நிலையில் இருந்தபடியே பால் சமத்துவத்தை எட்ட வேண்டும். இதுவே உண்மையான பெண் விடுதலை ஆகும். ஆண்களுடன் சமாந்தரமாகப் பயணிக்க இதுவே உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களின் பாதுகாப்பு பெண்களிடமே!

உடுவிலூர் கலா

**அப்பாவிப் பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி அவர்களது கற்பைச் சூறையாடும்போது, ஆண்களது கற்பும் இழக்கப்படுகிறது. ஆண் ஒரு வன்முறையாளன் ஆகிறான். சமூகத்தின் துரோகி ஆகிறான். தன்னைத்தானே ஒழுக்கம் கெட்டவனாக அடையாளப் படுத்துகிறான். பலாத்காரமாக, பெண்ணின் விருப்பின்றி உடலின்பத்தைக் காணலாமா? ஆண்மையை சுட்டிக்காட்டுகின்ற வீரம், துணிவு என்பவற்றுக்கு இவை இழுக்கு அல்லவா?**

பெண்களுக்கெதிரான வன்முறைகள் இலங்கையில் பரவலாக அதிகரித்துள்ளன. பால் நிலை சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதே ஏல்லோரதும் ஏகோபித்த குரலாக ஒலிக்கின்றபோதிலும், பெண் என்பவள் தனது சுதந்திரத்தைப் பறி கொடுத்தே வாழ்கிறாள்.

பூமியில் மட்டுமல்ல, வான்பரப்பில் கூட துணிந்து நின்று சாதனை படைக்கிறாள் பெண். ஆண்களுக்குக் கட்டளையிடும் மேலதிகாரிகளாகக் கூட பல பணியிடங்களில் பணிபுரியும் பெண்களும் உள்ளனர்.

ஆனால், குடும்பம் முதல் பயணநெரிசல் வரை இன்று வன்முறைகளைப் பெண்கள் சந்திக்கின்றனர். பெண்ணின் அறிவு வளர்ச்சியானது அதீத வளர்ச்சியான போதும், அவளுக்கான வன்முறைகளும் அதீத வளர்ச்சியாகி விட்டன. நாளாந்தம் அனைத்து இடங்களிலும் உடலாலும், உள்ளத்தாலும் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர் பெண்கள். ஆனால், தனது பரிவாலும், தியாக உணர்வாலும் ஆணினத்துக்குப் பெரும் சேவையை வழங்கப் பெண்கள் மறப்பதில்லை. பார்வையில் தொடங்கி சீண்டல், உரசல், வார்த்தைப் பிரயோகம் என நீண்டு வன்புணர்வுகள்வரை சென்று படுகொலையில் முற்றுப்புள்ளியிடுகிறது ஆணினம்.

சமகாலங்களில் நிகழ்கின்ற வன்முறைகள் மிகவும் கொடூரமானவை. பெண் கடத்தலாக, தனி, கூட்டு வன்புணர்வாக, படுகொலைகளாக, காணாமற் போகும் நிலைகளாக, பல தரப்பட்ட வேதனைகளை பெண்களும் பெண்களைச் சார்ந்தவர்களும் அனுபவிக்கின்றனர்.

பெண் என்னதான் வளர்ச்சி அடைந்த போதிலும் அவளால் பாலியல் வன்முறையில் இருந்து தப்பிக்க முடிவதில்லை. திட்டமிடப்பட்ட சதியா? இல்லை பெண்ணினம் சபிக்கப்பட்ட இனமா? பெண் என்ன போகப் பொருளா? இத்தனைவன் முறைகளுக்கும் காரணம் யார்? ஆண்கள் தானே? அப்பாவிப் பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி அவர்களின் கற்பைச் சூறையாடும் போது ஆண்களாது கற்பும் இழக்கப்படுகிறது. ஆண் ஒரு வன்முறையாளன் ஆகிறான். சமூகத்தின் துரோகி ஆகிறான். தன்னைத்தானே ஒழுக்கம் கெட்டவனாக அடையாளப்படுத்துகிறான். பலாத்காரமாக, பெண்ணின் விருப்பின்றி உடலின்பத்தைக் காணலாமா? ஆண்மையை சுட்டிக்காட்டுகின்ற வீரம், துணிவு என்பவற்றுக்கு இவை இழுக்கு அல்லவா?

எதற்காகப் பெண்கள்மீது இவ்வாறு ஆண்கள் கொடுமை செய்கிறார்கள்? பெண்களால் எந்தத் தீமையும் வராத போது, மாறாக நன்மைகளே கிடைக்கும் போது எதற்காக ஈவிரக்கமற்ற செயலைச் செய்கின்றனர்? இதனால் இவர்களுக்குக் கிடைக்கும் இலாபம் தான் என்ன?

குடும்பத்தில் பெண்ணின் சக்தியை உறிஞ்சுகின்ற ஆண் அவளை மிக மோசமாகத் தாக்குகிறான். சந்தேகம் கொண்டு வார்த்தைகளால் வதை செய்கிறான். முடிவுகளை எடுக்கும் அவளது உரிமைகளைரத்துச்செய்கிறான். காலையிலிருந்து இரவு வரை மாடாக உழைக்கும் பெண்ணை மதுபோதையில் துன்புறுத்துகிறான். இன்னும் பெண் வறுமையோடு போராடுகிறாள். தான் பெற்றவர்களுக்காக தன்னிலை மறந்து பொதுநல சேவகியாக வாழ்கிறாள். திருமணத்தின் பின் உறவுகளை மறக்கிறாள். மதம் மாறுகிறாள். தனது பெயரின் முன் கணவனின் பெயரைத் தாங்குகிறாள். தனது சுய விருப்பங்களை மறக்கிறாள். எஞ்சிய உணவுக்காகக் காத்திருக்கிறாள். மொத்தத்தில் தனது வாழ்வில் கணவனை அடை யாளப் படுத்துகிறாள்.

காதல் வாழ்வில் கூட, பெற்ற தாயை எதிரியாகப் பார்க்கிறாள். காதலனின் பெயரைத் தனது பெயருடன் சேர்த்தெழுதி மகிழ்கிறாள். பல உறவுகளின் எதிர்ப்புக்களைச் சந்திக்கிறாள், பசித்திருக்கிறாள், விழித்திருக்கிறாள். காதலுக்காக உயிரையே கொடுக்கிறாள். காதலின் மேல் அதீத நம்பிக்கை வைக்கிறாள். ஆனாலும் ஆண் ஆணாகவே ஆதிக்கம் செய்கிறான். தான் ஆண் என்பதை ஆணவத்தோடு தக்க வைக்கிறான்.

இன்று எத்தனையோ பெண்கள் குடும்ப வாழ்வில் கண்ணீரோடு தான் வாழ்கின்றனர். காதலில் திளைத்த பெண்கள்கூட ஓரங்கட்டப்பட்ட நிலையில் வாழ்கிறார்கள். எந்தப் பெண்ணிடம் கண்ணீர் இல்லை. வேதனை இல்லை. ஒரு சிரிப்பின் பின்னால் ஆயிரம் வேதனைகள் ஒளிந்திருக்கும். பெண் என்றாலே வேதனை என்ற நிலை வேரூன்றி விட்டது.


எங்கு பெண்ணடிமை தலைதூக்குகிறதோ அங்கு பெண்ணுரிமைக்குரல் பலமாக ஒலிக்க வேண்டும். காதலும் சரி, கல்யாணமும் சரி, பெண் தன்னை முழுமையாக அடகு வைக்கும் நிலையை மாற்ற வேண்டும். ஒரு நாளின் மணித்தியாலங்களில் சிலவற்றைத் தனது உடல் ஆரோக்கியத்துக்காக, அறிவுவளர்ச்சிக்காக ஒதுக்க வேண்டும். காதலுக்காக கல் [illegible] வதை விட, தனக்காகத் தன்னை அடை யாளப்படுத்த வேண்டும். ஆண்களால் எப்படி வாழமுடியுமோ, பெண்களாலும் அப்படி வாழ முடியும். இதுவரை எந்தப் பெண்ணாவது ஓர் ஆணை பாலியல் வன்முறை செய்து படுகொலை செய்துள்ளாளா? இல்லவே இல்லை. அப்படியானால் ஏனிந்த கொலைவெறி? பெண்களைப் பற்றி சிந்திக்க வேண்டியது பெண்களே. ஆண்கள் அல்ல.

அழகான பெண்ணே. உன்னை நீ உணர்ந்து கொள். எங்கு நீ அடிமைப்படுத்தப்படுகிறாயோ, எங்கு உனது உரிமைகள் மறுக்கப்படுகிறதோ அங்கு நீயே உரிமைக்குரலை எழுப்பு. உனக்கான உரிமையை நீயே போராடிப் பெற்றுக் கொள். உனது விழி சொரியும் நீரைத் துடைக்க அடுத்தவர் கரங்களை எதிர் பாராதே. உன்னிரு கரங்களே துடைக்கட்டும். தாழ்வு மனப்பான்மையை உனக்குள் வளர்த்து விடாதே. மூடநம்பிக்கை என்ற போர்வைக்குள் இதமாகக் குளிர் காயாதே. ஆண்மை உனது சிறகுகளை வெட்டி வீசுமுன் சுதந்திரமாக சிறகடித்துப் பறந்துவிடு. உன்னை மட்டுமல்ல. உன்னைச் சுற்றியுள்ள பெண் மீதும் உனது பார்வையை ஓடவிடு. தீய வழியில் பயணிக்கும் பெண்ணின் பாதையைச் செப்பனிடு. எந்தப் பெண்ணுக்கும் தீங்கு செய்யவோ, நிந்திக்கவோ நினையாதே. இன்று பல பெண்களின் கண்ணீருக்கு வேறு பெண்களே காரணமாயுள்ளனர். எனவே, ஒரு பெண்ணின் காதலுக்குத் தூது போகாதே. தப்புச் செய்யும் பெண்ணைத் தட்டிக் கொடுக்காதே.

ஆக, பெண்களின் கண்ணீருக்கு முடிவு வேண்டும். பெண்களே தமது வாழ்வைச் சீராக்க வேண்டும். ஆண்களின் அராஜகத்துக்கும், அடிமைத்தனத்துக்கும் ஒத்துப் போகும் நிலையை மாற்றித் தனது சொந்தக் காலில் நின்று, தனக்கும் ஏனைய பெண்களுக்கும் பாதுகாப்பைப் பலப்படுத்தவும், பெண்ணடிமையில் இருந்து விடுபடவும் தம்மை உணர்ந்து வெளிவர வேண்டும். பெண்ணுரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும். பெண்களே நீங்கள் தயாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கில் என்றொரு தமிழ்ப் பெயர்



முன்பனிக் காலம். தாழைப் புதர்கள் அடர்ந்த கடற்கரையோரமாக, பசுமைப் பாடசாலையின் குழந்தைகள் நடந்து சென்றார்கள். கடல் ஆலாக்கள் தாழப் பறந்து கொண்டிருந்தன. ஒவ்வோர் அலையும் குழந்தைகளின் காலடிகளை ஆர்வத்தோடு முத்தமிட்டன. பிஞ்சுப் பாதங்களைத் தொட்ட மகிழ்ச்சியில் மீண்டும் கடல் திரும்பின.

டொல்பின், டொல்பின் என்று கத்தினான் கவின்.

கடலில் டொல்பின்கள் வரிசையாகத் தாவித் தாவிச் சென்றன. குழந்தைகளைக் கவனித்து விட்ட ஒரு டொல்பின், கரையை நோக்கி நெருங்கி வந்தது. சற்றுத் தொலைவிலேயே நின்று கவினை அழைத்தது.

“நீதானே என்னை டொல்பின் என்று அழைத்தாய்?”

“ஆமாம், ஆமாம்” என்று குதூகலமானான் கவின்.

“என்னுடைய தமிழ்ப் பெயர் ஓங்கில். இனி அந்தப் பெயரிலேயே என்னைக் கூப்பிடு.”

“சரி, ஓங்கில்”, மகிழ்ச்சியில் கூச்சலிட்டனர் குழந்தைகள்.

கவின் சொன்னான்: “உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும் ஓங்கில். ஒருமுறை கடலில் மூழ்கிய ஒரு குழந்தையை ஓங்கில் ஒன்று காப்பாற்றிய செய்தியைப் படித்தோம். எங்கள் மேல்தான் உங்களுக்கு எவ்வளவு அன்பு.”

“கடலில் எவர் விழுந்தாலும் நாங்கள் காப்பாற்றியிருக்கிறோம். காப்பாற்றுவது மட்டுமல்ல. அவர்களை சுறாக்கள் தாக்காதவாறு, அவற்றை விரட்டியும் விடுவோம்.”

“கடலில் எவராவது விழுந்தால், நீங்கள் எப்படித் தெரிந்துக்கொள்கிறீர்கள்?”

“அது இயற்கை எங்களுக்கு அளித்த கொடை. எங்கள் உடலிலிருந்து வெளிவரும் பயோ-சோனார் (ஒரு வகை மீயொலி) ஒலியால் ஆபத்தில் சிக்கி இருப்பவர்களைத் தெரிந்துக் கொள்கிறோம். பெண்ணின் வயிற்றில் இருக்கும் குழந்தையின் இதயத் துடிப்புகளைக்கூட எங்களால் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும். கர்ப்பாற்ற, உடனே அங்கேசென்றுவிடுவோம்.”

“எங்கள் மேல்தான் உங்களுக்கு எவ்வளவு அன்பு.”

“ஆனால், மனிதர்கள் பலருக்கு எங்கள்மேல் அன்பே இல்லை. வேட்டையாடி எங்கள் இனத்தையே அழிக்கின்றனர். என்றாலும், தமிழ் மீனவர்கள் எங்களைக் குட்டியாண்டவர் எனக் கும்பிடுகின்றனர். அந்த வகையில் எங்களுக்கு மகிழ்ச்சிதான்.”

இப்போது ஓங்கில் கூட்டத்திடமிருந்து ஒரு சீழ்க்கை ஒலி கேட்டது. “சரி, குழந்தைகளே, என்னுடைய குழுவினர் என் பெயரைச் சொல்லி அழைக்கின்றனர். நான் வரட்டுமா?”

“உனக்குப் பெயர் உண்டா ஓங்கில்?”

“மனிதர்களைப் போல் எங்களுக்கும் தனித்தனிப் பெயர்கள் உள்ளன. எங்களுக்குரிய சீழ்க்கை ஒலி மூலம் அந்தப் பெயரைச் சொல்லி அழைத்துக்கொள்வோம்.”

“ஆமாம்! இதை எங்கள் அறிவியலாளர்களும் இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நீங்கள்தான் மனிதருக்கு அடுத்து அறிவுள்ள உயிரினம் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.”

“ஓங்கில் சிரித்தது, எதையும் தாமதமாகக் கண்டுப்பிடிப்பதே உங்களுக்கு வேலை. சரி, வரட்டுமா?”

ஓங்கில் விரைந்து நீந்தித் தனது கூட்டத்தோடு இணைந்துகொண்டது. அத்தனை ஓங்கில்களும் தாவித்தாவி சென்றமை அவ்வளவு அழகாக இருந்தது.

அறிவில் வேண்டுமானால் ஓங்கில்கள் மனிதருக்கு அடுத்த நிலையில் இருக்கலாம். ஆனால், அன்பில் என்றும் அவற்றுக்கே முதலிடம்! ஏனென்றால் விபத்தொன்றில் சிக்கிய மனிதரைக் காப்பாற்ற, எல்லா மனிதர்களும் முன்வருவதில்லையே!

பாலூட்டியான ஓங்கிலுக்கு ஐந்தறிவு என்கிறார்கள். உண்மையில் ஐந்தறிவு மனிதர்களுக்கா? அல்லது அன்பான ஓங்கில்களுக்கா?



# வரலாற்றில் இன்றைய தினம்

1618 – ஜொஹானெஸ் கெப்லர், கோள்களின் இயக்கங்களுக்கான மூன்றாவது விதியைக் கண்டுபிடித்தார்.

1761 – வடக்கு லண்டனில் ஹாம்ப்ஸ்டட் நகரில் நிலநடுக்கம் பதியப்பட்டது.

1817 – நியூ யோர்க் பங்குச் சந்தை, நிறுவன மயப் படுத்தப்பட்டது.

1857– அனைத்துலக உழைக்கும் மகளிர் நாள் அறிவிப்பு.

1906 – பிலிப்பைன்ஸில் அமெரிக்கத் துருப்புக் களால் ஏறத்தாழ 600 ஏதிலிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

1911 – அனைத்துலக மகளிர் நாள் முதன் முதலாக டென்மார்க்கில் கொண்டாடப்பட்டது.

1917 – சரியான உணவு கொடுக்கவில்லை என்பதற்காக ரஷ்யாவில் நெசவுத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து கொண்டிருந்த ஆண், பெண் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அந்த வேலை நிறுத்தம் மற்ற நகரங்களுக்கும் பரவியது. அந்த நிகழ்ச்சியே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது.

1921 – ஸ்பெயின் பிரதமர் எடுவார்டோ டாட்டோ மாட்ரிட்டில் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

1942 – இரண்டாம் உலகப் போர்: ஜாவாவில் ஜப்பானியப் படைகளிடம் டச்சுப் படைகள் சரணடைந்தனர்.

1942 – இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் ரங்கூன் நகரை ஜப்பான் கைப்பற்றியது.

1950 – சோவியத் ஒன்றியம் தன்னிடம் அணு குண்டு இருப்பதாக அறிவித்தது.

1957 – எகிப்து சுயஸ் கால்வாயை மீண்டும் திறந்தது.

1965 – வியட்நாம் போர்: 3,500 அமெரிக்கப் படைகள் தென் வியட்நாமில் தரையிறங்கினர்.

# விடுகதைகள்

1. சின்னத்தம்பிக்குத் தொப்பியே வினை? அது என்ன?
2. தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை. தேசமெல்லாம் சுத்தும்?
3. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
4. காற்று வீசும் அழகான மரம். அது என்ன?
5. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்.
6. எப்போதும் காதருகில் இரகசியம் பேசிக் கொண்டிருப்பவள்?
7. உச்சியிலே கிரீடம், உடம்பெல்லாம் கண். அது என்ன?
8. எப்போதும் கிடைக்காத மதி, எல்லோரும் விரும்பும் மதி. அது என்ன?
9. இரவெல்லாம் பூக்காடு, பகலெல்லாம் வெறுங்காடு. அது என்ன?
10. உச்சிக் குடுமிக்காரன், கொள்ளிவச்சா வெடிப்பான். அது என்ன?

## விடைகள்

1. தீக்குச்சி
2. தபால் தலை
3. கடல் அலை
4. சாமரம்
5. வெங்காயம்
6. அலைபேசி
7. அன்னாசிப்பழம்
8. நிம்மதி
9. வானம்
10. பட்டாசு

# வர்ணம் தீட்டுவோம்... வாங்க....





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டுவோம்



யஶ்ருஷனா கந்தசாமி,
சுன்னாகம்.

மனிதப் பிறவியில் பெண் பழைமையானவள் எனப் போற்றப்படுகின்றாள். மக்கள் சமூகத்தில் அவளைத் தெய்வமாகப் போற்றி "ஆதி சக்தி" என அழைக்கின்றனர். இதற்குக் காரணம் அவள் தான் உயிரைச் சுமந்து உரம் ஊட்டுபவள்.

இந்த உலகம் உயிர்களின் நிலவுகைக்கும், வாழ்வதற்குரிய இடமாகவும் ஆகி எத் தனையோ யுகங்கள் ஆகியிருக்கின்றன. எனினும் இயற்கை அன்னை தனது படைப்பு வேலையைத் தொடங்கி விட்டாள். புதிய உயிரைப் படைக்கும் முயற்சியில் பெண் முதலிலும், முக்கியமாகவும் தனது வேதனையை உணர்ந்தாள். அவளுடைய குருதியிலும், உள்ளத்திலும் அது ஊறியுள்ளது.

பெண்ணானவள் ஒரு பந்தத்துக்குக் கட்டுப்பட்டதால், பிறரையும் அன்பு, நட்பு, அனுதாபம், பொறுமை எனும் அரும் பண்புகளைக் கொண்டு கட்டிப் போடுகின்றாள். அதாவது குடும்பப் பற்று இல்லா விட்டால், மனிதனே உருத் தெரியாதபடி சூரியனைக் கண்ட பனிபோல உலகை விட்டு மறைந்திருப்பான். இந்த இணைந்து வாழும் பண்பு அமையா விட்டால் எவ்வாறு நிலைக்க முடியும்? இந்த இணைப்புக்கு வழிகோலியவள் பெண்ணே.

பெண் பல்வேறு நிலைகளில் அவளது பிறப்பு முதல் இறப்புவரை புதிய புதிய அவதாரம் எடுக்கிறாள். மகள், தாரம், தாய், சகோதரி போன்ற பல்வேறு பந்தங்களால் இணைக்கப்படுகின்றாள். அதாவது பெண்ணொருத்தி, திருமணமாகி கணவன் வீட்டுக்கு வந்து புதிய சூழ்நிலையில் சில நாள் வரை வாழ்க்கையில் பல பிரச்சினைகளுக்கு இடம் ஏற்படுகின்றது. எனினும் அவள் தனது புத்தி சாதுரியத்தினாலும் பொறுமையாலும் பெண் எப்பொழுதும் சமநிலையான ஆளுமையைப் பெறு கின்றாள்.

ஒரு பெண் தனது வாழ் நாளில் பல இன்னல்களையும், சந்தோசங்களையும் பல எதிர்பாராத விடயங்களையும் நாளுக்கு நாள் சந்தித்து வருகின்றாள். எனினும் முன்னோக்கிய சிந்தனையும், புதிய புதிய எண்ணங்களும் அவளை ஒரு நிலையான இடத்தில் நிலை நிறுத்த உதவுகின்றது. ஒரு புதிய கருத்தும், சிந்தனையும் ஒரு பெண்ணை இந்த உலகை ஆளக்கூடிய வல்லமையையும் திடமான மன வல்லமையையும் பெற்றுக் கொடுக்கின்றது. பலவகைத் தடைகளையும் தனது வீரியத்தால் சாதித்து நிலை நிறுத்தி விடுவாள்.

பெண்ணின் அறிவு, பழக்கவழக்கங்கள் யாவும் பல யுகங்களாக ஓர் எல்லைக்கு உட்படத்தான் வளர்ந்து வந்திருக்கின்றன. குடும்பத்தைத் தாண்டி வெளியே சுற்றி உலக அனுபவம் பெறும் வாய்ப்புக் கிட்டவில்லை. கண்மூடிக் கொண்டு எதையும் நம்பி விடுவார்கள்.

ஆனால் இன்றைய இளம் தலைமுறையினர் "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதற்கேற்ப எந்தத் துறையிலும் உலக அனுபவமோ, காலடி வைக்காத துறைகளோ இல்லை என்பதை நாம் அறியக் கூடியதாகவும், கண் கூடாகப் பார்க்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

அந்தக் கால கட்டத்தில் பெண்கள் முன்னேற முடியாமல் பழைமையென்னும் சேற்றில் அழுந்திக் கிடந்தனர். எனினும் மடைமையிருளில் இருந்து அவர்களை வெளியேற்றப் "பாரதி கண்ட புதுமைப் பெண்கள்" உயிர் பெற்றனர். குருட்டுத் தனமாக ஆண்களை மட்டுமே நம்பி வாழ்ந்த பெண்களைத் தெருவில் தலை நிமிர்ந்து நடக்கச் செய்தனர் பாரதியின் புதுமைப்பெண்கள் பழைமையின் எல்லையை மீறிப் புதுமை காண விரும்பும் ஆர்வம் தோன்றி இருப்பது தான் இதற்குக் காரணம்.

வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்த பெண்கள் வெளிச் சூழல்களை நம்பி இருக்கப்படவில்லை. இதனால் அவர்களது இயல்பான வாழ்வு பாதிக்கப்படவில்லை. இயல்பான கால ஓட்டத்துடன் தமது காரியங்களைக் கவனித்து வந்தனர். இதனால் பெண்கள் படிக்க வேண்டும் என்று கூறிய போது பலமான எதிர்ப்புக்கள், கிளர்ச்சிகள் தலை தூக்கின.

சமூகத்தில் ஆண்களின் ஆதிக்கமே ஓங்கியிருக்க வேண்டும் என்ற கட்டுக் கோப்புடனேயே முன்னைய சமூகம் இயங்கியது. எனினும் பெண் கள் புரட்சிகளின் வடிவமாகி கல்வி, கலை, விஞ்ஞானம், வானியல், கணினி என ஆண்கள் கால் வைத்த துறைகளில் எல்லாம் தாமும் தன்னம்பிக்கையையும், துணிவையும் பரப்பினர்.

அதன் காரண மாக பெண் கள் வாழ்வில் முன்னேறி வெகு தூரம் வந்து விட் டனர். இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு தங்களை முன்னேற்றிக் கொள் கின்றனர். நெடுங்காலமாக மனித நாகரிகத்தை வளர்க்கும் பொறுப்பு ஆண்களின் கையிலே தான் இருந்து வருகின்றது.

> "பாரதி கண்ட புதுமைப் பெண்கள்" உயிர் பெற்றனர். குருட்டுத் தனமாக ஆண்களை மட்டும் நம்பி வாழ்ந்த பெண்களைத் தெருவில் தலை நிமிர்ந்து நடக்கச் செய்தனர். பாரதியின் புதுமைப் பெண்கள். பழைமையின் எல்லையை மீறிப் புதுமை காண விரும்பும் ஆர்வம் தோன்றி இருப்பது தான் இதற்குக் காரணம்.

இந்நாகரிகஉலகில் மாற்றத்தைபெண்கள் விரும் பியதால் பெண்ணுக்கு மனித நாகரி கத்தை வளர்க்கும் பொறுப்பு சரி பாதியாகவந்து விட்டது என்றே கூற முடியும். எனினும் நாகரிகம், புதுமை எனும் போக்கில் தற்காலத்தில் நெறி பிறழ்வுகள் ஏற்பட்டாலும், உலகம் இருக்கும் வரை பெண்ணினது அன்பை ஏற்றுக் கொள்ளும் பணிவு ஆண்களுக்கு அவசியமாகும்.

பகுத்தறியாமல் குருட்டுத்தனமாகப் பழைமையைப் போற்றி வரும் சமூகம் இப்போதும் இருக்கத்தான் செய்கிறது. எனினும் பெண், தான் வந்த சுவடுகளை திரும்பிப்பார்க் காமல் இறுதி இலக்கை அடைந்த பின்னர் நின்று நிதானித்துத் திரும்பிப் பார்க்கும் சுவடுகள் கூட அவளின் சுகங்களைச்சொல்லும். பெண்ண களைப் போற்றுவோம். பெண்களது வாழ்க்கை என்றும் புதிய பாதையில் செல்ல வழி வகுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் சுற்றும் எஸ் - 3 கூட்டணி



சூர்யா மற்றும் ஹரியின் கூட்டணியில் மீண்டும் சிங்கம் படத்தின் தொடராக உருவாகும் படம் "எஸ்.3". இந்தப் படத்தின் படப்பிடிப்பு விசாகப்பட்டினத்தில் தொடங்கி, சென்னை, மதுரை, காரைக்குடி ஆகிய ஊர் களில் நடந்து முடிந்துள்ளது. தற்போது, அடுத்தகட்டப் படப்பிடிப்புக்காக படக்குழுவினர் ரொமேனியா நாட்டுக்குச் செல்ல இருக்கிறார்களாம். இங்கு சூர்யா, அனுஷ்கா சம்பந்தப்பட்ட பாடல் காட்சிகளை படமாக்கவிருப்பதுடன், அடுத்த கட்டமாக ஏப்ரலில் மலேசியாவில் சண்டைக் காட்சிகள் சிலவற்றைப் படமாக்கப் போவதாகக் கூறப்படுகிறது.

மலேசியா படப்பிடிப்புக்குப் பின்னர் கோவா, சென்னை, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் இறுதிக்கட்ட படப்பிடிப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளனராம் படக்குழுவினர். "எஸ்.3" படத்தை ஒக்டோபர் மாதம் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியிட முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன், அனுஷ்கா ஆகியோர் நடித்து வருகின்றனர். ஹரிஸ் ஜெயராஜ் இசை அமைத்துள்ளார்.

# கணவனின் நம்பிக்கை




பெண்கள் மாநாடு ஒன்றில் நடுவராகக் கலந்து கொண்டவர், அங்கிருந்த பெண்களை நோக்கி, "நீங்கள் உங்கள் கணவர்மாரிடம் எப்பொழுது கடைசியாக "ஐ லவ் யூ" என்று சொன்னீர்கள் என்று கேட்டார்.

ஒரு பெண்..., 'இன்று' என்று கூறினாள்.

அடுத்த பெண் .., 'இரண்டு நாள்களுக்கு முன்னர்' என்று கூறினாள்.

ஒரு சிலர் .., ஒரு வாரம் முன்பு என்று கூறினார்கள்.

இவற்றைக் கேட்ட நடுவர் : இப்போதே "நீங்கள் அனைவரும் அவரவரின் கணவர்மாருக்கு "ஐ லவ் யூ" என்று மெசேஜ் அனுப்புங்கள், எவருக்கு வியப்பான பதில் வருகிறதோ அவர்களுக்கு ஒரு சிறந்த பரிசு காத்திருக்கிறது" என்றார்.

ஒவ்வொருவரும் தத்தமது கணவர்மாருக்கு மெசேஜ் அனுப்பத் தொடங்கினார்கள்.

மெசேஜ்க்கு வந்த பதில்கள்

நபர் 1 : அன்பே.... உனக்கு உடம்புக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லைத் தானே ?

நபர் 2 : நான் குடும்பச் செலவுக்குக் கொடுத்த பணம் தீர்ந்து விட்டதா?

நபர் 3 : என்ன பிரச்சினை உனக்கு?

நபர் 4 : நீ கனவு கண்டுட்டு இருக்கிறாயா? இல்லை நான் கனவு காண்கிறேனா?

நபர் 5 : இன்றைக்கு போன கல்யாணத்துல உனது நண்பியின் நகை ஏதாவது உனக்கு மிகவும் பிடிச்சு, வாங்க பிளான் போட்டிருக்கிறியா ?

நபர் 6 : நான் ஏற்கனவே ஓபிசிலை பல டென்சன்ல இருக்கேன், இதுல நீ வேற..

நபர் 7 : இந்த சீரியல்களைப் பார்க்காதேன்னு எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன் உன்கிட்ட?

இறுதியாக பரிசு பெற்ற பெண்ணுக்கு வந்த பதில் மெசேஜ்..

நபர் 8 : யார் இது... எனது பொண்டாட்டி மொபைல்ல இருந்து எனக்கு மெசேஜ் அனுப்பறது?

அநியாயத்துக்கு நல்லவனா இருக்கிறானே.






100 பைசா= 1 ரூபா
100 சென்ரிமீட்டர் = 1 மீட்டர்
100 சென்ட் = 1 ஏக்கர்
100 கடவுள்= 1அம்மா
100 பேய்= 1 மனைவி
1000 பிசாசு= 1 லவ்வர்
1000 உறவு = 1 நண்பன்
நண்பேன்டா...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பணவரவு அதிகரிக்கும். பணியாளர் சலுகையும், பாராட்டும் பெறுவர்.

**இடபம்:** மனதில் நற்சிந்தனை உண்டாகும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்புக் கிடைக்கும். வருமானத்தில் முன்னேற்றம் உண்டு. புத்திரரின் நற்செயல் பெருமை தரும்.

**மிதுனம்:** சொந்த விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும். சுமாரான இலாபம் கிடைக்கும். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**கடகம்:** சிலர் பொறாமை எண்ணத்துடன் அணுகுவர். தொழில், வியாபார வளர்ச்சிக்கு, மாற்றுவழியைப் பின்பற்றுவது நல்லது. பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். குடும்பத்தில் ஒற்றுமை அவசியம்.

**சிங்கம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். புதிதாகச் சொத்து வாங்க வாய்ப்பு ஏற்படும். பெண்கள் மகிழ்ச்சியுடன் இருப்பர்.

**கன்னி:** செயல்களில் சமயோசிதம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாகும். பூர்வீகச் சொத்து மூலம் ஆதாயம் கிடைக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** சங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமை அவசியம். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். பெண்கள் செலவில் சிக்கனம் கடைபிடிப்பர்.

**விருச்சிகம்:** சிலர் உங்களை ஏளனமாகப் பேசலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பெண்கள், வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடும். உணவு உண்பதில் கட்டுப்பாடு நல்லது

**தனுசு:** முக்கிய விடயத்தில் நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் உயரும். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**மகரம்:** எதிரியால் தொந்தரவுகளை எதிர்கொள்ள நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான் இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**கும்பம்:** நண்பரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். அரசியல்வாதிகளுக்குப் பதவி கிடைக்க அனுகூலம் உண்டு.

**மீனம்:** எவருக்கும் தகுதி மீறி வாக்குறுதி தரக்கூடாது. தொழில், வியாபாரத்தில் இருக்கும் குறுக்கீடுகளைச் சரி செய்ய முயல்வீர்கள் இலாபம் சுமாராக இருக்கும். தகுந்த ஓய்வு உடல்நலத்தைச் சீராக்க உதவும்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 6 | | | 8 | 5 | |
| | 1 | | | 2 | | | | |
| 8 | | 3 | | 4 | | | | |
| 7 | | | 1 | | | 2 | | |
| | 4 | | | 6 | | | 9 | |
| | | 2 | | | 5 | | | 7 |
| | | | | 5 | | 7 | | 3 |
| | | | | 1 | | | 2 | |
| | 6 | 4 | | | 9 | | | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்)

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கண்ணாடி வளையல்கள்

கண்ணாடி வளையல்கள் கற்கள் பதிக்கப்பட்டு பல வர்ண அலங்காரங்களில் கிடைக்கின்றன. கலாசார ஆடைகளுக்கு மட்டுமன்றி, நாகரிக ஆடைகளுக்கும் இவற்றை அணிய முடியும். ஒரு வளையல் 70 ரூபா தொடக்கம் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.



# நேற்றைய கடலுணவு
## விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 600 | 650 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 400 | 100 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 500 | 500 | – | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 600 | – | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 650 | – | 500 |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | 300 | 350 |
| விளை | 600 | 450 | 400 | 600 | 450 | 400 | 400 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 400 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | – | 300 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 350 | 400 | – | – | 350 | 300 | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 150 | 300 | – | 300 | 300 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 300 | 100 | 100 |
| ஒட்டி | 200 | 250 | 150 | 250 | 250 | – | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 250 | 120 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 50 | – |
| பாலை | 350 | 150 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 300 | 300 | 200 |



# கோதுமைப் பாயாசம்

## தேவையானவை:

கோதுமை ரவை – முக்கால் சுண்டு
சர்க்கரை –முக்கால் சுண்டு
பால் – 500 மில்லி லீற்றர்
முந்திரி – தேவையான அளவு
நெய் – சிறிதளவு
ஏலக்காய் – பத்து
கேசரிப் பவுடர் – சிறிதளவு
பச்சைக் கர்ப்பூரம் – சிறிதளவு

## செய்முறை:

- அடுப்பில் சட்டியை வைத்து, நெய்விட்டு நன்கு காய்ந்ததும், முந்திரியை ஒடித்து வறுத்து வைத்துக் கொள்ளவும்.
- பின்னர் கோதுமை ரவையை போட்டு பொன் நிறமாக வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
- அடுப்பில் பாத்திரத்தை வைத்து இரண்டுகோப்பை தண்ணீர் ஊற்றி கொதி வந்ததும் ரவையைக் கொட்டிக் கிளறிவிடவும்.
- ரவை நன்கு கலந்ததும் பாலை ஊற்றி இரண்டு கொதி வந்த பிறகு சர்க்கரையைப் போட்டு பதினைந்து நிமிடம் கொதிக்க விடவும்.
- பாயாசம் தண்ணீராக இருந்தால் இரண்டு தேக்கரண்டி அரிசி மாவைக் கரைத்துவிட்டு இரண்டு கொதி வந்ததும், கர்ப்பூரம் பொடித்துப் போட்டு, அதன்பின்னர் கேசரிப் பவுடரைக் கரைத்து ஊற்றவும்.
- பின்னர் ஏலக்காயை உரித்துப் பொடி செய்து போட்டு, முந்திரியைச் சேர்த்து இறக்கவும்.

நாளை
மாசி-26
புதன்கிழமை 09.03.2016
திதி: பிரதமை
பி.இ.06.13 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
மு.இ.10.38 வரை
ராகுகாலம்:
12.23-01.53 வரை
சுபநேரம்:
04.53-06.23 வரை

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 30 | 40 | 40 | 40 | 60 | 20 | 30 |
| கத்தரி | 120 | 80 | 100 | 100 | 100 | 60 | 80 | 60 |
| கரட் | 120 | 100 | 100 | 120 | 80 | 160 | 100 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 40 | 50 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 100 | 90 | 80 | 120 | 120–14 | 60 | 100 | 100 |
| பாகல் | 200 | 100 | 140 | 150 | 180–200 | 140 | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 100 | 70 | 60 | 60 | 140 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 70 | 70 | 70 | 80 | 70 | 100 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 60 | 70 | 50–80 | 80 | 100 | 70 | 60 |
| பூசணி | 70 | 40 | 50 | 40–50 | 40 | 100 | 40 | 40 |
| தக்காளி | 20 | 40 | 60 | 40 | 30 | 30 | 25 | 25 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 40 | 50 | 40 | 35 | 30 |
| கீரை | 20 | 50 | 30 | 10 | 30 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 160 | 140–160 | 140 | 140 | 200 | 130 | 150 |
| புடோல் | 50 | 80 | 40 | 60 | 60 | 40 | 20 | 50 |
| கோவா | 50 | 60 | 45 | 60 | 60 | 80 | 35 | 45 |
| வெண்டி | 80 | 100 | 50 | 60 | 100 | 80 | 65 | 80 |
| போஞ்சி | 150 | 120 | 100 | 120 | 140 | 160 | 60 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 120 | 120 | 160 | 85 | 120 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 50–60 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70 | 80 | 65 | 100 |
| தேசிக்காய் | 60 | 60 | 100 | 80 | 60 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15 | 20 | 10 | 20 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 140 | 160 | 200 | 100 | 120 |
| இராசவள்ளி | 150 | 140 | 120 | 140 | 140 | 150 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 200 | 250 | 400 | 200 | 300 | 260 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 05 | – | 02.50 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் குறிப்புகள்

- எலுமிச்சைச் சாறு சேர்க்கும் பதார்த்தங்களுக்கு பச்சை மிளகாயைச் சேர்த்தால் தான் ருசியாக இருக்கும். செத்தல் மிளகாய் ஏற்றதில்லை.
- உணவுப் பொருள்களுக்கு மஞ்சள் பொடி நல்ல நிறம் கொடுப்பதுடன், ஆரோக்கியத்துக்கும் உதவுகிறது. அது ஒரு கிருமிநாசினி.
- பாலைக் காய்ச்சாமல் எதற்கும் உபயோகிக்கக் கூடாது.
- மசாலாப் பொருள்கள் மணமாகவும், ருசியாகவும் இருப்பதால், அன்றாடம் சமையலில் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது. மசாலாப் பொருள்கள் ஜீரண நீர் சுரப்பதைப் பாதிக்கக் கூடியவை.
- எலுமிச்சைச் சாற்றைச் சூட்டுடன் இருக்கும் பதார்த்தத்தில் சேர்க்கக் கூடாது. அதனால் சாறு கசந்து போய் விடும். சூடு ஆறிய பிறகே சாறு சேர்க்க வேண்டும்.
- எண்ணெய்ப் பட்சணங்கள் தயாரிக்கும்போது, காய்ந்த எண்ணெயில் புளியைப் போட்டு அது கருகிய பின் எடுத்து எறிந்து விடவும். எண்ணெய்க் காறலை இது போக்கும்.

# சொலெக்ஸ் நீர்ப்பம்பிகள் குறித்து பாவனையாளருக்குத் தெளிவூட்டல்





நீலநிற நீர்ப்பம்பி என்னும் புகழ்மிகு சேவையை வழங்கி வரும் சொலெக்ஸ் (SOLEX ENGINEERING) நிறுவனத்தின் ஏற்பாட்டில், விவசாய உற்பத்தி மற்றும் வேறு தேவைகளுக்காக பம்பிகளை உருவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில், பாவனையாளர்களுக்கான தெளிவுட்டும் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

யாழ்.மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் விருந்தினர் விடுதியில், மு.ப 10 மணிக்கு, சொலெக்ஸ் நிறுவனப் பிரதம முகாமையாளர் முகித விஜயகுலதிலக தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில், மாவட்டப் பாவனையாளர்கள், மாணவர்கள் துறை சார்ந்தவர்கள் மற்றும் சொலெக்ஸ் நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதிகள் என்று பலரும் கலந்து கொண்டனர்.

நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட 1981ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நிறுவனம்மேற்கொண்டு வரும் செயற்பாடுகள்தெளிவுபடுத்தப்பட்டன. தொடர்ந்து,தயாரிக்கப்பட்ட பம்பிகள் தொடர்பான விளக்கமும், அவற்றின் செயற்றிறன்,பாவனை முறைகள் மற்றும் உத்தரவாதச் செயற்பாட்டு விளக்கங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

பம்பி வகைகள் தவிர்ந்த சொலெக்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் கழிவகற்றல், சுத்திகரிப்பு, பிற உபயோகப் பாவனை இயந்திரங்கள் தொடர்பிலும் விளக்கப்படம் மூலமான தெளிவூட்டல்களும், பாவனையாளர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கும் செயன்முறைச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

கலந்துரையாடலின் இறுதியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(த-ரி5)

# களனி கேபிள்ஸின் சிறந்த விற்பனை ஊக்குவிப்பு அதிகாரிகளுக்குக் கௌரவம்




களனி கேபிள்ஸ் பிஎல்சி தனது விற்பனை ஊக்குவிப்பு அதிகாரிகளைக் கௌரவிக்கும் வகையில், வருடாந்த பிரதம நிறைவேற்று அதிகாரியின் விருதுகள் வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. நிறுவனத்தின் வலிமையான விற்பனை வலையமைப்பில் அங்கம் வகிக்கும் அதிகாரிகளை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு சிலாபம் அனந்தயா ஹோட்டலில் நடைபெற்றது. இதில் களனி கேபிள்ஸ் பிஎல்சி பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மகிந்த சரணபால, சந்தைப்படுத்தல் பிரிவின் பொது முகாமையாளர் அனில் முனசிங்க, பிரதம நிதி அதிகாரி ஹேமமாலா கருணாசேகர மற்றும் சகல பிரிவுகளின் முகாமையாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் பிரதம நிறைவேற்று அதிகாரியின் விருதுகள் வழங்கும் நிகழ்வில், தர்ன கம்லத் (மேல் வலயம் 2) சிறந்த வலய விற்பனை முகாமையாளருக்கான விருதைப் பெற்றுக்கொண்டார். சிறந்த விற்பனை அபிவிருத்தி அதிகாரிக்கான விருதை மலிந்த கருணாநாயக்க பெற்றுக்கொண்டார். செயற்றிட்டங்கள் பிரிவில் சிறந்த நிறைவேற்று அதிகாரிக்கான விருதை ரொான் டி சில்வா பெற்றுக்கொண்டார்.

களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பணிப்பாளரும்,பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மகிந்த சரணபால கருத்துத்தெரிவிக்கையில்; இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின் மூலமாக களனி கேபிள்ஸின் வெற்றிகரமான செயற்பாடு உறுதி செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு பங்களிப்பு வழங்கி வரும்ஆர்வமுள்ளஊழியர்களின்செயற்பாடுகளையும் கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

இது போன்ற விருதுகள் வழங்கும் நிகழ்வுகள் மூலமாக எமது சிறந்த ஊழியர்கள் கௌரவிக்கப்படுவது மட்டுமல்லாது, ஊழியர்கள் மத்தியில் ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இதன் மூலமாக சக ஊழியர்களுக்கு வெற்றியீட்டியவர்களை பாராட்டிக் கௌரவித்து தாமும் ஊக்கத்துடன் செயலாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு ஊக்குவிக்கும்செயற்பாடாகவும்,நலன் விரும்பிகளுக்கு சிறந்த உத்வேகமாகவும் அமைந்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

சந்தைப்படுத்தல் பிரிவின் பொது முகாமையாளர் அனில் முனசிங்க கருத்துத் தெரிவிக்கையில்; களனி கேபிள்ஸ் பிஎல்சி விற்பனை செயலணி என்பது இலங்கையில் களனி கேபிள்ஸை முதல் தர பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல்கள் கேபிள்களாக நிலை நிறுத்துவதற்கு உதவியாக அமைந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் நாம் அவர்களுடன் இரு நாள்களை மகிழ்ச்சிகரமாகச் செலவிடுகிறோம், இதன் மூலம் அவர்கள் வழங்கி வரும் சிறப்பான சேவைகளுக்கு அவர்களை ஊக்குவிக்கிறோம். மேலும், அவர்களுக்கு வெளிநாட்டு சுற்றுப் பயண வாய்ப்புக்களையும் வழங்கி வருகிறோம். இந்தச் செயற்பாடுகள் அவர்களுக்கு எதிர்காலத்தில் சிறப்பாக செயலாற்று வதற்கு அவசியமான மணநிலையை வழங்கும்– என்றார்.


களனி கேபிள்ஸ் பிஎல்சியின் வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் சன்ன ஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் சகல இல்லங்களும் அறிந்த நாமமாக களனி கேபிள்ஸ் வர்த்தக நாமம் அமைந்துள்ளது. எமது தயாரிப்புக்களின் தரம் மற்றும் அதிகரித்துச் செல்லும் விற்பனை புள்ளிவிவரங்கள் மட்டுமன்றி, அர்ப்பணிப்பாக செயலாற்றும் ஊழியர்களின் வெற்றிகரமான செயற்பாடுகளும்,இதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. சகல விற்பனை பிரதிநிதிகளுக்கும் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது – என்றார்.

களனி கேபிள்ஸ் என்பது 100 வீதம் இலங்கையை சேர்ந்த நிறுவனமாகும். சுமார் 44 வருட காலமாக இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்களை உற்பத்தி செய்வதில் இந்தநிறுவனம் ஈடுபட்டுள்ளது. 2008 இல் களனி கேபிள்ஸ் பிஎல்சி சுப்பர் பிராண்ட் நிலையை எய்தியிருந்தது. குறிப்பாக நிபுணத்துவம் வாய்ந்த சிறப்பாண்மைச் செயற்பாடுகளுக்காக நிறுவனம் இந்த நிலையை எய்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2015 இல் களனி கேபிள்ஸ் பிஎல்சி,ஆசியாவின் சிறந்த தொழில் வழங்குநர் விருதைத் தனதாக்கியிருந்தது. களனி கேபிள்ஸ் இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்கள் உற்பத்தி பிரிவு, 2015 தேசிய பசுமை விருதுகள் வழங்கலில் நிலைபேறான அபிவிருத்திக்காக கௌரவிக்கப்பட்டிருந்தது. 2015 இல் நிறுவனம் சிலிம் வர்த்தக நாமச் சிறப்புகள் விருதையும் தனதாக்கியிருந்தது.

(த)

## வணிகம்

## நுட்பம்




### வட்ஸ் அப் புதிய வசதி

உலகின் முன்னணி நிறுவனமான வட்ஸ் அப் சேவை அடிக்கடி புதிய வசதிகளை அறிமுகப்படுத்தி வருகின்றது.

அந்த வரிசையில் தற்போது, வட்ஸ் அப் மூலம் ஆவணங்களை அனுப்பும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வசதியானது அண்ட்ரொய்ட் கைபேசி பதிப்பிலும், அப்பிள் கைப்பேசி பதிப்பிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே காணொலி, ஒளி, படம், தொடர்புகள் ஆகியவற்றை அனுப்ப முடியும். தற்போது கூடுதலாக பிடிஎவ் ஆவணங்களை அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

ஆவணம் எவருக்கு அனுப்பப்படுகிறதோ அந்த நபரும் அவருடைய வட்ஸ் அப்பை அப்டேட் செய்திருந்தால் மட்டுமே அதனை பெற முடியும். அதேபோல் வட்ஸ் அப்பில் நூறு புதிய எமோஜிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.



### பெண்களுக்காக தயாரிக்கப்பட்ட கைபேசி

மைக்ரோசொவ்ட் நிறுவனத்தில் பணிபுரிந்த கிறிஸ்டினா மற்றும் லிண்டா ஆகிய பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட டிரோர் என்ற நிறுவனம் தற்போது பெண்களுக்கான பிரத்தியேகமான தொடுதிரைக் கைபேசியொன்றை வடிவமைத்துள்ளது.

பெண்களுக்கு சிறிய பொக்கெட் கொண்ட உடைகளே வடிவமைக்கப்படுவதால்,அதில் பொருந்தக் கூடிய அளவுக்கு சிறிய தொடுதிரைக் கைபேசியை இந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

சேர்க்கிள் என்று அழைக்கப்படும் இந்தத் தொடுதிரைக் கைபேசி,பெண்கள் உபயோகிக்கும் கம்பேக்ட் பவுடர் போல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் எல்ஈடி விளக்குகள், டச் ஸ்கீரின், ஜி.பி.எஸ் மற்றும் என்.ஃப்.சி என்று சொல்லப்படும் எளிதில் பணம் செலுத்தும் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

செவ்வக வடிவிலான கைபேசிகள் பெண்களுக்கு கவர்ச்சிகரமாக இல்லை என்பதாலும், உளவியல் ரீதியாக பெண்களுக்கு செவ்வக வடிவத்தை விட வட்டம் தான் பிடிக்கும் என்பதாலும் இது வட்ட வடிவத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடுதிரைக் கைப்பேசியானது பெண்கள் சட்டைப்பையில் அழகாக பொருந்தும் வகையிலும் இருக்கும் என்கின்றனர் இதன் தயாரிப்பாளர்கள்.

கடந்த வருடமே, கலிபோர்னியாவில் உள்ள ஒரு நிறுவனம் வட்ட வடிவிலான ஒரு சாதனத்தை உருவாக்கியது. ஆனால்,அதில் தொடுதிரைக் கைபேசி போன்ற சேவைகள் மட்டுமே இருந்தன. அது பெண்களிடம் பெரும் வரவேற்பை பெற்ற நிலையில் இந்த வட்ட வடிவ கைபேசியும் அதிக வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முல்லையில்

போன்று மீண்டும் இராணுவத்துக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகின்றமை மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், தென்னிலங்கையில் இராணுவப் பயிற்சிப் பாடசாலைகள் உள்ள போதும், வடக்கில் இராணுவத்துக்குப் போர்ப் பயிற்சி வழங்கப்படுவதானது, அவர்களை இங்கு தொடர்ச்சியாக நிலை கொள்ள வைப்பதற்கான ஏற்பாடே என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு மற்றும் முத்தையன்கட்டுப் பகுதிகளில் உள்ள பற்றாலியன் பயிற்சிப் பாடசாலைகளில் இந்தச் சிறப்புப் போர்ப் பயிற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவுப் படைகளின் தலைமையகத்தின் கீழ் உள்ள டிவிசன்கள், பிரிகேட்டுக்கள், முன்னரங்கப் பாதுகாப்புப் பிரதேசம், மற்றும் பற்றாலியன்களில் பணியாற்றும் படையினருக்கே இந்த சிறப்புப் போர்ப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

68ஆவது டிவிசன் படையணியின் கீழ் உள்ள 7ஆவது கெமுனுவோச் படைப் பிரிவுக்கான பயிற்சி புதுக்குடியிருப்பு பற்றாலியன் பயிற்சிப் பாடசாலையில் இடம் பெறுகிறது. இங்கு 9 அதிகாரிகள் மற்றும் 352 படையினருக்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது.

கடந்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சிகள் அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

அத்துடன், 64ஆவது டிவிசனின் கீழ் உள்ள 14ஆவது சிங்க ரெஜிமென்டுக்கு, முத்தையன்கட்டு பற்றாலியன் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு 11 அதிகாரிகள் மற்றும் 222 படையினருக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன.

இந்த சிறப்புப் பயிற்சிகளின்போது, படையினருக்கு அனைத்து வகையான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

போரற்ற சூழ்நிலையிலும் படையினரைத் தயார் நிலையில் வைத்திருக்கவே இராணுவம் அவர்களுக்கான முழு அளவிலான பயிற்சிகளை மீள ஆரம்பித்துள்ளது எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற இராணுவப் பேச்சாளருடன் தொடர்பை ஏற்படுத்த முயன்றபோதும், அதற்குப் பதில் கிடைக்கவில்லை. (த-வ)

### கட்டுப்பாட்டை

சின்னாபின்னமாகிய நிலையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தக் கோர விபத்து நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் தெல்லிப்பழைச் சந்தியை அண்மித்து, யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆனைக்கோட்டை சாவற்கட்டைச் சேர்ந்தவர்களான அ.கவிராஜ் (வயது 18), செ.புவிதரன் (வயது 21) ஆகியோரே உயிரிழந்தனர். அவர்களது உடலங்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் உடற்கூற்று விசாரணைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரு இளைஞர்களும் பயணித்த மோட்டார் சைக்கிள் மிகமோசமாகச் சேதமடைந்து, முன்பக்கம் சிதைந்து காணப்பட்டது. வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகிச் சென்ற மோட்டார் சைக்கிள், மின்கம்பம் மற்றும் தூண் ஆகியவற்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகத் தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-வ-4-10)

### பாதாள

எவ்வாறானது? எவ்வளவு கால இடைவெளிக்குள் உருவாக்கப்படும் என்பது குறித்து தகவல்களை வெளியிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாதாள உலகக் கொள்ளையர்களை ஒழிக்கப் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், பாதாளக் கொள்ளையர்களை ஒழிக்க இராணுவம் எவ்வாறான நடவடிக்கையை எடுக்கவுள்ளது என வினவியபோதே இராணுவப் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுக்கப்பட்ட உத்தரவுக்கமைய பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

இந்தத் திட்டம் என்ன என்பது குறித்தோ, திட்டம் வகுக்கப்படும் கால எல்லை குறித்தோ குறிப்பிட முடியாது.

பாதுகாப்புத் தேவைக்காக இராணுவத்தினரின் உதவி பொலிஸ்மா அதிபரால் கோரப்படும்போது, அதற்கான நடவடிக்கையை முன்னெடுப்போம்-என்றார். (த-வ-சி)

### அரச

ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களே' என்று குறிப்பிட்டார்.

எனினும் பின்னர் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பி.விஜேரத்ன, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களே என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த அரச நிகழ்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அமைச்சர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (த-வ-5)

### கடற்படைக்குக்

சுவீகரிப்புக்கான அறிவித்தல்கள் நில அளவைத் திணைக்களத்தினரால், சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டு, பிரதேச செயலகங்கள் ஊடாகக் காணிகளின் உரிமையாளர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு பல்வேறு இடங்களில் பாதுகாப்புத் தரப்பினருக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருப்பினும் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக அவை கைவிடப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த நடவடிக்கைகள் ஓய்ந்திருந்தன.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காகக் காணி அளவீட்டு நடவடிக்கைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனை நிறுத்துமாறு, வலி.வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

கீரிமலை, சேந்தாங்குளம் பகுதியில் தேவாலயத்துக்குச் சொந்தமான 4 பரப்புக் காணியைக் கடற்படையினர் தமது தேவைக்கு கோரியிருந்தனர். இதற்காகக் குறித்த காணியைச் சுவீகரிப்பதற்கு கடந்த 2014 ஆம் ஆண்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அளவீட்டு நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது. மீளவும் குறித்த காணியை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை இன்றைய தினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேபோன்று சுழிபுரம் திருவடிநிலைக் கடற்கரைப் பகுதியில் 20 ஏக்கர் காணியைச் சுவீகரிப்பதற்கான நில அளவீட்டு நடவடிக்கைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-வ-5)

### காணாமற்போனோர்

நடைபெறவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள் ளும் ஜனாதிபதி ஆணைக்குழு வின் பதவிக் காலம் கடந்த பெப் ரவரி மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது. இதன் பின் னர் மூன்று மாதகால பதவி நீடிப்பை ஜனாதிபதி மைத்திரி பால வழங்கியிருந்தார்.

இதற்கமைய, யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் ஆணைக்குழு, தனது அமர்வுகளை மீளவும் நடத்தியிருந்தது. இதன் தொடர்ச்சியாக, வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் அமர்வுகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை இந்த அமர்வுகள் நடைபெறவுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் நடைபெறும் இந்த அமர்வுகளில், ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விசாரணைக்காக அழைக்கப்படவுள்ளனர். (த-வ-5)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**இந்திராணி அம்மா பாலகிருஷ்ணன்**

(கார்க்கார பாலியின் மனைவி)

தோற்றம்
24.08.1943

மறைவு
08.02.2016

கடந்த 08.02.2016 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் இந்திராணி அம்மா பாலகிருஷ்ணன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.03.2016) புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று ஊறணிக் கடற்கரையில் அஸ்தி கரைக்கப்படும். பின்னர் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சுபோதினி இல்லம்"
சிவபுர வீதி, வல்வெட்டித்துறை. (69844)(11.18) குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை குமாரசாமி



சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் தற்போது ஐக்கிய இராச்சியம் IL FORD இல் வசித்தவருமாகிய த. குமாரசாமி(இளைப்பாறிய இலங்கைப் பொலிஸ் திணைக்கள WIRLESS OPERATOR) அவர்கள் 25.02.2016 வியாழக் கிழமை ஐக்கிய இராச்சியத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திருவருள்- சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் (கல்வீட்டுத் தங்கச்சி) அன்புக் கணவரும் வாசுகி (ஆஸ்திரேலியா), சிவசுகி(UK), தர்மேந்திரா(UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இரத்தினவடிவேல் மற்றும் சிவகாமசுந்தரி, ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிரிதரன், அருள்தாசன், நித்திலா ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் துரைராஜசிங்கம், குலசிங்கம், தர்மகுலசிங்கம், பரராஜசிங்கம் மற்றும் விஜயசிங்கம், ஜெயசிங்கம், மங்கையற்கரசி, கந்தவனம், ஞானகுரு ஆகியோரின் மைத்துனரும் அபிராமி, வைஸ்ணவி, நாராயணி, கலிஷ், வாகிஷ், மானுஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2016) புதன்கிழமை UK நேரம் மு.ப.11 மணிக்கு (இலங்கை நேரம் பி.ப 4 மணிக்கு) நடைபெற்று பூதவுடல் லண்டனில் நல்லடக்கம் செய்யப்படும். அன்றைய தினம் துக்க நிகழ்வுகள் அன்னாரது இல்லத்தில் (திருமதி மங்கையற்கரசி இரத்தினவடிவேல் கல்லை வேம்படி சுழிபுரம்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகன்: தர்மேந்திரா, லண்டன்
0044 203 489 5073

தகவல்: பெறாமகன் ஜெகன்
கல்லை வேம்படி, சுழிபுரம்.
077 990 7889

(69860)(12.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கூட்டமைப்பு செயலர் யார்? எஸ்.பி., சுசிலின் பெயர்கள் பரிந்துரை

கொழும்பு, மார்ச் 8
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு சவால் விடுக்கும் வகையில் புதியதொரு அரசியல் கூட்டணியை கட்டியெழுப்புவதற்கு மகிந்த அணியினர் தீவிர முயற்சியில் இறங்கியுள்ள நிலையில், ஐ.ம.சு.முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் இன்று இரவு 8.30 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.
இதன்போது முன்னணிக்கான புதிய பொதுச்செயலாளராக யாரை நியமிப்பது என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, சுசில் பிரேமஜயந்த ஆகியோரின் பெயர்கள் இதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஐ.ம.சு.முவின் பிரதி பொதுச்செயலாளராக இருக்கும் அமைச்சர் மகிந்த அமரவீரவின் பெயரும் பரிசீலனை மட்டத்தில் இருக்கின்றது. அநுரபிரியதர்ஷன யாப்பாவுக்கு இப்பதவியை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கின்றது.
அத்துடன், அமைச்சுப் பதவி வகிக்காத ஒருவருக்கு வழங்கப்படவேண்டும் என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் 2005 ஆம் ஆண்டளவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டது. இதில் பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் கட்சி ஆகியன உத்தியோகபூர்வமாக அங்கம் வகிக்கின்றன. தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இதனுடன் கூட்டணி அமைத்திருந்தாலும் அக்கட்சியின் உறுப்பினர்கள் எவரும் நிறைவேற்றுக்குழுவில் இல்லை.
கூட்டணியின் ஆரம்பகால பொதுச்செயலாளராக சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்பட்டிருந்தார். ஆட்சி மாற்றம் ஏற்படும்வரை அப்பதவியில் அவரே இருந்தார். தான் தலைமையேற்ற பின்னர் மகிந்தவின் விசுவாசியாக இருந்த சுசில் பிரேமஜயந்தவை நீக்கிவிட்டு அவ்விடத்துக்கு பேராசிரியர் விஸ்வ வர்ணபாலவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தார்.
அண்மையில் விஸ்வ வர்ணபால சாவடைந்ததையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு ஒருவரை நியமித்துக் கொள்வதற்காகவே இன்றைய நிறைவேற்றுக்குழுக் கூட்டம் கூடவுள்ளது.
பொதுத்தேர்தலுக்குப் பின்னர் சுசில் பிரேமஜயந்த மகிந்த அணியில் இருந்து விலகி மைத்திரியுடன் கைகோர்த்ததால் அவருக்கே அப்பதவி வழங்கப்படுவதற்குரிய சாத்தியம் பிரகாசமாகத் தென்படுகின்றது எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எனினும், குமார வெல்கமவுக்கு இந்தப் பதவியை பெற்றுக்கொடுப்பதற்கு தினேஷ் குணவர்தன ஊடாக மகிந்த அணியினர் முயற்சித்து வருகின்றனர்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாப்பின் அடிப்படையில் கூட்டணியின் தலைவர், பொதுச் செயலாளர், தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கட்டாயநிலை இருக்கிறது. உப தலைவராக தினேஷ் குணவர்தன செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.
(த-சி)

# வாக்குமூலமளிக்க மறுத்தார் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய

## பிரகீத் கடத்தல் தொடர்பில்

கொழும்பு, மார்ச் 8
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சாட்சியமளிக்க மறுப்புத் தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதியும், பிரேசிலுக்கான இலங்கைத் தூதுவருமான ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய.
பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டமை தொடர்பாகச் சாட்சியமளிக்க வருமாறு குற்றப்புலனாய்வுத்துறையினர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.
வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடன், அரச செலவில், அவர் இலங்கை வந்திருப்பதாக அறிந்தே, குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இந்த அழைப்பை விடுத்திருந்தனர்.
அதற்கு ஜெனரல் ஜெயசூரிய, நான் விடுமுறையில் தான் இலங்கை வந்துள்ளேன். எனது விடுமுறை நாள்களில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் செலவிட்டு நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. எனது வாக்குமூலம் தேவையென்றால், அரச செலவில் விமானச் சீட்டு ஒன்றை அனுப்பிவையுங்கள். வழக்கத்தில் நான் முதல் வகுப்பில் அல்லது வணிக வகுப்பிலேயே பயணம் செய்வேன்.
அத்துடன் குற்றப்புலனாய்வுப் பிரிவு தலைமையகம் அருகேயுள்ள விடுதி ஒன்றில் அறை முற்பதிவு செய்யுங்கள் என்று பதிலளித்துள்ளார்.
ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இலங்கை இராணுவத் தளபதியாக இருந்த காலகட்டத்திலேயே பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு உயரதிகாரிகள் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(த-வ)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சீதேவி கட்டையன்



கைதடி மத்தி, வளர்மதி வீதியைப் பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கு கலைநகரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சீதேவி கட்டையன் 07.03.2016 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயிலன் - நாகி தம்பதியரின் பாசமிகு மருமகளும், கட்டையனின் பாசமிகு மனைவியும், தயாளன் (முதலமைச்சரின் அமைச்சு அலுவலகம்), தயாபரன் (லண்டன்), தயாநிதி (லண்டன்), தயாகரன் (முன்னாள் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை உத்தியோகத்தர் தற்போது சுவிஸ்), தயாழினி, தயானந்தன் (கமநல சேவைகள் திணைக்களம் - கைதடி), தயாநளன் (கல்வி அமைச்சு வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிறேமிளா, புவனேஸ்வரி (லண்டன்), நந்தா (லண்டன்), மஞ்சுளாராணி, பிரதீப் (இலங்கை போக்கு வரத்துச் சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியங்கா, மிதுர்னா, கோகுல், தமிழவன் (லண்டன்), அமினா (லண்டன்), சகானா(லண்டன்),அயன் (லண்டன்), கிருசாளினி,ஆகாஷ், சேயவன், நயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ் சென்ற இலட்சுமி மற்றும் சின்னப்பிள்ளை, வைரமுத்து, இராசமணி, செல்வராணி, இராஜேந்திரம் (பிரதேச வைத்திய சாலை - அனலைதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கைதடி கிழக்கு,கலைநகர். (69116) (11,17,20) குடும்பத்தினர்.

### இரத்தினம் லோகநாதன்

(முன்னைநாள் உரிமையாளர்-
காலி ஞானம் ஸ்ரோர்ஸ், ஞானம் அன்சன்ஸ்)

பிறப்பு: 09 . 09 . 1951



இறப்பு: 03 . 03 . 2016

நாரந்தனை வடக்கு, தம்பாட்டி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், லண்டன் Walthams Tow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் லோகநாதன் 03.03.2016 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - ஞானம்பாள் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - இராசாத்தியம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், ராணியின் (சத்தியபாமா - லண்டன்) அன்புக் கணவரும், நிராஜ் (லண்டன்), பிரதீப் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஷாளினியின் (லண்டன்) அன்பு மாமனாரும், றேயன் (லண்டன்), ஷயன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், ரகுநாதன் (பிரான்ஸ்), கமலநாதன் (பிரான்ஸ்), சகுந்தலாதேவி (பிரான்ஸ்), கமலகுமாரி, மாலதி (பிரான்ஸ்), கலைச்செல்வன் (பிரான்ஸ்), ரவிச்சந்திரன் (அதிபர் - யா/பெரியபுலம் ம.வி), அருட்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரகலா (பிரான்ஸ்), சந்தானலட்சுமி (பிரான்ஸ்), தியாகராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பரராசசிங்கம் மற்றும் நாதன் (பிரான்ஸ்), அனா பிறின்சி (பிரான்ஸ்), செந்தமிழ்ச்செல்வி, வசந்தமாலா (பிரான்ஸ்), சூரியகுமார் (கனடா), சந்திரகுமார், பாலகுமார் (லண்டன்), காலஞ்சென்ற மதிவதனி (பிரான்ஸ்) மற்றும் பிறேம்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனநாயகி (கனடா),ரதிமலர், ஜீவானந்தி (லண்டன்), கருணானந்தன் (பிரான்ஸ்), தயாழினி (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளும்,தகனக்கிரியையும் 10.03.2016 வியாழக்கிழமை லண்டன் Walthams Tow வில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (69113) (11,17,20)

தகவல்:
114/1, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு,யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

தொடர்பு: 077 601 6279

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா பழனித்துரை



யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் திகிரி புலோலி வடகிழக்கு பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பழனித்துரை 05.03.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - தங்கரத்தினம் தம்பதியினரின் மூத்த மகனும் கமலாசனியின் (கல்யாணி) கணவரும் ஹேமலதா, றஜிதா(ஆசிரியை வ/முஸ்லீம் மகா வித்தியாலயம்), ரஞ்சித் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் S.பிரதீபனின் (ஆசிரியர் - மஹாவத்த புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயம் கொழும்பு - 14) மாமனாரும் நிதுனாவின் தாத்தாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(09.03.2016) புதன்கிழமை காலை 8மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திகிரி, புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை. (6911) (14,17,20) மனைவி மற்றும் பிள்ளைகள்



### சிவராசா கேசவன்

(உத்தியோகத்தர் மக்கள் வங்கி பிராந்திய அலுவலகம்
- மேல் மாகாணம்)

வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா கேசவன் நேற்று (07.03.2016) காலமானார்.

அன்னார் Dr. சிவராசா (பமிலி கிளினிக் கொக்குவில்) - காலஞ்சென்ற காமினிதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், யோகராஜா (அம்பிகா ஸ்ரோர்ஸ்-கிளிநொச்சி)- ஜெயலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தினியின் பாசமிகு கணவரும், சுரபி (தரம் 9 மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), திவானி (தரம் 2 மாணவி, புனித பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் (நந்தன்)மற்றும் தர்மகிருஷ்ணன் (அம்பிகா ஸ்ரோர்ஸ்-கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முக்கட்டுமட வீதி,
கோண்டாவில் மேற்கு. (10,17) மனைவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களின்

பாதுகாப்புக் குறித்த பல பிரச்சினைக ளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்துள்ளார்.

இன்று நடைபெறும் சர்வதேச மகளிர் தினத்துக்கான வாழ்த்துச் செய்தியிலேயே இவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தொட்டிலை ஆட்டும் கரங்கள் உலகை ஆளும் என்பது பழமொழி. இலங்கை சமூ கம் அதன் வரலாறு நெடுகிலும் பெண் களின் கௌரவமான சமூக அந்தஸ்தைப் புரிந்து வைத்திருப்பதை எடுத்து நோக் கினால், கடுமையான பொருளாதார மற் றும் சமூக மாற்றத்தின் பல்வேறு யுகங்கள் கடந்துள்ள நிலையில், பெண்களின் வகி பாகம் குறித்து பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

இலங்கையில் பெண்கள் புலம்பெயர் தொழிலாளர்களாகவும், ஆடைத்தொழிற் றுறை ஊழியர்களாகவும் பெருந்தோட்டத் துறை ஊழியர்களாகவும் அந்நியச் செலா வணியை ஈட்டித்தரும் முக்கிய மூலமாக உள்ளார்கள். என்றாலும் அவர்கள் சுரண் டப்படுவது மற்றும் அவர்களது தொழில் பாதுகாப்பின்மையைக் கவனத்தில் கொள்கின்றபோது, ஒரு தேசம் என்ற வகையில் அவர்களது உழைப்புக் குறித்து நாம் மகிழ்ச்சியடைய முடியாது உள்ளது.

ஒரு சமூகம், அதன் பெண்களுக்கு வழங்கும் அங்கீகாரம், அந்தச் சமூகத் தின் அபிவிருத்தித் தரத்தின் அளவு கோலாகக் கருதப்படுகின்றது. பாது காப்பான தொழில்களைப் பெற்றுக் கொள்ள உதவுவதன் மூலமும் சமூக தலைமைத்துவ அந்தஸ்துக்களை அவர்கள் அடைந்து கொள்வதற்குத் தடையாக உள்ள சட்ட மற்றும் சமூகத் தடைகளை அகற்றி ஓர் அபிவிருத்தி யடைந்த கல்வி மற்றும் தொழிற்றி றன்களை அவர்களுக்கு வழங்குவத னூடாக மட்டும் பெண்களை வலுவூட்ட முடியும்.

இந்த விடயத்தில் அரசின் முழுமையான அர்ப்பணத்தை வெளிப்படுத்தும் வகை யில் நாடாளுமன்றத்திலும் ஏனைய அரசியல் கட்டமைப்புக்களிலும் பெண் களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வ தற்கு அண்மையில் நாடாளுமன்றத்தில் ஒரு சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டங்களினூடாக கைக்கொள்ளப்படு கின்ற உரிமைகள் சமூகத்தில் ஏற்படுத் தப்பட்டிருப்பதை உறுதி செய்வதற்கான ஒரு விரிந்த சமூக உரையாடலை தொடர் வதற்கு இன்றைய தினம் ஒரு சிறந்த தளமாகும்.

வலுவூட்டப்பட்ட பெண்கள் - நிலையான எதிர்காலம் என்ற இந்த வருட கருப்பொரு ளினூடாக சமூகத்துக்கு வழங்கப்படும் செய்தி, நிலையான அபிவிருத்திக்கு பெண்களை வலுவூட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது -என் றுள்ளது. (த-வ-ரி)

## புலனாய்வுத்துறை

இதேவேளை, பிரதேசத்தில் இடம்பெறும் கொலைகள், கொள்ளைகள் போன்ற குற் றச் செயல்களுக்கான பொறுப்பை அந் தந்தப் பிரதேச உயர் பொலிஸ் அதிகாரி கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-வ-5)

## அரசியல்

தலைவரும் எதிர்க்கட்சித் தலை வருமான இரா.சம்பந்தன் கொண்டுவரவுள்ளார்.

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலை மையில் கூடவுள்ளது. சபாநாயகர் அறி விப்பு, பொதுமனுத்தாக்கல் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, பிர தமரின் விசேட உரை ஆகியன முடிவடைந்த பின் னர், ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீது விவாதம் நடத்தப்படும். அதன்பின்னர் சபை ஒத்திவைக்கப்படும். அவ்வேளையி லேயே, கூட்டமைப் பின் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள் ளப்படும்.

அத்துடன், புதிய அரசமைப் பொன்றை உரு வாக்குவதற்காக நாடாளுமன் றத்தை அரசமைப் புப் பேரவையாக நியமிப்பதற்குரிய தீர்மானம் மீது நாளை புதன் கிழமை வாக்கெ டுப்பு நடத்தப்பட வுள்ளது. (த-வ-சி)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
05. 12.1940

மறைவு
07.02.2016

அமரர்
**சங்கரப்பிள்ளை கந்தசாமி**

கடந்த 07.02.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 10.03.2016 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.
(08099)(12,17,18)
குடும்பத்தினர்.

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி
Spoken English
Fluency Diploma
10% Discount
விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
முதல் இணையும் 20 மாணவர்கள் 10% கட்டணக்கழிவுடன் இணையலாம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Sat, Sun 1.30 p.m. Sat, Sun 3.30 p.m. Mon, Fri 3.30 p.m. | Sat, Sun 2.30 p.m. Mon, Fri 8.30 a.m. | Tue, Thu 7.00 a.m Tue, Thu 11.00 a.m. | Mon, Wed, Fri 2.30 p.m. | Sat, Sun 7.00 a.m Sat, Sun 11.00 a.m. |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
DMI COMPUTER EDUCATION
IELTS
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்
DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சுவர்ண ஹோட்டல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |

## மரண அறிவித்தல்



தோற்றம்
08 . 11 . 1924

மறைவு
05 . 03 . 2016

**நாகலிங்கம் நடராஜா**

(ஓய்வு பெற்ற அதிபர், சிவகுருநாத வித்தியாசாலை-கரம்பொன்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம் யாழ்ப்பாணம் ரொறன்டோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நடராஜா 05.03.2016 சனிக்கிழமை யன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கண்ணமாவின்(பவானி ஆசிரியை) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம்-ராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், Dr.விக்கினேஸ்வரன்(U.S.A), Dr.சிவனேஸ்வரன்(U.S.A), Dr.ஜெயகௌரி (கனடா), Dr.ஜெயதயாபரன்(கனடா), கதிர்காமநாதன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம்மா, ஆறுமுகம், சவுந்திரநாயகி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும்,சித்திராங்கி, Dr.சரோஜாதேவி, காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் தயாபரன், சுபாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, வேந்தனார், நளாயினி, லக்ஸ்மி, மகேஸ்வரி, சாரதாம்பாள் மற்றும் மனோன்மணி( மலேசியா), புனிதவதி(கனடா), பரமலிங்கம்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr.கிருஸ்சாந்தன், லக்ஸ்மன், சாய்சுரவி, ஆரவி, அர்ச்சுன், அஸ்வினி, அஞ்சலி, சிவன், கவின், Dr.வினித்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09.03.2016 புதன்கிழமை காலை 8.30-10.30 OGDEN FUNERAL HOMES, 4164 SHEPPARD AVE E, SEARBOROUGH, ON MIS IT3, CANADA அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11.30 மணியளவில்St JOHN'S NORWAY CEMETERY & CREMATORIUM, 256, KINGSTION ROAD, TORONTO, ON M4L 1S7 CANADA தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Dr.விக்கினேஸ்வரன +18325737184
Dr.சிவனேஸ்வரன +12403867325
Dr.ஜெயகௌரி +19055340449 +14165667046
Dr.ஜெயதயாபரன் +19055342222
N.கதிர்காமநாதன் +19052231379, +16472727937

## மரண அறிவித்தல்



அன்னை மடியில்
07 . 07 . 1946

ஆண்டவன் அடியில்
06 . 03 . 2016

**டாக்டர் ஆறுமுகம் குலேந்திரசிங்கம்**

(இளைப்பாறிய RMO கிரிபோருவ ஆஸ்பத்திரி எட்டியாந்தோட்ட, சிங்கம் கிளினிக் மல்லாகம், உடுவில்)

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr. ஆறுமுகம் குலேந்திரசிங்கம் 06.03.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் ஆறுமுகம் மற்றும் தெய்வானைப்பிள்ளையின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா-செல்வநாயகி தம்பதியரின் மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், Dr. ராஜசிங்கம்,(ராஜன், சிங்கம், குமரன்-TVER Medical University Russia) பத்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திர சிங்கம் (UK), கேந்திரராணி (ஆஸ்திரேலியா), வரதராஜசிங்கம் (UK) காலஞ்சென்ற கோபாலசிங்கம் (USA) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாந்தினி, கருணாகரன், சுமித்திரா காலஞ்சென்ற பரமேஸ்வரன், நீலறாச்சி ஆகியோரின் மைத்துனரும், சாமினி, கவிதா, கபிலன் ஆகியோரின் பெரியப்பாவும் தேனுஜா, அருவின் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
(AG Office பின்) உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
(69117)(10,17)

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 0772096386
0772564605

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனானது நியூவொரியஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 8

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் மல்லாகம் நியூ வொரியஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மல்லாகம் நியூவொரியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மின்னொளியில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மல்லாகம் நியூவொரியஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஏழாலை கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 5 செற்கள்ளக் கொண்ட இறுதியாட்டத்தில் மல்லாகம் நியூவொரி யஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.(ம-23)

# சிறிபாரதியிடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் சங்கானை சிறி பாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது.

வட்டுக்கோட்டை இளைய நட்சத்திர விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சங்கானை சீறி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் சங்கானை சிறி பாரதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

**யாழ். துடுப்பாட்டச் சங்கத்தின் தொடர்**

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச்சங்கம் நடத்திய 2015ஆம் ஆண்டுக்கான 13 வயதுப்பிரிவு ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி மோதவுள்ளது.

**கரைதுறைப்பற்று பிரதேச கால் பந்தாட்டம்**

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இன்றும்-நாளையும் இடம்பெறவுள்ளன. இன்று பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் சென்.யூட் அணியை எதிர்த்து செந்தமிழ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் உதயசூரின் அணியை எதிர்த்து உதயம் அணி மோதவுள்ளது. நாளை பி.ப. 2மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் சந்திரன் அணியை எதிர்த்து வட்டுவாகல் உதயசூரின் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் வெண்மலர் அணியை எதிர்த்து இளம் பறவை அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து சக்தி அணி மோதவுள்ளது.

**வைகறை வி.கழகத்தொடர்**

புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் இன்று செவ் வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தையிட்டி வள்ளுவர் அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி அணி மோதவுள்ளது. (ம-423-23)



# ஐக்கியத்தை வீழ்த்தியது பொம்மர்ஸ் அணி எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத்தில்

கரணவாய் மார்ச் 8

எவ்.ஏ. கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி பெரும் வெற்றி பெற்றது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம்.

இலங்கை கால்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ். லீக்கைச் சேர்ந்த அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் வதிரி பொம்மர்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டமொன்று நேற்றுமுன்தினம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. ஆட்டத்துடன் இணைந்த முறையில் பொம்மர்ஸின் ஆதிக்கமும் ஆரம்பமாகியது. மூன்றாவது நிமிடத்தில் ஒன்கோல் மூலம் பொம்மர்ஸ் அணியின் சார்பாக முதல் கோல் பதிவானது. முயற்சி இல்லாமலே முதல் கோல் பதிவானதை மேலும் சாதகமாக்கிக்கொண்ட பொம்மர்ஸ் அணி சிறப்பான தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அந்த அணியின் வீரர்களான அனுசாந், நிதுசன் மற்றும் சாரங்கன் மூவரும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 4:0 என்று முன்னிலை வகித்தது பொம்மர்ஸ்.

பெரிதான மாற்றம் ஏதும் ஏற்படாமல் நகர்ந்து கொண்டிருந்தது இரண்டாம் பாதி. பிற்பாதியின் 40 ஆவது நிமிடத்தில் தர்சனன் ஐக்கிய அணியின் சார்பாக முதல் கோலைப் பதிவு செய்து ஆறுதலளித்தார். மறுநிமிடம் பொம்மர்ஸ் அணியின் சாரங்கன் மேலும் ஒரு கோலை முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது வதிரி பொம்மர்ஸ் அணி.

(ம-108)

# மருதம், சென்.ஜோசப் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 8

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்றெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மருதம், சென்.ஜோசப் அணிகள் வெற்றிபெற்றன.

ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக்கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஈச்சிலம்வத்தை மருதம் அணியை எதிர்த்து லெவின்கொயின்ஸ் அணி மோதிக்கொண்டது. இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. சமநிலைத்தவிர்ப்பில் மருதம் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் காத்தங்குளம் சென். ஜோசப் அணியை எதிர்த்து பெரியகடை ஸ்ரார் ஈக்கிள்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் காத்தங்குளம் சென். ஜோசப் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# சம்பியனானது வீனஸ் வி.கழகம்



கரணவாய், மார்ச் 8

பருத்தித்துறை பிரதேச செயலக துடுப்பாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகம் 6 ஓட்டங்களால் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து இவ்வருட பிரதேச சம்பியனாகியது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில்வீனஸ்,சென்.தோமஸ் அணிகள் நேற்றுமுன்தினம் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பருத்தித்துறை வீனஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக விவேக் 19 ஓட்டங்களையும் சாரு 12 ஓட்டங்களையும் கிருபரன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிரோஜன் 3 இலக்குகளையும் ஜோன்சன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

79 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்று வெறும் 6 ஓட்டங்களால் கிண்ணத்தைத் தவறவிட்டது. அதிகபட்சமாக டிசோக் ஆட்டமிழக்காமல் 22ஓட்டங்களையும் டிலக்சன் 16 ஓட்டங்களையும் சிரோஜன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அஜித் 3 இலக்குகளையும் சதுர்சன் 2 இலக்குகளையும் கைப்பற்றினார். (ம-108)

# உடுவில் பிரதேச செயலக தாச்சித் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சிவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மல்வம் ஞானப்பிரகாசர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மல்வம் ஞானப்பிரகாசர் விளையாட்டுக்கழக அணி 8:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அறிஞர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி 9:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து 'ஏ' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துஏழாலைகண்ணகிவிளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில்உடுவில்ஆலடிசிந்து 'ஏ' விளையாட்டுக்கழக அணி 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து 'பி' விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடிசிந்து 'பி' விளையாட்டுக்கழக அணி 8:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

பிறிதொரு ஆட்டத்தில் உடுவில் தமிழ் ஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாவடிகாளி அம்பாள் 'பி' விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் தாவடிகாளி அம்பாள் 'பி' விளையாட்டுக்கழக அணி 9:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இன்னொரு ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடிகாளி அம்பாள் 'ஏ' விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் தாவடிகாளி அம்பாள் 'ஏ' விளையாட்டுக்கழக 9:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கல்வி வலய கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 8
வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்றும்–நாளையும் இடம்பெறவுள்ளன. இன்று செவ்வாய்க் கிழமை ஆண்களுக்கான தொடரும், நாளை புதன் கிழமை பெண்களுக்கான தொடரும் நடைபெறவுள்ளன. ஆட்டங்கள் அனைத்தும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-23)

# சுழிபுரம் விக்ரோறியா பெரும் ஆதிக்கம் சங்கானைக் கோட்ட கரப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 8
சங்கானைக் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 17, 19 வயதுப்பிரிவுகளில் விக்ரோறியாக் கல்லூரி அணிகள் கிண்ணங்களைக் கைப்பற்றின.



விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் 19 வயதினருக்கான ஆட்டத்தில் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அணி பலப்பரீட்சை நடத்தியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த இறுதி ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றது விக்ரோறியாக் கல்லூரி அணி. 17 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து பண்ணாகம் மெய் கண்டான் மகா வித்தியாலய அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்திலும் 2:0 என்ற நேர் செற் கணக்கில் விக்ரோறியாக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது. 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து சங்கானை சிவப்பிரகாச அணி மோதியது. இதில் சிவப்பிரகாச அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-21)

## யங்ஸ்ராருக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 8
சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் அணி வெற்றிபெற்றுள்ளது.
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த சனிக் கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் நியூபைட் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் 'ஏ' அணி மோதிக்கொண்டது. இதில் யங்ஸ்ரார் 'ஏ' அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை பிரதேச சம்பியனானது

கரணவாய், மார்ச் 8
பருத்தித்துறை பிரதேச செயலக துடுப்பாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் 4 இலக்குகள் வித்தியாசத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து நடப்பு வருடத்தின் பிரதேச சம்பியனாகியது.
பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பொலிகை பாரதி அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 20 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கோபிகா மற்றும் அனுசியா இருவரும் ஐந்து ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சென்.தோமஸ் அணி சார்பாக நிரூபா 2 இலக்குகளையும், நிதர்சினி, றோகினி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
21 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம் இரண்டு பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக சுலக்சனா ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் சிவரஞ்சினி 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அனுசியா ஓர் இலக்கைக் கைப்பற்றினார். (ம-108)

## நிர்வாகத் தெரிவு

கரணவாய், மார்ச் 8
பருத்தித்துறை கால்பந்தாட்ட நடுவர் சங்கத் தலைவராக யாழ். மாவட்ட கால்பந்தாட்டப் பயிற்றுநர் பா.முகுந்தன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
பருத்தித்துறை கால்பந்தாட்ட நடுவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. சங்கத்தலைவர் பா.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்தக்கூட்டத்தில் முகுந்தன் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக இ.மெய்யழகனும் உபதலைவராக ம.சதீஸ்கரனும் உப செயலாளராக சி.ஜெகப்பிரதாபனும் பொருளாளராக சி.நாகராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்
நிர்வாகசபை உறுப்பினர்களான எஸ்.கமல், ச.கருணானந்தன், க.கதிர்காமராஜ், ந.நவனேசன், எஸ்.நிதர்சன் மற்றும் ஆர்.ரவீந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-108)

# சைவத்தமிழ் வித்தி., பண்டத்தரிப்பு பெண்கள் அணிகள் கிண்ணங்களைக் கைப்பற்றின வலிகாம பூப்பந்தாட்டத்தில்





யாழ்ப்பாணம், மார்ச் 8
வலிகாமம்கல்விவலயப்பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுப் பிரிவில் மயிலணி சைவத்தமிழ் வித்தியாலய அணியும், 19 வயதுப் பிரிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் சம்பியன் கிண்ணங்களைச் சுவீகரித்துள்ளன.
மானிப்பாய் இந்துக்கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன. 15வயதினருக்கான இறுதியாட்டத்தில் மயிலணி சைவத்தமிழ் வித்தியாலயத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. ஒற்றையர் ஆட்டத்தில் இரு அணிகளும் சம புள்ளிகள் பெற்றமையால் இரட்டையர் ஆட்டத்தில் கிண்ணம் தீர்மானமாகும் நிலை ஏற்பட்டது. இரட்டையர் ஆட்டத்தில் மயிலணி சைவத்தமிழ் வித்தியாலய அணி வெற்றிபெற்றதையடுத்து அந்த அணி சம்பியனாகியது. 3ஆம் இடத்தை உடுவில் மானஸ் மகா வித்தியாலய அணி பெற்றது.
19வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. இதில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி ஒற்றையர் ஆட்டத்தில் இரு செற்றிலும் வெற்றி பெற்று இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் சம்பியனாகியது. 3ஆம் இடத்தை மயிலணி சைவத்தமிழ் வித்தியாலயம் பெற்றது. (ம-422)

## சம்பியனானது ஐக்கியம்

யாழ்ப்பாணம், மார்ச் 8
நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சம்பியனானது.
அரியாலையில் கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி ஒலிம்பிக் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச்சம்பியனானது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்காவின் உதவியை நாடிய இலங்கைக் கிரிக்கெட் சபை



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி சிறப்பாக செயல்படுவதற்காக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை குமார் சங்கக்காரவின் உதவியை நாடியுள்ளது.

ஆசியக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் செயற்பாடு மோசமாக இருந்தது. பங்களாதேஷிடம் தோற்ற இலங்கை இறுதி ஆட்டத்துக்கான வாய்ப்பை தவற விட்டதுடன், தனது கடைசி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணிக்கு எதிராகவும் தோற்றது. மொத்தத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தை மட்டுமே இலங்கையால் வீழ்த்த முடிந்தது. இதனையடுத்து ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியை மறு மதிப்பீடு செய்யும் முயற்சியில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை களமிறங்கியுள்ளது. இதற்காக முன்னாள் தலைவர் குமார் சங்கக்காரவின் உதவியை நாடியுள்ளது. (ம)

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் லோட்டன் றோட்டில் அமைந்த கிணற்றுடன் கூடிய 2 1/2 பரப்புக்காணி விற்னைக்குண்டு.

தொடர்புக்கு:0778448741

## தலைமைத்துவத்தில் இருந்து! மலிங்க விலகல்? உலகக்கிண்ணத்தில் விளையாடுவதும் சந்தேகம்



இலங்கை ரி-20 அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து மலிங்க விலகத்திட்டமிட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருக்குப் பதிலாக, தற்போதைய டெஸ்ட், ஒருநாள் ஆட்டங்களின் தலைவரான அஞ்சலோ மத்தியூஸ், புதிய தலைவராக நியமிக்கப்படுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

2014ஆம் ஆண்டு செப்டெம்பர் 7ஆம் திகதியிலிருந்து இவ்வாண்டு ஜனவரி 10ஆம் திகதி வரை 16 மாதங்களுக்கும் மேலாக ரி-20 தரவரிசையில் இலங்கை அணி முதலிடத்தில் இருந்து வந்தது. இந்தியாவுக்கெதிரான தொடரில் தோல்வி, ஆசியக் கிண்ணத் தொடரில் மோசமான பெறுபேறுகள் போன்ற காரணத்தால், தற்போது 7ஆவது இடத்தில் தரப்படுத்தப் பட்டுள்ளது.

உபாதைகள் காரணமாக அண்மைக் காலமாக அவதிப்பட்டுவரும் மலிங்க, ஆசியக் கிண்ணத் தொடரில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான ஆட்டத்தில் பங்குபற்றிய போதிலும், அடுத்த 3 ஆட்டங்களிலும் அவர் பங்குபற்றியிருக்கவில்லை. கடந்த பல மாதங்களாக மலிங்க காயமடைந்திருந்தார். இடது முழங்காலில் காயம் ஏற்பட்டதால் அவர் பூரண உடற் தகுதியை எட்டுவதற்கு மிகவும் சிரமப்பட்டார். இந்நிலையில் தற்பொழுது அவருக்கு வலது முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. அவர் மீண்டும் உடற்தகுதியை எட்ட இன்னும் சில வாரங்கள் ஆகலாம். இதனாலேயே இலங்கையின் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தி அணியின் ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்ப, தலை மைப் பொறுப்பை மத்தியூஸிடம் ஒப்படைக் கப்படவுள்ளதாக அறியவருகிறது. இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பு, எந்த நேரத்திலும் வெளி வரலாம் எனக் கருதப்படுகிறது. (ம-ரி4)

## ரி-20 உலகக்கிண்ணத்துக்கான தகுதிகாண் ஆட்டங்கள் இன்று

T20 ICC WORLD TWENTY20 INDIA 2016

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றுள்ள நிலையில் பங்களாதேஷ், சிம்பாப்வே, கொங் கொங், ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து, ஓமன், நெதர்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகள் தகுதிச் சுற்றில் மோதுகின்றன. இன்று நடைபெறும் ஆட்டங்கள் நாக்பூர் மைதானத்தில் நடைபெறவுள்ளன. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொங் கொங் அணியை எதிர்த்து சிம்பாப்வேயும், இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானை எதிர்த்து ஸ்கொட்லாந்தும் மோதவுள்ளன. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.